மலர் : 51 இதழ் : 12

தமிழரசு

ஜூன் 2020
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு



// # தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் : வைகாசி – ஆனி
ஜூன் 2020
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 12

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர்** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
முனைவர் **இரா. பாஸ்கரன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
மு.அ. ரோசன் குர்சிதா பேகம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

விவசாயத்திற்கான கடன் உதவியை வங்கிகள் உடனுக்குடன் வழங்கி, விவசாயிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

★ **தமிழ்நாட்டில் ரூ.15,128 கோடி முதலீட்டில் புதிய தொழில் தொடங்கிட 17 தொழில் நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம்**
(தொழில் துறை சார்பில், 27.05.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் முன்னிலையில் 17 தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.) 4

★ **உள்ளூர் வெட்டுக்கிளிகளைக் கண்டு, பாலைவன வெட்டுக்கிளிகள் என அச்சப்பட வேண்டாம்**
(பாலைவன வெட்டுக்கிளிகளைத் தடுப்பது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டம் தொடர்பான அறிக்கை – 30.05.2020) 26

★ **செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களின் நினைவுத் தூண்**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.) 40

★ **தொழில் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.235 கோடி மதிப்பீட்டில் டைடல் தொழில்நுட்பப் பூங்கா**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக்காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.) 67

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.06.2020 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் நடைபெற்ற விழாவில், வேளாண் பெருமக்களின் நலன் கருதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்து, மலர் தூவினார்கள்.

தமிழ்நாட்டில் ரூ.15,128 கோடி முதலீட்டில் புதிய தொழில் தொடங்கிட 17 தொழில் நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தொழில் துறை சார்பில், 27.05.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் முன்னிலையில் 17 தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் 27.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் ஜெர்மனி, பின்லாந்து, தைவான், பிரான்ஸ், தென்கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சார்ந்த 17 தொழில் நிறுவனங்கள் தங்கள் புதிய தொழில் முதலீட்டு திட்டங்களை தமிழ்நாட்டில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இத்திட்டங்கள் மூலம், 15,128 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 47,150 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்.

உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா நோய் தொற்றின் காரணமாக, உலக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டு, படிப்படியாக மீண்டெழுந்து வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்தவும், தொழில் துறையில் தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழச் செய்யவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு அரசின் தொழில் துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

புதிய முதலீடுகளை ஈர்க்க தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு அமைத்தது, பொருளாதார மீட்பு நடவடிக்கைகளை பரிந்துரைக்க டாக்டர். சி. ரங்கராஜன் குழு, கொரோனா நோய் தடுப்புக்கான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உற்பத்தியை தமிழ்நாட்டில் ஊக்குவிக்க அளிக்கப்பட்ட சிறப்பு சலுகைகளின் விளைவாக, பல்வேறு நிறுவனங்கள் கடந்த இரு மாதங்களில் மட்டும் புதிதாக இப்பொருட்களை உற்பத்தி செய்யத் துவங்கியுள்ளது, 799 குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக 102 கோடி ரூபாய் செயல்பாட்டு மூலதனக் கடன் வழங்கியது என, இக்கட்டான இக்காலகட்டத்திலும்

பல முக்கிய நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்திட ஏற்படுத்தப்பட்ட நாடுகளுக்கான சிறப்பு இருக்கைகள், தொழில் நிறுவனங்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்க “தொழில் நண்பன்” திட்டம், அனுமதிகளை உடனுக்குடன் வழங்க ஒற்றைச் சாளர முறை, முதலீடு எளிதாக்குதல் பிரிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர்நிலைக் குழு என பல்வேறு திட்டங்கள் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, செயல்படுத்திய பல திட்டங்களின் விளைவாகவும், தமிழ்நாட்டில் நிலவும் சிறப்பான தொழில் சூழலின் விளைவாகவும் தொடர்ந்து பல புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கனரக வாகன உற்பத்தி, மின்னணு பொருட்கள் உற்பத்தி, காலணி உற்பத்தி, தகவல் தரவு மையம், எரிசக்தி, மருந்து பொருட்கள் உற்பத்தி என பல்வேறு துறைகளைச் சார்ந்த 17 புதிய தொழில் திட்டங்களை தமிழ்நாட்டில் துவங்குவதற்கான கீழ்க்காணும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 27.05.2020 அன்று கையெழுத்திடப்பட்டன.

❖ காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில், ரூ.2,277 கோடி முதலீட்டில், சுமார் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த Daimler India Commercial Vehicles நிறுவனத்தின், கனரக வாகனங்கள் உற்பத்தி விரிவாக்கத் திட்டம்;

❖ காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள நோக்கியா தொலைத்தொடர்பு சிறப்பு பொருளாதார மண்டலத்தில், 1,300 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பின்லாந்து நாட்டினை சேர்ந்த சால்காம்ப் நிறுவனத்தின், கைப்பேசி உதிரி பாகங்கள் தயாரிப்பு விரிவாக்கத் திட்டம்; உலக முதலீட்டாளர்கள் மாநாடு – 2019இல் சால்காம்ப் நிறுவனம் ரூ.500 கோடி முதலீடு செய்திட ஏற்கெனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்டிருந்த நிலையில், தமிழ்நாட்டில் நிலவும் சிறப்பான தொழில் சூழலால் ஒரே ஆண்டில் மீண்டும் ஒரு விரிவாக்க திட்டத்திற்கு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படுகிறது. ஸ்ரீபெரும்புதூரில் உள்ள நோக்கியா சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு புத்துயிர் அளித்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொழில் துறை மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் பலனாக இந்த புதிய முதலீடு வரப்பெற்றுள்ளது.

❖ காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில், 900 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த Polymatech Electronics நிறுவனத்தின், Semiconductor Chips உற்பத்தி திட்டம்;

❖ 350 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 25,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தைவான் நாட்டைச் சேர்ந்த Chung Jye Company Limited நிறுவனம் மற்றும் Aston Shoes Pvt Ltd நிறுவனத்தின் கூட்டு முயற்சியில், காலணிகள் உற்பத்தி திட்டம்;

❖ காஞ்சிபுரம் மாவட்டம், மப்பேடு பகுதியில் 400 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 5,800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த Lai Investment Manager Private Limited (Logos) நிறுவனத்தின், தொழிற்பூங்கா திட்டம்;

❖ காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில், 150 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தென் கொரியா நாட்டைச் சேர்ந்த Mando Automotive India Private Limited நிறுவனத்தின் Casting facility திட்டம்;

❖ செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மஹிந்திரா தொழிற்பூங்காவில், 100 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த Dinex நிறுவனத்தின், வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டம்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள நோக்கியா தொலைத்தொடர்பு சிறப்பு பொருளாதார மண்டலத்தில், 1,300 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பின்லாந்து நாட்டினை சேர்ந்த சால்காம்ப் நிறுவனத்தின், கைப்பேசி உதிரி பாகங்கள் தயாரிப்பு விரிவாக்கத் திட்டம்; உலக முதலீட்டாளர்கள் மாநாடு – 2019இல் சால்காம்ப் நிறுவனம் ரூ.500 கோடி முதலீடு செய்திட ஏற்கெனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்டிருந்த நிலையில், தமிழ்நாட்டில் நிலவும் சிறப்பான தொழில் சூழலால் ஒரே ஆண்டில் மீண்டும் ஒரு விரிவாக்க திட்டத்திற்கு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படுகிறது.

- திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் 3,000 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், இந்திய–இங்கிலாந்து கூட்டு முயற்சியான Chennai Power Generation Limited நிறுவனத்தின், இயற்கை எரிவாயு மூலம் 750 மெகாவாட் மின் உற்பத்தி திட்டம்;
- திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சிப்காட் செய்யாறு தொழிற்பூங்காவில், 18 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 30 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த IGL India Transplantation Solutions Pvt Ltd நிறுவனத்தின் உறுப்புகள் பதப்படுத்தும் இரசாயன உற்பத்தி திட்டம்;
- தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், 2,000 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த Vivid Solaire Energy Private Limited நிறுவனத்தின் காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம்;
- சென்னை, அம்பத்தூரில், 2,800 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த HDCI Data Centre Holdings Chennai LLP நிறுவனத்தின், தகவல் தரவு மையம் திட்டம்;
- சென்னையில், 1,500 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த ST Tele Media நிறுவனத்தின், தகவல் தரவு மைய திட்டம்;
- சென்னையில் 210 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 320 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த Baettr நிறுவனத்தின், காற்றாலை உதிரி பாகங்கள் உற்பத்தி (Wind mill components) திட்டம்;
- காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் ஸ்ரீபெரும்புதூர் தொழிற்பூங்காவில், 50 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 130 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சீன நாட்டைச் சேர்ந்த BYD India Private Limited நிறுவனத்தின் மின்சார வாகன உற்பத்தி திட்டம்;
- திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள Mahindra Origins தொழிற்பூங்காவில், 46 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தைவான் நாட்டைச் சேர்ந்த TJR Precision Technology Company Limited நிறுவனத்தின் Precision Components உற்பத்தி திட்டம்;
- காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத்தில் 15 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 20 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த Pillar Industries India Pvt Limited நிறுவனத்தின், sealing materials உற்பத்தி திட்டம்;
- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மஹிந்திரா தொழிற்பூங்காவில், 12 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த Lincoln Electric நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மையம் (R & D) துவங்கும் திட்டம்;

மேற்கண்டவற்றில் முதல் 9 ஒப்பந்தங்கள் நேரடியாகவும், பிற ஒப்பந்தங்கள் காணொலிக் காட்சி மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், புதிதாகத் தொழில்களை தொடங்கவும் ரூ.300 கோடி சிறப்பு நிதியுதவி தொகுப்பு வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில் சிறப்பு நிதியுதவித் தொகுப்பு வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு சிறப்பு நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுக்கவும் உலக வங்கியின் கடனுதவியுடன், 918 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களில் 120 வட்டாரங்களைச் சேர்ந்த 3,994 கிராம ஊராட்சிகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு, இத்திட்டத்திற்காக 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உலக வங்கியுடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டது. இத்திட்டம் பல்வேறு சிறு, குறு தொழில்களை மேம்படுத்துவதன் மூலம் ஊரக பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ், பல்வேறு ஒப்பந்தப் பணிகளில் நியமனம் செய்ய 31.10.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 525 நபர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. மேலும் அவர்களுக்கு திட்டம் குறித்த உரிய பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

28.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் இருந்து கொரோனா வைரஸ் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும் புதிதாகத் தொழில்களைத் தொடங்கவும்

300 கோடி ரூபாய் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக 5 பயனாளிகளுக்கு சிறப்பு நிதியுதவி வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட கிராமப்புற தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், பல்வேறு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தனிநபர்கள், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர் மற்றும் பிற பகுதிகளிலிருந்து புலம் பெயர்ந்த இளைஞர்கள் புதிதாகத் தொழில் தொடங்கவும், ஏற்கெனவே தொழில் செய்துகொண்டிருப்பின் அதனை மேம்படுத்திடவும், தமிழ்நாடு ஊரகப் புத்தாகத் திட்டத்தின் கீழ், 300 கோடி ரூபாய் மதிப்பில் மொத்தம் 1,39,574 பயனாளிகள் பயன்பெறும் வகையில் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம்,

- 31,952 நபர்களுக்கு மொத்தம் 159 கோடியே 76 இலட்சம் ரூபாய் நீண்டகால தனிநபர் தொழில் கடனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வழங்கப்படும்.
- 1,598 உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 31,960 நபர்கள் பயன்பெறும் வகையில் ஒரு முறை மூலதன மானியமாக குழு ஒன்றுக்கு (20 நபர்கள்) 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 23 கோடியே 97 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.
- குழு ஒன்றுக்கு 5 பயனாளிகள் அடங்கிய 240 தொழில் குழுக்களுக்கு (1,200 நபர்கள்) தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒருமுறை மூலதன மானியமாக வழங்கப்படும்.
- புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பி வந்த 5,010 இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 50 கோடியே 10 இலட்சம் ரூபாய் நீண்டகால கடனாக வழங்கப்படும்.
- ஒரு உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு 500 நபர்கள் வீதம் 37,500 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 75 உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு தலா 10 இலட்சம் ரூபாய் என 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மூலதன மானியமாக வழங்கப்படும்.
- மாற்றுத்திறனாளிகள், விதவைகள், திருநங்கைகள், ஆதரவற்றோர் உள்ளிட்ட நலிவுற்றோரின் தொழில் மேம்பாட்டிற்காக 31,952 நபர்களை தேர்ந்தெடுத்து தொழில் மூலதன நிதியாக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் மொத்தம் 49 கோடியே 92 இலட்சம் ரூபாய் நீண்ட காலக் கடனாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், கொரோனா வைரஸ் தடுப்பு முகக்கவசம் தயாரித்தல், கிருமிநாசினிகள் மற்றும் கைகழுவும் திரவ சோப்பு தயாரித்தல், ஆடைகள் தயாரிப்பு, பால்வள மேம்பாடு, ஆடு, மாடு, கோழி, பன்றி மற்றும் மீன் வளர்ப்பு, சிறு உணவகங்களை நடத்துதல், வேளாண் பொருட்கள் விற்பனை, சிறு மளிகைக் கடைகள் வைத்தல், அரவை மாவுத் தொழில், பல்வேறு உலோகப் பொருட்களை தயாரித்தல், செயற்கை ஆபரணத் தொழில், அழகுக்கலை, மரச்சிற்பங்கள் / மரவேலைகள், மின் பழுதுநீக்கம், குழாய் பழுதுநீக்கம், வீட்டு உபயோகப் பொருட்கள் பழுதுநீக்கம், கணினி சார்ந்த தொழில்கள், கைபேசி பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களின் மேம்பாட்டிற்காக இச்சிறப்பு நிதியுதவி வழங்கப்படும். இதன் மூலம் ஊரக பொருளாதார வளர்ச்சியும், ஊரக தொழில்களில் எழுச்சியும், மக்கள் வருமானத்தில் முன்னேற்றமும் ஏற்படும்.

கற்பூரவள்ளி

கற்பூரவள்ளி செடி எந்தவொரு பெரிய பராமரிப்பும் இல்லாமல் எளிதில் வளரக்கூடிய ஒரு அற்புத மூலிகை செடியாகும். இந்த மூலிகை செடி ஒரு கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது.

கற்பூரவள்ளி இலைகளை கழுவி சாறு எடுத்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் மார்புச் சளி கட்டுக்குள் வரும். குழந்தைகளுக்கு உண்டாகும் அஜீரண கோளாறு, வாந்தி ஆகியவற்றை நிறுத்தும் சக்தியை கொண்டது. கட்டிகளுக்கு இந்த இலையை அரைத்து கட்டிவர அதன் வீக்கம் குறையும். உடலில் உண்டாகும் சூட்டைத் தணிக்கும், தலைவலியை கட்டுப்படுத்தும். தொண்டையில் உண்டாகும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஓர் சிறந்த நிவாரணியாக இருக்கும். இளைப்பு, வயிறு சம்மந்தப்பட்ட நோய், கண் அழற்சி மற்றும் நரம்புகளுக்கு சத்து தரும் மருந்தாகிறது.

22 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தலா 10 இலட்சம் இடைநிலை மூலதன கடனுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
18.05.2020 அன்று, தலைமைச் செயலகத்தில்,
உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு
மூலதன கடனுதவிகளை வழங்கினார்கள்.

தலைமைச் செயலகத்தில் 18.05.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 22 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு இடைநிலை மூலதன கடனுதவி வழங்கிடும் அடையாளமாக, கரிகாலன் பல்சஸ் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்–திருவாரூர், மேல்மலையனூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்–விழுப்புரம் மற்றும் கழனி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்–ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த மூன்று உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் வழங்கப்பட்டன.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் 2014–2015ஆம் ஆண்டு முதல் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை தமிழ்நாடு அரசு உருவாக்கி பேராதரவு அளித்து வருகின்றது. இவ்வாறு ஊக்கம் அளிக்கப்பட்டதால், தற்பொழுது தமிழ்நாட்டில் 500க்கும் மேற்பட்ட உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வேளாண் பொருட்களை கொள்முதல் செய்து, மதிப்பு கூட்டி, வணிகரீதியாக சந்தைப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் தற்போது சில உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றன. இதன் மூலம் வேளாண் பெருமக்களும் கூடுதல் வருமானம் பெற்று வருகின்றனர்.

தற்போது நிலவி வரும் ஊரடங்கின்போதும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், காய்கறி மற்றும் பழங்களை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து, தங்கள் அருகில் உள்ள குடும்பங்களுக்கு தரமான வேளாண் பொருட்களை தொகுப்புகளாக நியாயமான விலையில் தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது.

அந்த வகையில், கொரோனா ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல் இது வரை 113 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், 288 மெ.டன் பழ வகைகளையும், 1,670 மெ.டன் காய்கறிகளையும், 283 மெ.டன் இதர உணவுப் பொருட்களையும், 98 வாகனங்கள் மூலம் நேரடியாகவும், 70 உழவர் சந்தைகள், 55 மொத்த சந்தைகள் மற்றும் 162 சில்லரை சந்தைகளில் கடைகள் அமைத்தும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்துள்ளனர். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தரமான வேளாண் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக விவசாயிகளுக்கு முன்பணம் செலுத்தவும், கொள்முதல் செய்த பொருட்களைப் பதப்படுத்தி சரியான முறையில் சிப்பம் கட்டி, அதை நேரடியாக நுகர்வோருக்குக் கொண்டு செல்லவும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு போதிய நிதி தேவைப்படுகிறது.

இந்த நிதித் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொரோனா ஊரடங்கு நேரத்தில் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர உணவுப் பொருட்களை சேகரித்து விநியோகம் செய்ய முன்வரும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபாய் வரை "இடைநிலை மூலதன கடன் உதவி" வழங்கப்படும் என்று கடந்த 07.04.2020 அன்று அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, தகுதிவாய்ந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டன. இடைநிலை மூலதன உதவி ஒப்பளிப்புக் குழுவால் (Mezzanine Capital Sanctioning Committee) விண்ணப்பங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு, தற்பொழுது 22 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு, 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் இடைநிலை உதவியாக வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் இடைநிலை மூலதன நிதி, அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் ஒரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

இந்நிதியினைப் பெறுகின்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மேற்கண்ட காரணங்களுக்காக இந்நிதியைப் பயன்படுத்தி, ஐந்தாம் ஆண்டின் முடிவில் இந்த இடைநிலை மூலதன நிதியினை திருப்பிச் செலுத்த வேண்டும். இவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் இடைநிலை மூலதன நிதி புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு கடனாக வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

> **"கொரோனா ஊரடங்கு நேரத்தில் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர உணவுப் பொருட்களை சேகரித்து விநியோகம் செய்ய முன் வரும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் இந்நிதியைப் பயன்படுத்தி, ஐந்தாம் ஆண்டின் முடிவில் இந்த இடைநிலை மூலதன நிதியினை திருப்பிச் செலுத்த வேண்டும். இவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் இடைநிலை மூலதன நிதி புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு கடனாக வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது."**

திப்பிலி

திப்பிலி ஒரு அரிய மூலிகையாகும். திப்பிலி குறுகிய நீண்ட வடிவிலான இலைகளை கொண்ட சிறு மர இனம் ஆகும். திப்பிலி "பெப்பவரேசியே" என்னும் குடும்பத்தை சார்ந்தது. தனது நெருங்கிய இனமான கரும் மிளகை ஒத்த சுவையோடும், அதை காட்டிலும் மேலும் காரமாகவும் இருக்கும். திப்பிலி பல மிக சிறந்த பழங்களைக் கொண்டது. கூர்முனை கொம்பு போன்ற ஒரு பூவின் மேற்பரப்பில் நெருக்கமாக பதிக்கப்பட்டு இருக்கும். திப்பிலியில் நிறைய மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன .

மருத்துவ பயன்கள் :

- திப்பிலியை தேனில் கலந்து கொடுக்க சளி, இருமல், ஆஸ்துமா, விக்கல் ஆகியவற்றை குணப்படுத்தும்.
- குழந்தை பெற்ற பெண்களுக்கு இளம் சூடான நீரில் திப்பிலி பொடியை கலந்து கொடுப்பதால் இரத்தப்போக்கு, காய்ச்சல் குணமாகும்.
- குழந்தைகளின் குடல் நோயில், புழு அகற்றியாக திப்பிலி செயல்படுகிறது.
- நுரையீரல் நோய் மட்டுமின்றி விலா எலும்பில் தோன்றும் வலிக்கும் நல்ல மருந்தாக இருக்கின்றது.
- உடல் இளைக்க நினைப்பவர்கள் திப்பிலியைப் பொடி செய்து கொதிக்க வைத்து குடித்து வரவேண்டும்.
- நுரையீரலில் உண்டாகும் பிரச்சினைகளுக்கு திப்பிலி நல்ல மருந்தாகும்.

கொரோனா நோய்த் தொற்று அதிகமாக பரவி வருவதனால், 2019-2020ஆம் கல்வி ஆண்டுக்கான 10ஆம் வகுப்பு பொது தேர்வுகள் மற்றும் 11ஆம் வகுப்பில் தேர்வு நடத்தாமல் விடுபட்டு போன தேர்வுகள் ரத்து

மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படுகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 09.06.2020

2019–2020ஆம் கல்வி ஆண்டுக்கான 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள்மற்றும்11ஆம்வகுப்பில்தேர்வுநடத்தாமல் விடுபட்டு போன [வேதியியல், கணக்கு பதிவியல், புவியியல் (புதிய பாடத்திட்டம்), வேதியியல், கணக்கு பதிவியல், புவியியல், தொழிற்கல்வி–கணக்கு பதிவியல் (பழைய பாடத்திட்டம்)] ஆகிய பாடங்களுக்கான தேர்வுகள் ஜூன் 15 முதல் ஜூன் 25 வரை தேர்வு நடத்த ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்து, அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வந்த நிலையில், இது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டு, மாண்புமிகு உயர்நீதிமன்றம், இந்த தேர்வுகளை தற்போது கொரோனா தொற்று அதிகமாக உள்ள நிலையில், தள்ளி வைப்பது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளது.

இது குறித்து அரசு விரிவாக ஆய்வு செய்தது. தற்போது உள்ள நிலையில் கொரோனா தொற்று சென்னையிலும், சில மாவட்டங்களிலும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நோய்த் தொற்று வல்லுநர்கள், நோய்த் தொற்று குறுகிய காலத்தில் குறைய வாய்ப்பில்லை என கருத்து தெரிவித்துள்ளனர். எனவே பெற்றோர்களின் கோரிக்கையையும், நோய்த் தொற்றின் தற்போதைய போக்கையும் கருத்தில் கொண்டு, மாணவர்களை நோய் தொற்றிலிருந்து காக்க, வருகின்ற 15ஆம் தேதி முதல் நடைபெறவிருந்த 10ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகளும், 11ஆம் வகுப்புக்கான விடுபட்ட பாடங்களுக்கான தேர்வுகளும் முழுமையாக ரத்து செய்யப்படுகிறது.

எனவே, இந்த தேர்வுகள் ரத்து செய்யப்பட்ட காரணத்தால், மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. மாணவர்களுக்கான மதிப்பெண் மதிப்பீடு காலாண்டு மற்றும் அரையாண்டில் அந்தந்த மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் 80% மதிப்பெண்களும், மாணவர்களின் வருகை பதிவின் அடிப்படையில் 20% மதிப்பெண்களும் வழங்கப்படும். 12ஆம் வகுப்புத் தேர்வைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே தேர்ச்சி பெறாதவர்களுக்கு நடத்தப்படவிருந்த மறுதேர்வு ஒத்தி வைக்கப்படுகிறது. சூழ்நிலைக்கேற்ப 12ஆம் வகுப்பு மறுதேர்வுகளுக்கான நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் சூடான பானம் (HOT DRINKS)

இஞ்சி – சிறிய துண்டு, துளசி – 10 இலைகள், மிளகு – ¼ டீஸ்பூன், அதிமதுரம் – ½ டீஸ்பூன், மஞ்சள் தூள் – ½ டீஸ்பூன் இவற்றை 250 மி.லி. தண்ணீரில் பச்சை வாசனை போகும் வரை கொதிக்க வைத்து வடிகட்டி பருகவும்.

அளவு : 50 மி.லி. பெரியவர்களுக்கு, 20 மி.லி. சிறியவர்களுக்கு என ஒரு நாளைக்கு இரண்டு வேளை பருகலாம்.

★ சிறிதளவு உப்பு கலந்த மிதமான வெந்நீரால் வாயை கொப்பளிக்கவும். (காலை, மாலை)

★ முகத்திற்கு ஆவி பிடித்தல்.

★ சூரிய ஒளி குளியல் – தினமும் 15 – 20 நிமிடங்கள் சூரிய ஒளியில் நிற்கவும். (காலை 10 மணிக்குள், மாலை 4 மணிக்கு பிறகு)

தமிழ்நாட்டு மக்களுக்கும், தொழில் துறைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்றைக்கும் பாதுகாப்பு அரணாக இருக்கும்

இந்திய தொழில் கூட்டமைப்பு நடத்தும் "ஒளிரும் தமிழ்நாடு" – புதிய இயல்பு சூழ்நிலையில் முதன்மை மாநிலமாக மாறுவதற்கான டிஜிட்டல் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 06.06.2020

உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா தொற்றின் காரணமாக, உலக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த தொற்றின் விளைவாக நம்முடைய வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளது. பொது மக்கள் முக கவசம் அணிவது, சமூக இடைவெளி காப்பது, சில துறைகளில் அலுவலகத்திற்கு செல்லாமல் வீட்டிலிருந்தே பணி புரிவது போன்ற மாற்றங்கள், புதிய இயல்பாகி வரும் சூழல் உருவாகியுள்ளது. உலகப் பொருளாதாரம் படிப்படியாக மீண்டெழுந்து வரும் இந்த சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்தவும், தொழில் துறையில் தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழச் செய்திடவும், மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கொரோனா நோய் தடுப்புக்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை, தமிழ்நாட்டிலேயே தயாரிக்க ஊக்கமளிக்கும் வகையில், சிறப்பு சலுகைகளை நான் அறிவித்திருந்தேன். அதன் விளைவாகவும், தொழில் துறையினரின் சிறப்பான முயற்சிகளின் விளைவாகவும், இன்றைக்கு பல்வேறு நிறுவனங்கள், இப்பொருட்களின் உற்பத்தியைத் துவங்கி இந்தியா முழுவதும் வழங்கி வருகின்றன. எந்த ஒரு அவசரச் சூழ்நிலையிலும், பேரிடரிலும், நாட்டிற்கே துணையாக நிற்கும் தமிழ்நாட்டு மக்களின் திறன், இதன் மூலம் மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது.

கொரோனா தொற்றின் பரவலிலிருந்து தமிழ்நாட்டு மக்களை பாதுகாக்க, ஊரடங்கு நடைமுறையில் உள்ள காலத்திலும் மக்களின் வாழ்வாதாரம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, படிப்படியாக ஊரடங்குக்கு தளர்வுகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. சென்னை காவல்துறை ஆணையரகத்திற்குட்பட்ட பகுதிகளில் 25 சதவீதப் பணியாளர்களுடன், பிற பகுதிகளில் தொழிற்சாலைகள் 100 சதவீதப் பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு அறிவுறுத்திய பாதுகாப்பு வழிமுறைகளை தொழில் நிறுவனங்கள் முழுமையாக கடைப்பிடித்து வருவதை மனதார பாராட்டுகிறேன். அதே வேளையில், எந்தவிதமான தொய்வுமின்றி இந்த பாதுகாப்பு வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டுமென்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மாறி வரும் சூழ்நிலையை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது. சூழ்நிலையை பொறுத்து, மேலும் தளர்வுகளை அரசு அறிவிக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் வெளியான "ELARA SECURITIES" நிறுவனத்தின் ஆய்வில், இந்திய பொருளாதாரத்தை

கொரானா தொற்று பரவலின் விளைவாக, வெளி மாநில தொழிலாளர்கள் பலர் தங்களின் சொந்த மாநிலத்திற்கு திரும்ப சென்றுள்ளார்கள். எனினும், எதிர்பாராத இச்சூழலில், தொழில் உற்பத்தி பாதிப்படையாமல் இருக்க, தமிழ்நாட்டைச் சார்ந்த தொழிலாளர்களை பயன்படுத்தி, இயல்பு நிலையை எய்த, தொழில் துறையினர் முயற்சிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீட்டெடுக்கும் முயற்சியில் தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்கள் முன்னணியில் உள்ளதாக தெரிவித்துள்ளது. மிகவும் தொழில் மயமான மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்கள் பின்தங்கியுள்ள நிலையில், தமிழ்நாடு இயல்பு நிலையை நோக்கி படிப்படியாக முன்னேறி வருவதை இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. தமிழ்நாடு அரசின் தீர்க்கமான செயல்பாடுகளுக்கும், நமது தொழில் துறையினரின் விடாமுயற்சிக்கும் இது தக்க சான்றாகும்.

மேலும், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, பிணை சொத்தின்றி உடனடிக் கடன் வழங்கும் திட்டத்திற்காக 200 கோடி ரூபாயை ஒதுக்கி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம், கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (CORUS) என்ற திட்டத்தை நான் 31.03.2020இல் அறிவித்ததை நீங்கள் அறிவீர்கள். இத் திட்டத்தின் கீழ், இதுவரை 955 நிறுவனங்களுக்கு 120 கோடி ரூபாய் செயல்பாட்டு மூலதனக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

MSME நிறுவனங்களுக்கு மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நிவாரண தொகுப்பின் முழுப் பயனையும் நமது தொழில் நிறுவனங்கள் பெறுவதற்காக 30.05.2020 அன்று மாநில அளவிலான வங்கியாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கூட்டத்தில் கோவிட்–19 நிவாரண கடன் வழங்கும் நடைமுறைகளை எளிதாக்கி, உடனுக்குடன் கடன் தொகைகளை தொழில் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டுமென்று வங்கியாளர்களுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

கொரோனா நோய்ப் பரவல், உலகப் பொருளாதாரச் சூழலில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளால், சில நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இடம் பெயர முடிவு செய்துள்ளன. இந்நிறுவனங்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைமைச் செயலாளர் தலைமையிலான உயர்நிலைக் குழுவினை எனது அரசு அமைத்துள்ளது. அது மட்டுமின்றி, பொருளாதார மீட்பு நடவடிக்கைகளை பரிந்துரைக்க டாக்டர் சி. ரங்கராஜன் அவர்களின் தலைமையில் பொருளாதார நிபுணர்கள், தொழில் முனைவோர், அரசு அலுவலர்கள் அடங்கிய உயர்மட்டக் குழு ஒன்றையும் அமைத்துள்ளது. இத்தகைய சீரிய முயற்சிகளின் விளைவாக, சமீபத்தில் தொழில் துறை சார்பில், ஜெர்மனி, ஃபின்லாந்து, தைவான், ஃப்ரான்சு, கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 தொழில் நிறுவனங்களுடன், அவர்களது புதிய மற்றும் விரிவாக்க தொழில் திட்டங்களை துவங்கிட, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இத்திட்டங்கள் மூலம், 15,128 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 47,150 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். இந்த நிகழ்ச்சி, உலகத்தின் பார்வையை தமிழ்நாட்டின் பக்கம் திருப்பி உள்ளது.

இது மட்டுமின்றி, பல்வேறு தொழில் துறைகளில், உலகளவில் சிறந்து விளங்கும் நிறுவனங்களில் தலைமை அதிகாரிகளுக்கு, தமிழ்நாட்டில் முதலீடு செய்திடுமாறு நான் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியுள்ளேன். இவற்றில், ஆப்பிள், சாம்சங், அமேசான், ஏர்பஸ், ரோல்ஸ் ராய்ஸ், Boeing, General Electric போன்ற நிறுவனங்களும் அடங்கும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், தொழில் துறையைப் பொருத்தவரையில், தமிழ்நாடு அரசின் செயல் திட்டமாக, நான்கு முக்கிய இனங்களில் கவனம் செலுத்துமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் நான் அறிவுறுத்தியுள்ளேன்.

★ தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்கள் மீண்டும் இயல்பு நிலையினை விரைவாக அடைந்திட உதவி புரிதல்

★ புதிய முதலீடுகளை ஈர்த்தல்

★ அரசு அனுமதிகள் மற்றும் நடைமுறைகளை மேலும் எளிதாக்குதல்

★ கடன் வழங்கும் நடைமுறைகளை எளிதாக்கி, தொழில்களுக்கு தேவையான பணப்புழக்கத்தினை அதிகரித்தல்

இத்தகு செயல்பாடுகளில் முனைப்புடன் ஈடுபடுவதன் மூலம் புதிய தொழில்களும், ஏற்கெனவே தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் தொழில்களும், மேலும் சிறப்புடன் செயல்படவும், கொரோனா நமக்கு இட்டுள்ள சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள இயலும்.

கொரானா தொற்று பரவலின் விளைவாக, வெளி மாநிலத் தொழிலாளர்கள் பலர் தங்களின் சொந்த மாநிலத்திற்கு திரும்ப சென்றுள்ளார்கள். எனினும், எதிர்பாராத இச்சூழலில், தொழில் உற்பத்தி பாதிப்படையாமல் இருக்க, தமிழ்நாட்டைச் சார்ந்த தொழிலாளர்களை பயன்படுத்தி, இயல்பு நிலையை எய்த, தொழில் துறையினர் முயற்சிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், இந்திய தொழில் கூட்டமைப்பு நிறுவனத்துடன் இணைந்து தொழிலாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளித்திட தயாராக உள்ளது என்றும் இந்த நிறைந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமின்றி, வணிகம் புரிதலை எளிதாக்கிட, ஏற்கெனவே பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மாவட்ட அளவிலும் சீர்திருத்தங்களை மேற்கொண்டு, தொழிலாளர் துறை, மருந்தியல் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவையிடமிருந்து, தொழில் அனுமதிகள் பெறுவதற்கான வழிமுறைகள் எளிதாக்கப்படும். இதன் மூலம் தமிழ்நாட்டில், தொழில் முதலீட்டிற்கான சாதகமான சூழ்நிலை மேலும் வலுவடையும் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டான இக்காலத்தில், உங்களின் நலத்தையும், உங்கள் பணியாளர்களின் உடல் நலம் மற்றும் பணி பாதுகாப்பையும் உறுதி செய்திடுமாறு உங்கள் அனைவரையும், அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கும், தொழில் துறைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்றைக்கும் பாதுகாப்பு அரணாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

படமும்/ செய்தியும்

ரூ.265.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலங்கள், சாலைப் பணிகள், வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை மற்றும் சென்னை பயிற்சி மையக் கட்டடங்கள் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 08.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், வாரணாசி – கன்னியாகுமரி சாலையில், காளவாசல் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், நாமக்கல், திருப்பத்தூர், புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர், திருவள்ளூர், மதுரை மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 2 பாலங்கள், இரயில்வே கடவிற்கு மாற்றாக 2 சாலை மேம்பாலங்கள், 2 சாலைப் பணிகள், பல்வழி பரிமாற்ற மேம்பாலம், வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை மற்றும் சென்னை பயிற்சி மையக் கட்டடம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

அரசு துரிதமாக அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்ததனால், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் பரவலை நாம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வினை தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆலோசனை கூட்ட நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், உயர்திரு தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், உயர்திரு டி.ஜி.பி. அவர்களுக்கும், காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மற்றும் வருகை தந்துள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், இந்த ஆலோசனை கூட்டத்திலே பங்குபெற்றுள்ள மாவட்ட காவல்

கண்காணிப்பாளர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுப்பதற்காக ஆறுமுறை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் செயல்பட்டதன் விளைவாக இன்றைக்கு வைரஸ் பரவல் பெருமளவில் தடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் இந்தியா முழுவதும் இந்த வைரஸ் பரவல் அதிகரித்திருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மூலமாகவும், வெளிமாநிலங்களிலிருந்து வருபவர்கள் மூலமாகவும் ஏற்கெனவே வெளிநாட்டிலிருந்து, வெளிமாநிலத்திலிருந்து வந்தவர்கள் மூலமாக ஏற்பட்டுள்ள தொற்று படிப்படியாக குறைக்கப்பட்டாலும், நமக்கு சென்னை ஒரு சவாலாக உள்ளது. சென்னை மாநகரம் மக்கள்தொகை அதிகம் உள்ள நகரம். குறுகலான தெருக்கள் அதிகமாக இருக்கின்றன, வீடுகள் நெருக்கமாக இருக்கின்றன, ஒரே வீட்டில் பலர் வசிக்கின்றனர். இருந்தாலும், அதை கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுத்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த முயற்சியின் காரணமாக இந்த வைரஸ் தொற்று பரவல் கட்டுக்குள் இருக்கின்றது. இன்றைக்கு வல்லரசு நாடுகள், வளர்ந்து வரும் நாடுகளில் கூட உயிரிழப்பு அதிகமாக இருக்கிறது. ஆனால், தமிழகத்தை பொறுத்தவரை நம்முடைய மருத்துவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையிலே சிகிச்சை அளித்த காரணத்தினாலே இறப்பு விகிதம் குறைந்திருக்கின்றது. அதோடு சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 54 சதவிகிதமாக இருக்கின்றது. இதனால் நாம் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இதற்கு ஒரே மருந்து ஒவ்வொருவரும் தன்னுடைய கடமையை உணர்ந்து அரசு சொல்லுகின்ற வழிமுறைகளை பின்பற்றினால் இந்த வைரஸ் பரவலை தடுக்க முடியும். பொதுமக்களுடைய ஒத்துழைப்பின் மூலமாக தான் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க முடியும். பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிக மிக முக்கியம். இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. மருந்து கண்டுபிடித்திருந்தால் எளிதாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து குணமடைய செய்ய முடியும். ஆனால், மருந்து கண்டுபிடிக்காத இந்த சூழ்நிலையில் நம்முடைய மருத்துவர்களின் கடும் முயற்சியின் காரணமாக உரிய முறையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்ததன் காரணமாக குணமடைந்து வீடு திரும்புகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். ஆகவே, பொதுமக்கள் ஒவ்வொருவரும் கட்டுப்பாடோடு இருக்க வேண்டும். அப்படி கட்டுப்பாடோடு இருந்தால் தான், கொரோனா வைரஸ் பரவலை தடுக்க முடியும். மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டுதலின்படி அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதை மக்களுக்கு எடுத்து சொல்கின்றோம். விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு, ஒலிபெருக்கியின் மூலமாக அனைத்து வீதிகளிலும் நம்முடைய காவல்துறை, உள்ளாட்சித் துறையும் இந்த பணியை செய்து வருகின்றன. பொதுமக்கள் அடிக்கடி சோப்பு போட்டு கைகளை கழுவ வேண்டும், வெளியே சென்று பொருட்களை வாங்குகின்ற போது சமூகஇடைவெளியை பின்பற்ற வேண்டும். வெளியே சென்று மீண்டும் வீடு திரும்புகின்ற போது, கை, கால்களை சோப்பு போட்டு சுத்தமாக கழுவ வேண்டும். இதையெல்லாம் பின்பற்றினால் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க முடியும். அதேபோல், நோய் அறிகுறி தென்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். நோய் முற்றிய பிறகு நீங்கள் மருத்துவமனையில் சேர்ந்தால் சிகிச்சை பலனின்றிப் போய் விடும். ஆகவே, பொதுமக்கள் நோய் அறிகுறிகளான, இருமல், தொண்டைவலி, காய்ச்சல்

“ ஒவ்வொருவரும் தன்னுடைய கடமையை உணர்ந்து அரசு சொல்லுகின்ற வழிமுறைகளை பின்பற்றினால் இந்த வைரஸ் பரவலை தடுக்க முடியும். பொதுமக்களுடைய ஒத்துழைப்பின் மூலமாக தான் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க முடியும். பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிக மிக முக்கியம். இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. ”

ஆகியவை வந்தாலோ, சளி ஏற்பட்டாலோ உடனடியாக மருத்துவர்களை அணுகி பரிசோதனை செய்து, தங்களை பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும், இது மிக முக்கியம். அப்படி செய்தால் இந்த வைரஸ் தொற்றிலிருந்து அவர்கள் மீள முடியும்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை, நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். நம்முடைய அரசு எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்:

- மருந்து கொள்முதல் செய்வதற்காக உற்பத்தியாளர்களுடன் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தியது – 22.01.2020.
- மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு பணியாணை வழங்கப்பட்ட நாள் – 31.01.2020.
- மருந்துகள் வாங்குவதற்கு பணியாணை வழங்கப்பட்ட நாள் – 2020 பிப்ரவரி முதல் வாரம் – 146 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டன.
- வெளிநாட்டிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் விமானம் மூலம் வருகை தந்தவர்களை பரிசோதனை செய்ய துவங்கப்பட்ட நாள் –23.01.2020.
- தமிழ்நாட்டில் கொரோனா நோய்த் தொற்று முதன் முதலில் கண்டறியப்பட்ட நாள் – 07.03.2020.
- திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் பூந்தமல்லியில் தனிமைப்படுத்தும் வசதிகள் முதற்கட்டமாக துவங்கப்பட்ட நாள் – 15.03.2020.
- பொது இடங்களில் கூடுவதைத் தவிர்க்கவும், எல்லையோர மாவட்டங்களில் திரையரங்குகள், மால்கள் மூட உத்தரவிடப்பட்ட நாள் – 15.03.2020.
- மழலையர்கள் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் மூட உத்தரவிடப்பட்டது – 15.03.2020.
- மாநில எல்லைகளில் பரிசோதனை – 16.03.2020.
- தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு 23.03.2020 அன்று வெளியிடப்பட்டு, 24.03.2020 மாலை 6 மணி முதல் அமல்படுத்தப்பட்டது.
- அதன் பின்னர், மத்திய அரசு தன்னுடைய 24.03.2020 அன்றைய அறிவிப்பில் 25.03.2020 முதல் 21 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவினை பிறப்பித்தது. அதை அரசு கடைப்பிடித்தது.
- 15.04.2020 அன்று முதல் 03.05.2020 வரையான நாட்களுக்கு இரண்டாவது ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டது.
- 04.05.2020 முதல் 17.05.2020 வரை மூன்றாவது ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டது.
- 18.05.2020 முதல் 31.05.2020 வரை நான்காவது ஊரடங்கு உத்தரவு நீட்டிப்பு செய்யப்பட்டது.
- எனது தலைமையில் நடத்தப்பட்ட மாநில பேரிடர் மேலாண்மை குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை –14
- மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் 5 முறை கலந்தாய்வுக் கூட்டங்கள் நடைபெற்றது.
- மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் 6 ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன.
- 12 ஒருங்கிணைப்புக் குழுவினருடன் மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன.
- தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்பட்ட Task Force Meetings – 4 முறை.
- மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தலைமைச் செயலாளர் தலைமையில் 6 முறை கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன.
- தலைமைச் செயலாளரின் தலைமையில் அனைத்து மதத்தலைவர்களுடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றது.
- மருத்துவ வல்லுநர்கள் மற்றும் பொது சுகாதாரத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் 3 முறை நடைபெற்று இருக்கின்றன.
- இந்திய மருத்துவ முறை மருத்துவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் ஒரு முறை நடைபெற்றது.
- மார்ச் மாத இறுதியில் 530 மருத்துவர்கள், 1,000 செவிலியர்கள், 1,500 ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர்.
- 13.04.2020 அன்று 334 சுகாதார ஆய்வாளர்கள், 2,715 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
- 1,323 செவிலியர்கள், மருத்துவ பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு உடனடியாக பணியில் சேர அறிவுறுத்தப்பட்டனர்.

- மேலும், 08.05.2020–இல் 2,570 செவிலியர்கள் 6 மாத காலம் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.
- 31.03.2020 மற்றும் 30.04.2020 அன்று ஓய்வு பெறும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப பணியாளர்கள் ஆகியோருக்கு இரண்டு மாத காலம் ஒப்பந்தம் முறையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.
- 12 மண்டல அளவிலான சிறப்பு பணிக்குழுக்கள். இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் களப் பணிகளை ஒருங்கிணைக்கின்றனர்.
- தமிழ்நாட்டில் சில தொழிற்சாலைகளை படிப்படியாக அனுமதிப்பது தொடர்பாகவும், நோய்த் தொற்று பரவாமல் இருக்க தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும், என்னுடைய தலைமையில் 23.04.2020 அன்று காணொலிக் காட்சி மூலமாக தொழிலதிபர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.
- 16.04.2020 அன்று ஊரடங்கு உத்தரவு தளர்வு குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது.
- சென்னை, கோயம்புத்தூர் போன்ற நகர்ப்புறங்களில் நோய்த்தொற்றை கண்காணிக்க இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், இந்திய காவல் பணி அதிகாரிகள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் அடங்கிய 15 குழுக்கள் 29.04.2020 அன்று அமைக்கப்பட்டது.
- 05.05.2020 அன்று சென்னை மாநகராட்சி அம்மா மாளிகையில் சென்னை மாநகரத்தில் வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் ஆய்வு கூட்டம் என் தலைமையில் நடத்தப்பட்டது.
- வெளிநாடுகள், மற்றும் வெளிமாநிலங்களில் சிக்கியுள்ள தமிழர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்துவர கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின் தலைமையில் குழுக்களும், பிரத்யேகமான வலைதளமும் உருவாக்கப்பட்டது.
- இதுவரை 2,47,561 வெளிமாநிலத் தொழிலாளர்கள் 170 இரயில்கள் மூலம் அவரவர் மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அனைத்து பயணச் செலவுகளும் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டது.
- 2,218 வெளிநாடு வாழ் தமிழர்கள் விமானம் மற்றும் கப்பல் மூலமாகவும் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர்.
- 04.05.2020 முதல் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும், பிற மாவட்டங்களுக்கும் தொழிற்சாலைகள், சேவை நிலையங்கள், சேவைகள், தனிக்கடைகள், இதர அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் செயல்பட உரிய நெறிமுறைகளுடன் அனுமதிக்கப்பட்டது.
- அதனை தொடர்ந்து 11.05.2020 முதல் 34 விதமான கடைகளுக்கு செயல்பட உரிய நெறிமுறைகளுடன் அனுமதிக்கப்பட்டது.
- 11.05.2020 முதல் தமிழ் திரைப்பட/சின்னத்திரை தயாரிப்பு பின் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
- 10.05.2020 முதல் திருமழிசையில் மொத்த காய்கறி சந்தை தற்காலிகமாக செயல்பாட்டுக்கு வந்தது.
- 19.05.2020 முதல் சென்னை மாநகராட்சி காவல் எல்லை தவிர பிற பகுதிகளில் முடிதிருத்தும் நிலையங்கள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டது.
- 24.05.2020 முதல் அழகு நிலையங்கள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டது.
- 20.05.2020 – வாரியத்தில் பதிவு செய்யப்படாத தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் நெசவாளர்களுக்கும் 2,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்க உத்தரவு வழங்கப்பட்டது.
- 20.05.2020 – சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளை தீவிரமாக கண்காணிக்க புதிய குழுக்கள் அமைக்கப்பட்டது.
- 23.05.2020 முதல் சென்னை மாநகராட்சி காவல் எல்லை தவிர ஆட்டோ ரிக்ஷாக்கள் இயங்க அனுமதி வழங்கப்பட்டது.
- 25.05.2020 முதல் சென்னை பெருநகர எல்லைக்கு உட்பட்ட கிண்டி, அம்பத்தூர் உட்பட்ட 17 தொழிற்பேட்டைகள் 25 சதவிகித தொழிலாளர்களைக் கொண்டு செயல்பட அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோல களப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டது.

- களப்பணியாளர்களுக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்கள், முகக்கவசங்கள், கையுறைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

- களப்பணியாளர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டால் அரசே சிகிச்சை செலவினை ஏற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. துரதிஷ்டவசமாக நோய்வாய்ப்பட்டு இறந்தாலும் நிதியுதவி வழங்கப்படும்.

- 'ஆரோக்கியம்' திட்டத்தின் கீழ் நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதற்காக கட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு கபசுரக் குடிநீர் சூரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

- மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து களப்பணியாளர்களுக்கும் ஜிங்க் மாத்திரைகள் மற்றும் மல்டி வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

கொரோனா சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டதன் விபரம்

- 24.03.2020 அன்று ஊரடங்கு அமலுக்கு வருவதற்கு முன்னர் 3,280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு நிவாரணத் திட்டம் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

- அனைத்து 2.01 கோடி அரிசி அட்டைதாரர்களுக்கும் ஏப்ரல் மாதத்திற்கான அரிசியுடன், 1 கிலோ துவரம்பருப்பு, 1 கிலோ சர்க்கரை, 1 கிலோ சமையல் எண்ணெய் விலையின்றி வழங்கப்பட்டது.

- 2 கோடியே 1 இலட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு மே மாதத்திற்கான 20 கிலோ அரிசி வாங்கிய அந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு 50 கிலோ அரிசி வழங்கப்பட்டது. அதேபோல, துவரம்பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய் விலையில்லாமல் வழங்கப்பட்டது.

- அடுத்த மாதம் ஜூன் மாதத்திற்கும், அதேபோல் 4 பேர் உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 50 கிலோ அரிசி, சர்க்கரை, எண்ணெய், பருப்பு விலையில்லாமல் வழங்கப்படும்.

- ஜூன் மாதத்திற்கான டோக்கன்கள் மே 29, 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டு ஜூன் 1 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் ரேஷன் கடைகள் மூலமாக வழங்கப்படும்.

- 24 இலட்சம் அங்கன்வாடி குழந்தைகளுக்கு 15 நாட்கள் உலர் ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் முன்னேற்பாடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் நல வாரியத்தை சார்ந்த 35.65 இலட்சம் தொழிலாளர்களுக்கும், ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்கான இரண்டு தவணையாக தலா 1,000 ரூபாய் ரொக்கமாக நிவாரணம் வழங்கப்பட்டது. முதல் தவணை – 89 சதவிகிதம் வழங்கப்பட்டுள்ளது, இரண்டாவது தவணை – 88 சதவிகிதம் வழங்கப்பட்டுள்ளது.

- 16.05.2020 அன்று முடிதிருத்தும் நல வாரியங்களில் பதிவு செய்யாத விடுபட்ட முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு இரண்டு தவணைக்கான நிவாரணம் 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

- அனைத்து வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கும், 15 கிலோ அரிசியுடன் 1 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் விலையின்றி நிவாரணமாக வழங்கப்பட்டது.

- பட்டாசுத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று ரூ.1,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

- தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் ESI தொழிலாளர்கள் 21,770 பேர் எங்களுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுக்கும் தலா 1,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது.

- அம்மா உணவகங்களின் மூலமாக தினமும் 7 இலட்சம் ஏழை, எளிய மக்களுக்கு வயிராற சுகாதாரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது.

- 250க்கும் மேற்பட்ட சமுதாய உணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டு, தினசரி சராசரியாக 1.50 இலட்சத்திலிருந்து 2 இலட்சம் வரை ஆதரவற்றோர், முதியோர், வெளிமாநிலத் தொழிலாளர்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்று வருகின்ற வகையில் அவர்களுக்கும் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

- கொரோனா நோய் தாக்கத்திற்குப் பின் குறிப்பிட்ட சில நாடுகளில் இருந்து வெளியேறும் ஜப்பான், தென்கொரியா, தைவான், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்க தலைமைச் செயலாளர் தலைமையில் சிறப்புக்குழு அமைக்கப்பட்டது.

- RBI முன்னாள் ஆளுநர் டாக்டர் சி. ரங்கராஜன் அவர்கள் தலைமையில் பொருளாதார மீட்பு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.
- சிறு, குறு தொழில் நிறுவனங்கள் கடன், வேளாண் பயிர் கடன்கள், வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெற்ற கடன்கள், மீனவர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெற்ற கடன்களை திருப்பி செலுத்தவும் மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
- சொத்துவரி, குடிநீர் வரி ஆகியவற்றை செலுத்த மூன்று மாத அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
- இடைநிலை மூலதன கடன் உதவி – 22 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.
- ஊரகத் தொழில் மேம்பாட்டிற்காக – கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்புத் திட்டம் – 300 கோடி ரூபாய் வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

மருத்துவ உபகரணங்களின் தற்போதைய கையிருப்பு

- வென்ட்டிலேட்டர்களின் எண்ணிக்கை – 3,371

  அரசு – 2,501 (இதில் 560 புதியதாக வாங்கியது)

  தனியார் – 870
- மும்மடிப்பு முகக் கவசங்கள்– வரப்பெற்றது– 1.34 கோடி, கையிருப்பு–32 இலட்சம் இருக்கிறது.
- என்–95 முகக் கவசங்கள்– வரப்பெற்றது – 20 இலட்சம், கையிருப்பு–3 இலட்சம் இருக்கிறது.
- PPE முழு உடல் பாதுகாப்பு கவசங்கள் வரப்பெற்றது – 9.5 இலட்சம், கையிருப்பு–3 இலட்சம் இருக்கிறது.
- ஆய்வக உபகரணம் PCR/VTM தொகுப்பு – வரப்பெற்றது 9.14 இலட்சம், கையிருப்பு –1.76 இலட்சம்.

ஆக இன்றைக்கு அரசை பொறுத்தவரைக்கும், வேகமாக துரிதமாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஆய்வக பரிசோதனை மையங்கள்

- தமிழ்நாட்டில் உள்ள ஆய்வக பரிசோதனை மையங்களின் எண்ணிக்கை – அரசு 42 + தனியார் 28 என மொத்தம் 70 பரிசோதனை மையங்கள் இயங்கி வருகின்றன.
- மொத்தம் உள்ள 70 மையங்களில் நாளொன்றுக்கு இன்றைக்கு 12,000க்கு குறையாமல் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன.
- கொரோனா சிகிச்சைக்கான பிரத்யேக அரசு மருத்துவமனைகள் – 23.
- கொரோனா சிகிச்சைக்கான தனிமைப்படுத்தப்பட்ட பிரிவுகள் கொண்ட அரசு மருத்துவமனைகள் – 188 பயன்பாட்டில் இருக்கின்றன.
- கொரோனா சிகிச்சைக்கான தனிமைப்படுத்தப்பட்ட பிரிவுகள் கொண்ட தனியார் மருத்துவமனைகள் – 169 செயல்பட்டு வருகின்றன.
- தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 35,646.
- தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளின் எண்ணிக்கை 4,018.

நோய்த் தொற்று விவரம்

- இதுவரை பரிசோதிக்கப்பட்டவர்கள் – 4,55,216.
- நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் – 19,372.
- தீவிர கண்காணிப்பில் உள்ளவர்கள் – 89,082.
- சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பியோர் எண்ணிக்கை – 10,548. இது 54.45 சதவீதம் ஆகும்.
- உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை – 145. இது 0.75 சதவீதம் ஆகும்.

அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்கு எவ்வித தடையில்லாமல் கிடைக்க கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்கி உள்ளது

இன்றைக்கு காய்கறிகள் மக்களுக்கு எல்லா பகுதிகளிலுமே எளிதாக கிடைக்கக்கூடிய சூழ்நிலையை நம்முடைய வேளாண் துறை அதிகாரிகள் செய்திருக்கின்றார்கள். உள்ளாட்சித் துறை அதிகாரிகளும் இணைந்து இதனை செயல்படுத்தியதன் விளைவாக காய்கறி விலை ஏறாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. வேளாண் பணிகள் எவ்வித தடையும் இல்லாமல் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன. அதேபோல, பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையில்லாமல் ரேஷன் கடைகளில் வழங்கப்படுகின்றது.

இன்றைக்கு காய்கறி விலையை குறிப்பிட விரும்புகின்றேன். (கிலோ)

1. தக்காளி	– ரூ.8
2. உருளைக்கிழங்கு	– ரூ.23
3. பெரிய வெங்காயம்	– ரூ.10
4. கத்தரிக்காய், வெண்டை, முள்ளங்கி	– ரூ.20
5. பாகற்காய், கேரட்	– ரூ.20
6. அவரை, பச்சை மிளகாய், பீட்ரூட்	– ரூ.35

ஆகவே, விலை உயராமல் அரசு பார்த்துக் கொள்கிறது. பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் இல்லாமல், அத்தியாவசியப் பொருட்கள் முழுமையாக கிடைக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தடை செய்யப்பட்ட பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு அவர்கள் இருக்கின்ற பகுதிக்கே நம்முடைய அதிகாரிகள் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு சென்று சேர்க்கின்றார்கள். அதுவும் அரசு ஏற்பாடு செய்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல காவல்துறை நடவடிக்கை

மொத்த வழக்குகள்	–	5,08,263
கைது விவரம்	–	5,42,618
வாகன பறிமுதல்	–	4,27,689
அபராத வசூல்	–	8.36 கோடி ரூபாய்

ஆக அரசு துரிதமாக அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது முதல், இதுவரை நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நான் குறிப்பிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், ஒருங்கிணைந்து, செயல்பட்டதன் விளைவாக தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவலை நாம் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்கின்றோம். அதிகமான பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது. அதனால் நோய் அறிகுறிகள் தென்பட்டவர்களை அதிகமாக கண்டறிய முடிகிறது. எந்தளவிற்கு நாம் பரிசோதனை செய்கின்றோமோ, அந்தளவிற்கு கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. அப்பொழுதுதான் நோய் பரவலை தடுக்க முடியும். சிலர் சொல்கிறார்கள், நோய் பரவலை தடுக்க அரசு தவறி விட்டது என்ற ஒரு தவறான குற்றச்சாட்டை சொல்கின்றார்கள்.

அரசை பொறுத்தவரைக்கும், நோய் பரவலை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. கொரோனா எளிதாக பரவக்கூடிய தொற்று நோய் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். இந்த நோய் பரவலை முழுமையாக தடுக்க வேண்டும் என்று சொன்னால் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிக மிக முக்கியம். பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் தான் நோய் பரவலை முழுமையாக கட்டுப்படுத்த முடியும்.

அதேபோல, ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது முதல், இதுவரை சிறப்பான முறையிலே செயலாற்றி வருகின்ற நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், டி.ஜி.பி. அவர்களுக்கும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த செயலாளர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், காவல்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், மருத்துவப் பணியாளர்களுக்கும், தூய்மைப் பணியாளர்களுக்கும், காவல்துறைப் பணியாளர்களுக்கும், வருவாய் துறை பணியாளர்களுக்கும், உள்ளாட்சித் துறை பணியாளர்களுக்கும், கூட்டுறவுத் துறை பணியாளர்களுக்கும், அவர்களோடு இணைந்து பணியாற்றிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கின்றேன். அரசு என்ன தான் உத்தரவு போட்டாலும், அதை செயல்படுத்துகின்றவர்கள் அரசு அலுவலர்கள். இன்றைக்கு அரசு போட்ட உத்தரவை ஏற்று செவ்வனே பணியாற்றி, நோய் பரவலை தடுத்துக் கொண்டிருக்கின்ற அனைத்து அதிகாரிகளுக்கும், அரசின் சார்பாக மனமார, உளமார நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் அவசர உதவிக்கு...

பொதுமக்கள் காவல் அவசர அழைப்பு எண் **100 / 112** அழைக்கும் போது இடர்பாடு ஏற்படும் சமயங்களில், மாற்றாக **044-4610 0100** மற்றும் **044-7120 0100** ஆகிய எண்களைக் கொண்டு காவல் கட்டுப்பாட்டறையை தொடர்பு கொள்ளலாம்.

குடிமராமத்து திட்டத்தின் மூலம் தூர்வாரும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனி கவனம் செலுத்தி துரிதமாக முடிக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆய்வுக் கூட்ட முடிவில் ஆற்றிய உரை – 29.05.2020

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய மாவட்டத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் குறித்தும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக, தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்போது கோடைக் காலமாக இருக்கின்ற காரணத்தினாலே தங்களுடைய மாவட்டங்களில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டால், உடனடியாக குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல, குடிமராமத்து சிறப்பான திட்டம் என்று மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்டு அது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தை வேகமாக, துரிதமாக முடிப்பதற்குண்டான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டும். அதேபோல, ரேஷன் பொருட்கள் தங்குதடையில்லாமல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு நேரடியாக பொருள் கிடைப்பதற்குண்டான வழிவகைகளை செய்ய வேண்டும். தமிழகத்தில் தங்கி பணிபுரிந்து வரும் பிற மாநிலத் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த மாநிலத்திற்கு செல்ல விருப்பம் தெரிவித்தால் அவர்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது தமிழ்நாட்டிலே பல தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு விட்டன. பணிபுரிய விரும்புகின்ற தொழிலாளர்களை இங்கேயே பணி செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 15 நாட்களுக்கு முன்பு வெளிமாநிலத் தொழிலாளர்கள் தங்களுடைய மாநிலத்திற்கு செல்வதற்கு On-line–இல் பதிவு செய்திருப்பார்கள். இப்பொழுது, தொழிற்சாலைகள் துவங்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் தமிழகத்திலே தங்கி பணிபுரிவதற்கு விருப்பம் தெரிவித்தால் அவர்கள் இங்கேயே பணிபுரிய நீங்கள் அனுமதிக்க வேண்டும். On-line–இல் பதிவு செய்திருந்தால் கூட அதை பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

100 நாள் வேலை திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், முழு அளவில் பணியாளர்களை அமர்த்திக் கொள்ளலாம். டெல்டா மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஜுன் 12ஆம் தேதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. அதனால், தூர்வாருகின்ற பணியை விரைந்து செயல்படுத்த வேண்டும். இந்த ஆண்டு முன்கூட்டியே இந்தப் பணி துவக்கப்பட்டு விட்டது. அதனால், குறுவை சாகுபடி செய்கின்ற அந்தப் பகுதியில் இருக்கின்ற கால்வாய்களை உடனடியாக தூர்வார வேண்டும். அதில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். கட்டுமானப் பொருட்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு செல்கின்றபொழுது எவ்விதத் தடையும்

“பொதுமக்கள் வெளியிலே செல்கின்றபொழுது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும். பொருட்கள் வாங்குகின்றபொழுது சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். வீட்டிலிருந்து வெளியே சென்று மீண்டும் வீடு திரும்பும்பொழுது கண்டிப்பாக, அவசியமாக கை, கால்களை சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும்.”

இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கட்டுமானப் பணிகள் எவ்விதத் தடையும் இல்லாமல் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும். பிற மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வருகின்ற தொழிலாளர்களை மாவட்ட எல்லையிலேயே கண்காணித்து, அந்தந்த மாவட்டத்திற்கு அவர்களை அனுப்பி பரிசோதனைக்கு உட்படுத்தி positive case–ஆக இருந்தால் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும், negative–ஆக இருந்தால் அவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். அதற்கும் வசதி இல்லாதவர்கள் இருந்தால், அவர்களுக்கென்று தனியாக, பிரத்யேகமாக நீங்கள் மருத்துவமனையில் சேர்த்து அவர்களுக்கும் உரிய வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற தொழிலாளர்களை நம்முடைய மாநில எல்லையிலேயே காவல்துறை அதிகாரிகள் கண்காணித்து, அவர்களை அந்தந்த மாவட்டத்திற்கு சரியான முறையில் அனுப்பி வைக்க வேண்டும்.

நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் தினமும் இரண்டு முறை தூய்மைப் பணிகள் மற்றும் கபசுர குடிநீர் வழங்க வேண்டும். தடை செய்யப்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு கபசுர குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டவுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்பில் இருந்தவர்கள் கண்டறியப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். வெளி மாநில, வெளி மாவட்டத் தொழிலாளர்களுக்கு பரிசோதனை, தனிமைப்படுத்துதல் போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

திறக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் அரசின் வழிகாட்டுதல்படி நடைபெறுகின்றதா என்பதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். பொதுமக்கள் வெளியிலே செல்கின்றபொழுது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும். பொருட்கள் வாங்குகின்றபொழுது சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். வீட்டிலிருந்து வெளியே சென்று மீண்டும் வீடு திரும்பும்பொழுது கண்டிப்பாக, அவசியமாக கை, கால்களை சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, முக்கிய கிராமங்களிலே ஒலிபெருக்கியின் மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்து இந்த நோய்ப் பரவலை கட்டுக்குள் வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் இதுநாள் வரை சிறப்பான முறையிலே அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தங்கள் மாவட்டங்களில் பணியாற்றி இருக்கின்றீர்கள். அரசு குறிப்பிட்ட ஆலோசனையை ஏற்று, அனைத்து மாவட்டங்களிலும் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றீர்கள். சென்னையைத் தவிர பிற மாவட்டங்களில் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது. ஆனால், வெளி மாநிலங்களிலிருந்து வருகின்றவர்கள் மூலமாகத் தான் நோய்ப் பரவுகின்ற சூழல் ஏற்பட்டிருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து வருகின்றவர்களை பரிசோதனைக்கு உட்படுத்துகின்ற பொழுது, அவர்களிடம்தான் நோய்த் தொற்று அதிகமாகக் காணப்படுகிறது. அதனால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். வெளி மாநிலங்களிலிருந்து தொழிலாளர்களோ, வேறு எவரேனும் வந்தால், அவர்களை பரிசோதனைக்கு

உட்படுத்தி, தொற்று ஏற்பட்டிருந்தால் உடனடியாக சிகிச்சை அளிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். சென்னையைத் தவிர பிற மாவட்டங்களில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம். இந்தக் கட்டுப்பாடு தொடர்ந்து இருப்பதற்கு நீங்கள் அரசின் வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் முழுமையாக பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தளர்வை ஏற்படுத்திவிடக்கூடாது. நீங்கள் எந்தவொரு தளர்வு ஏற்படுத்த வேண்டுமென்றாலும் நம்முடைய தலைமைச் செயலாளரைத் தொடர்பு கொண்டு அவருடைய அனுமதி பெற்றுத்தான் நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தடை செய்யப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து கிருமி நாசினி தெளிக்க வேண்டும். தடை செய்யப்பட்ட பகுதிகளிலிருந்து எவரும் வெளியேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அந்த இடத்திற்கு வேறு எவரும் செல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல அங்குள்ள பொதுக் கழிப்பிடங்களை அடிக்கடி கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். அதேபோல, தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் சமூக இடைவெளியை பின்பற்றி பணி செய்ய வேண்டும். தொழிற்சாலைகளுக்கு வருகின்ற பணியாளர்களை பரிசோதனை செய்துதான் தொழிற்சாலைக்கு அனுமதிக்க வேண்டும். தொழிற்சாலைகளிலுள்ள கழிவறைகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படவேண்டும். தொழிற்சாலைகள் காலையிலும், மாலையிலும் இரு முறை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படவேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அரசு அறிவிக்கின்ற அனைத்து நடவடிக்கைகளையும் பின்பற்றி மிகச் சிறப்பாக செயல்படுத்திய அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அவருக்குத் துணை நின்ற அனைத்துத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் மனமார, உளமாற நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கும் அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கொரோனா வைரஸ் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

“தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் சமூக இடைவெளியை பின்பற்றி பணி செய்ய வேண்டும். தொழிற்சாலைகளுக்கு வருகின்ற பணியாளர்களை பரிசோதனை செய்துதான் தொழிற்சாலைக்கு அனுமதிக்க வேண்டும். தொழிற்சாலைகளிலுள்ள கழிவறைகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படவேண்டும். தொழிற்சாலைகள் காலையிலும், மாலையிலும் இரு முறை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படவேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.”

மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இல்லத்தை நினைவிடமாக மாற்ற நடவடிக்கை

மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிறப்புகளையும் நாட்டிற்கு அவர் செய்த சாதனைகளையும் தியாகங்களையும் பொதுமக்கள் அறியும் வண்ணம் அன்னார் வாழ்ந்த சென்னை, போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள "வேதா நிலையம்" இல்லம் அரசு நினைவிடமாக மாற்றப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படும் என 17.08.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு, சென்னை, போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள "வேதா நிலையம்" இல்லத்தை கையகப்படுத்த ஏதுவாக, 05.10.2017 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. "வேதா நிலையம்" அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டடத்தை கையகப்படுத்தும் பொருட்டு, முதல் நிலை அறிவிக்கை 28.06.2019 அன்றும், அதனையடுத்து விளம்புகை 06.05.2020 அன்றும் வெளியிடப்பட்டன. வேதா நிலையம் இல்லம் அமைந்துள்ள கட்டடம் மற்றும் அங்குள்ள அசையும் சொத்துக்களான மரச்சாமான்கள், புத்தகங்கள் மற்றும் நகைகள் ஆகியவை கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் உள்ளன. எனவே, கையகப்படுத்தும் பணி நிறைவு பெறும் வரை அசையும் மற்றும் அசையா சொத்துகளை பராமரிக்கும் பொருட்டு அவற்றை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் என முடிவெடுக்கப்பட்டது.

"வேதா நிலையம்" இல்லம் மற்றும் அவ்வில்லத்தில் அமைந்துள்ள அசையும் பொருட்கள் ஆகியவற்றை தற்காலிகமாக அரசின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரவும், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறநிறுவனம் நிறுவுவதற்கும், 'வேதா நிலையம்' இல்லத்தை நினைவிடமாக மாற்றுவதற்கு நீண்ட கால முன்னேற்பாடுகளை செய்வதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் ஒரு அவசர சட்டத்தை பிரகடனம் செய்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகவும், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு இந்த அறநிறுவனம் இயங்கும். வேதா நிலையம்" இல்லம் மற்றும் அவ்வில்லத்தில் அமைந்துள்ள அசையும் பொருட்கள் ஆகியவையை பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற பணிகளை இந்த அறநிறுவனம் மேற்கொள்ளும்.

உள்ளூர் வெட்டுக்கிளிகளைக் கண்டு, பாலைவன வெட்டுக்கிளிகள் என அச்சப்பட வேண்டாம்

கூட்டமாக வெட்டுக்கிளிகள் தென்பட்டால் விவசாயிகள் அவற்றை புகைப்படம் எடுத்து உழவன் செயலியில் பூச்சி நோய் கண்காணிப்பு பிரிவில் பதிவேற்றம் செய்து ஆலோசனை பெறலாம்

பாலைவன வெட்டுக்கிளிகளைத் தடுப்பது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டம் தொடர்பான அறிக்கை – 30.05.2020

வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்தி, மகசூல் இழப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு வழிகளில் உதவி வருகிறது. மக்காச்சோளத்தில் அமெரிக்கன் படைப்புழு, நெல்லில் ஆனைக்கொம்பன், தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ, மரவள்ளியில் மாவுப்பூச்சி போன்ற பூச்சி தாக்குதலுக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து பயிர் சேதத்தை குறைத்து விவசாயிகளின் நலனை பாதுகாத்துள்ளது.

தற்போது, வடமாநிலங்களில் பாலைவன வெட்டுக்கிளிகள் படையாக பல்வேறு பயிர்களை தாக்கி சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. வடமேற்கு மாநிலங்களில் தாக்கிய வெட்டுக்கிளிகள், கேரள மாநிலம் வயநாடு பகுதியில் உள்ள வயல்வெளிகளில் காணப்படுவதாக பெறப்பட்ட தகவல்களை தொடர்ந்து, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி மற்றும் ஊட்டி போன்ற மாவட்டங்களில் உள்ள வயல்வெளிகளில் வெட்டுக்கிளிகள் காணப்படுவதாக விபரம் தெரிந்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும், வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களும் வயலுக்கு சென்று ஆய்வு செய்தனர். மேலும், இது தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 30.05.2020 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

அவர்கள், தலைமைச் செயலாளர், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர், வேளாண்மை இயக்குநர், தோட்டக்கலை துறை இயக்குநர் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் பாலைவன வெட்டுக்கிளிகள் ஊடுருவுவதற்கான வாய்ப்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

“தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை விஞ்ஞானிகள் வயநாடு ஒட்டிய தமிழக எல்லை பகுதியான ஊட்டி காந்தள் பகுதியில் வயலாய்வு மேற்கொண்டு, இப்பகுதியில் காணப்படும் வெட்டுக்கிளிகள், பாலைவன வெட்டுக்கிளி வகையைச் சார்ந்தது அல்ல எனவும் உள்ளூர் வகை வெட்டுக்கிளிகள் எனவும் உறுதி செய்துள்ளனர்.”

கேரள மாநிலம் வயநாடு பகுதியில் உள்ள வயல்வெளிகளில் வெட்டுக்கிளிகள் காணப்படுவதாக பெறப்பட்ட தகவல்களைத் தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை விஞ்ஞானிகள் வயநாடு ஒட்டிய தமிழக எல்லை பகுதியான ஊட்டி காந்தள் பகுதியில் வயலாய்வு மேற்கொண்டு, இப்பகுதியில் காணப்படும் வெட்டுக்கிளிகள், பாலைவன வெட்டுக்கிளி வகையைச் சார்ந்தது அல்ல எனவும் உள்ளூர் வகை வெட்டுக்கிளிகள் எனவும் உறுதி செய்துள்ளனர். அதே போன்று கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனபள்ளி வட்டாரம், நெர்லகிரி கிராமம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கண்ணனூர் பகுதியில் காணப்பட்ட வெட்டுக்கிளிகள், பாலைவன வெட்டுக்கிளிகள் வகையைச் சார்ந்தது அல்ல எனவும் உள்ளூர் வகை வெட்டுக்கிளிகளே எனவும் கள ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், கிருஷ்ணகிரியில் உள்ளூர் வெட்டுக்கிளிகள் இருந்ததால், விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து கட்டுப்படுத்தப்பட்டது.

ஆப்பிரிக்க நாடுகளில் உருவாகும் சிஸ்டோசெர்கா கிரிகேரியா என்று அழைக்கப்படும் பாலைவன வெட்டுக்கிளிகள் நடப்பாண்டில் ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் பாலைவனப் பகுதிகளைக் கடந்து ராஜஸ்தான் மாநிலத்திற்குள் பெருங்கூட்டமாக படையெடுத்து வந்து சுமார் 33 மாவட்டங்களில் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. மேலும் உத்திரபிரதேசம், குஜராத், மத்திய பிரதேசம், மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள எல்லை மாவட்டங்களிலும் வெட்டுக்கிளிகள் படையெடுப்பு காணப்படுவதால் அந்தந்த மாநிலங்களில் தொடர்ந்து தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் The Locust Warning Organisation (LWO) மூலம் வெட்டுக்கிளிகள் படையெடுப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவிப்புகள் தொடர்ந்து அனைத்து மாநிலங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

29.05.2020 அன்று வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் அறிவுரை அறிக்கையின்படி பாலைவன வெட்டுக்கிளிகளின் படையெடுப்பானது ஜுலை மாதம் வரை இருக்கும் எனவும், ராஜஸ்தானில் இருந்து கிழக்கு பக்கமாக பீகார் மற்றும் ஒடிசா வரை பரவ வாய்ப்புள்ளது எனவும், பாலைவன வெட்டுக்கிளிகள் தாக்குதல் தென்னிந்திய பகுதிகளுக்கு பரவுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே **தமிழ்நாட்டிற்கு பாலைவன வெட்டுக்கிளிகள் படையெடுப்பு வருவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்பதால் விவசாயிகள் அச்சப்பட தேவையில்லை.**

தமிழ்நாட்டிற்கு பாலைவன வெட்டுக்கிளிகள் படையெடுப்பு வருவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்ற போதிலும், கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை துறை அலுவலர்களுக்கு வழங்கினார்கள்.

- பாலைவன வெட்டுக்கிளிகள் நகர்வு குறித்து மத்தியஅரசு மூலமும் அண்டை மாநிலங்களில் உள்ள வேளாண்துறை வாயிலாகவும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

- திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி, தேனி, கன்னியாகுமரி, தென்காசி மற்றும் திருநெல்வேலி போன்ற அண்டை மாநில எல்லைகளை ஒட்டியுள்ள மாவட்டங்களில் வெட்டுக்கிளி தாக்குதல் குறித்து தீவிரமாகக் கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வேளாண்மை இணை இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வன அலுவலர், மாவட்ட தீயணைப்பு அலுவலர், தோட்டக்கலை துணை இயக்குநர், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) மற்றும் வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ஆகியோரை உள்ளடக்கிய சிறப்பு குழு அமைத்து

உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

- அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மீறி, எதிர் பாராத சூழலில் பாலைவன வெட்டுக்கிளிகளின் ஊடுருவல் ஏற்படுமாயின், அதனை உடனடியாக எதிர்கொள்ளும் பொருட்டு, பரிந்துரைக்கப்பட்ட உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் இரசாயன மருந்துகள், மருந்து தெளிப்பதற்குத் தேவையான உபகரணங்களை போதுமான அளவு இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ஒருவேளை, பாலைவன வெட்டுக்கிளி தாக்குதல் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை ஆலோசித்த பிறகு கீழ்கண்ட முறைகளை பின்பற்ற வேண்டும்.

  - வயல்களில் டிரம் அல்லது டின்கள் கொண்டு ஒலி எழுப்புவதன் மூலம் வெட்டுக்கிளிகள் பயிர்களின் மேல் அமர்வதை தடுக்கலாம்.
  - விவசாயிகளின் வயல் அளவில் பாலைவன வெட்டுக்கிளி கூட்டங்கள் தென்பட்டால், முதல் சுற்றில் அசாடிராக்டின் எனும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வேம்பு சார்ந்த தாவர பூச்சி கொல்லியினை பயன்படுத்த வேண்டும்.
  - பாலைவன வெட்டுக்கிளிகள் பெருங்கூட்டமாக தென்பட்டால் எக்டர் ஒன்றுக்கு மாலத்தியான் 50 சதம் – 1.850 லிட்டர் அல்லது மாலத்தியான் 25 சதம் நனையும் தூள் – 3.7 கிகி, குளோர்பைரிபாஸ் 20 சதம் – 1.2 லி அல்லது லாம்டாசைஹேளோத்ரின் 5 சதம் 400 மிலி போன்றவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை, தெளிப்பான்கள் மற்றும் பெரிய டிராக்டர் மூலம் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.
  - குறிப்பாக லாம்டாசைஹேளோத்ரின் மருந்து அதிக திறன் வாய்ந்தது என்பதால் இதனை தெளிக்கும்போது, இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ஒரே நபர் தொடர்ந்து தெளிக்கும் பணியில் ஈடுபடக்கூடாது.
  - பரந்த அளவில் பாலைவன வெட்டுக்கிளிகள் தாக்குதல் ஏற்படும் பட்சத்தில், மாலத்தியான் 96 சதம் பூச்சிமருந்தை மத்திய அரசிடமிருந்து பெற்று, வேளாண்மைத் துறை மூலம் ஒட்டு மொத்த முறையில் தீயணைப்பு இயந்திரம் மூலம் தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

“பாலைவன வெட்டுக்கிளிகள் பெருங்கூட்டமாக தென்பட்டால் எக்டர் ஒன்றுக்கு மாலத்தியான் 50 சதம் – 1.850 லிட்டர் அல்லது மாலத்தியான் 25 சதம் நனையும் தூள் – 3.7 கிகி, குளோர்பைரிபாஸ் 20 சதம் – 1.2 லி அல்லது லாம்டாசைஹேளோத்ரின் 5 சதம் 400 மிலி போன்றவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை, தெளிப்பான்கள் மற்றும் பெரிய டிராக்டர் மூலம் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.”

சாதாரண வெட்டுக்கிளிகள் உயிர் சங்கிலியின் ஒரு பகுதியாகும். இவை, களைகள் மற்றும் புல் வகைகளை உண்டு வாழும். இவற்றில் பல வகைகள் உள்ளன. கிருஷ்ணகிரியில் காணப்பட்ட வெட்டுக்கிளிகள் எருக்கஞ்செடியினை மட்டுமே உணவாகக் கொண்டு வாழும். இதுபோன்று, ஊட்டி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் காணப்படும் வெட்டுக்கிளிகள் உள்ளூர் வகையைச் சார்ந்தவை. இதுபோன்று 250 வகையான உள்ளூர் வெட்டுக்கிளிகள், தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றில் நன்மை செய்யக்கூடிய வெட்டுக்கிளிகளும் உள்ளன. இவற்றில் நீள்கொம்புடன் கூடிய வெட்டுக்கிளிகள் தீமை செய்யும் பூச்சிகளை உண்பதால், அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

எனவே, விவசாய பெருமக்கள் தமிழ்நாட்டில் வயல்களில் காணப்படும் உள்ளூர் வெட்டுக்கிளிகளைக் கண்டு, பாலைவன வெட்டுக்கிளிகள் என அச்சப்பட வேண்டாம். இருப்பினும், வெட்டுக்கிளிகள் கூட்டமாக தென்பட்டால், விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள வேளாண்மைத்துறை அல்லது தோட்டக்கலைத்துறை அல்லது வேளாண் பல்கலைக்கழகம் அல்லது வேளாண் அறிவியல் மையத்திற்கு தகவல் தெரிவித்து ஆலோசனை பெறலாம் என்றும் அல்லது வெட்டுக்கிளிகளின் புகைப்படம் எடுத்து உழவன் செயலியில் பூச்சி நோய் கண்காணிப்புப் பிரிவில் பதிவேற்றம் செய்தும் ஆலோசனை பெறலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

2020-2021ஆம் ஆண்டிற்கான ரூ.4,21,404 கோடி “ஆண்டுக் கடன் திட்டத்தை” வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 30.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான வங்கிகளின் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

உலகமே கொரோனா பேரிடரை சந்தித்துக் கொண்டிருக்கும் சவாலான இக்கால கட்டத்தில், கொரோனா தொற்றைத் தடுப்பதற்கும், இந்த நோயினால் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்கும், கடந்த நான்கு மாதங்களாக மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்து வருவதன் காரணமாக, தமிழ்நாட்டில் பூரண குணமடைந்து வீடு திரும்புவோர் எண்ணிக்கை மிக அதிகமாகவும், இந்த நோயினால் ஏற்படும் இறப்பு மிகக் குறைவாகவும் தமிழகத்தில் உள்ளது.

இச்சூழ்நிலையில், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகிறது. முன்னாள் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் திரு. ரங்கராஜன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திட ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து நான் உத்தரவிட்டேன். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வழிவகை செய்யும் விதமாக நடைபெறும் மாநில அளவிலான வங்கிகளின்

குழு (State Level Bankers Committee) கூட்டத்தில் கலந்து கொள்வதை நான் எனது கடமையாகக் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் சேவையாற்றும் நீங்கள், மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிடும் விதமாக, திரளாக இங்கே பங்கேற்றுள்ளீர்கள். அதற்காக உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

I thank all the Bankers who are attending this SLBC meeting. I need your full fledged support to the Government of Tamil Nadu for serving the people.

ஊரடங்கின் காரணமாக, நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தொழில்கள் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளன. இந்த சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் பல்வேறு முயற்சிகள் மற்றும் புதிய திட்டங்களை அறிவித்துள்ளன. பல்வேறு தொழில்களுக்கு இந்த நேரத்தில் அத்தியாவசியத் தேவை வங்கிகளின் கடன் உதவி தான்.

தமிழ்நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக கடன் வைப்பு தொகை விகிதம் (Credit Deposit Ratio) நூறு சதவீதத்தை காட்டிலும் அதிகமாகவே இருந்துள்ளது. இது, தமிழ்நாட்டில் தொழில் செய்வதற்கு தொழில் நிறுவனங்கள் கடன்களை பெற அதிகளவில் முன்வருகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், வங்கிகளும் முனைப்போடு செயல்படுவது தெளிவாகிறது. இது போன்ற ஒத்துழைப்பை நான் உங்களிடமிருந்து இக்கால கட்டத்தில் தொடர்ந்து எதிர்பார்க்கிறேன். இந்த ஆண்டிற்கான (2020–2021) 4,21,404 கோடி ரூபாய் முதலீடு உள்ள ஆண்டுக் கடன் திட்டத்தை வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆண்டு கடன் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு ரூபாய் 1,48,859 கோடி, குறு, சிறு தொழில்களுக்கு 92,075 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. 2020–2021ஆம் ஆண்டு தமிழ்நாடு வளர்ச்சிக்கு ஒரு உத்வேகம் வழங்குமென்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது.

மூன்று முக்கியமான துறைகளைப் பற்றி நான் இங்கு விவாதிக்க உள்ளேன்.

மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இருப்பு இருக்கின்றதால், டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி முழுவீச்சில் செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு கடன் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு ரூபாய் 1,48,859 கோடி, குறு, சிறு தொழில்களுக்கு 92,075 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது.

*– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

தமிழ்நாட்டில் இது வரை 20 இலட்சத்து 20 ஆயிரம் உழவர் கடன் அட்டைகள் (Kisan Credit Card) விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் அட்டைகளின் மூலம் விவசாயிகள் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வரை விதைகள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வாங்க, வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் / வங்கிகள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது. நீங்கள் அனைவரும் உங்கள் பகுதிகளில் சிறப்பு முகாம்களை நடத்தி, இந்த உழவர் கடன் அட்டைகளை அனைத்து விவசாயிகளுக்கும் தாராளமாக வழங்க வேண்டும்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு வேளாண் உற்பத்தி மிகவும் இன்றியமையாதது என்பதை கருத்தில் கொண்டு, விவசாயத்திற்கான கடன் உதவியை வங்கிகள் உடனுக்குடன் வழங்கி, விவசாயிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நான் உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இது வரை 20 இலட்சத்து 20 ஆயிரம் உழவர் கடன் அட்டைகள் (Kisan Credit Card) விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் அட்டைகளின் மூலம் விவசாயிகள் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வரை விதைகள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வாங்க, வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் / வங்கிகள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது. நீங்கள் அனைவரும் உங்கள் பகுதிகளில் சிறப்பு முகாம்களை நடத்தி, இந்த உழவர் கடன் அட்டைகளை அனைத்து விவசாயிகளுக்கும் தாராளமாக வழங்க வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) பல்வேறு புதிய திட்டங்களை சமீபத்தில் அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 50 இலட்சம் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்நிறுவனங்களில் சுமார் ஒரு கோடி மக்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள். தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில், MSME தொழில் துறையின் பங்கு ஏறத்தாழ 30 சதவீதமாகும். அரசின் சிறப்பு சலுகை திட்டங்களை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்ப்பது நம் அனைவரின் கடமையாகும். மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 3 இலட்சம் கோடி ரூபாய் கூடுதல் நிதி உதவி அதிகளவில் நம்முடைய மாநிலத்திற்கு கிடைக்க நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் கடனாக வழங்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு, குறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. 2018–2019ஆம் ஆண்டு 8,923 கோடி ரூபாய் அளவிற்கு புதிய கடனுதவி இத்துறைக்கு அளிக்கப்பட்டது. இத்துறைக்கு

“ஊரகப் பகுதி மக்களின் வருமானத்தைப் பெருக்கவும், உலக வங்கி உதவியுடன் ஊரக புத்தாக்கத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், புதிதாக தொழில்களை தொடங்கவும் 300 கோடி ரூபாய் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு வழங்கும் திட்டத்தினை 28.05.2020 அன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.”

அளிக்கப்படும் கடனுதவியின் வருடாந்திர வளர்ச்சி 4 சதவீதம் என்ற மிக குறைவான அளவிலேயே உள்ளது. இந்த சதவீதத்தை பெரிய அளவில் உயர்த்திட வேண்டும் என்று உங்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் குறு, சிறு நிறுவனங்கள் கடன் உத்தரவாத நிதியத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் கடனுதவி 2017–2018இல் 1,784 கோடி ரூபாயிலிருந்து 2018–2019இல் 2,543 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. கொரோனா தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார தாக்கத்தை போக்குவதற்காக இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கடனுதவி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், ஊரகப் பகுதி மக்களின் வருமானத்தைப் பெருக்கவும், உலக வங்கி உதவியுடன் ஊரக புத்தாக்கத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், புதிதாக தொழில்களை தொடங்கவும் 300 கோடி ரூபாய் கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு வழங்கும் திட்டத்தினை 28.05.2020 அன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.

தமிழ்நாட்டில் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும், வறுமையைப் போக்கவும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அக்குழுக்கள் சிறப்பாக செயல்பட மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அம்மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பாதுகாத்து வருகிறது. அந்த வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்க வங்கிகளுக்கு 2019–2020ஆம் ஆண்டுக்கு 15,000 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 13,301 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2020–2021ஆம் ஆண்டுக்கு 15,000 கோடி ரூபாய் கடனுதவி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் உப இலக்காக ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 5,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குறியீடுகளை வருகின்ற 2021 ஜனவரி மாதத்திற்குள் எய்தி சாதனை படைத்திட வேண்டும் என வங்கிகளை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களை குறு நிறுவனங்களாக உருவாக்கிட, பிணையில்லா கடன் உத்தரவாத நிதித் திட்டத்தின் கீழ், வங்கிகள் மூலம் 20 இலட்சம் ரூபாய் வரை பிணையம்

இல்லாக் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிறந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை பெருமளவில் தேர்வு செய்து அவர்களுக்கு கடன் உதவி வழங்கி தொழில் தொடங்கவும், வாழ்வாதாரம் மேம்பாடு அடையவும் நீங்கள் அனைவரும் உதவி புரிய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

"2020–2021ஆம் ஆண்டுக்கு 15,000 கோடி ரூபாய் கடனுதவி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் உப இலக்காக ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 5,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குறியீடுகளை வருகின்ற 2021 ஜனவரி மாதத்திற்குள் எய்தி சாதனை படைத்திட வேண்டும் என வங்கிகளை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்."

தமிழகத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தில் 35 இலட்சம் நபர்கள் பணிபுரிகிறார்கள். இவர்களுக்கான கூலித்தொகையை வங்கிகளுக்கு நேரடியாகச் சென்று வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தற்பொழுது, கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றதால் ஏழை மக்கள் அங்கு சென்று கூலித் தொகையை வாங்குவது கடினமாக இருக்கிறது. கொரோனா வைரஸ் நோய்த் தடுப்புப் பணியில் நாம் ஈடுபட்டுள்ள இந்தக் காலக்கட்டத்தில் (மூன்று மாத காலத்திற்கு மட்டும்), இந்த நோய் குறைகின்ற வரை அவர்கள் இந்தத் தொழில் புரிகின்ற இடங்களுக்கு வங்கிகளின் அதிகாரிகளே சென்று கூலித் தொகையை அவர்களிடம் நேரடியாக வழங்கினால் சரியாக இருக்கும்.

பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் கடனுதவி அளித்து வரும் அனைத்து வங்கியாளர்களுக்கும் நான் எனது நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

I place on record my sincere appreciation and gratitude to all the Bankers led by Indian Overseas Bank, the Lead Bank for Tamil Nadu, who have contributed immensely to the overall development of Tamil Nadu and I request you to continue the same in a big way during these trying times.

படமும்/செய்தியும்

எரிசக்தித் துறை சார்பில் ரூ.235.20 கோடி மதிப்பீட்டில் 16 துணை மின் நிலையங்கள் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு வட்டம், ஏமப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், திருப்பூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 15 துணை மின் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடையே கொரோனா தொற்று நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் உத்தரவின் பேரில் சேலம் மாநகராட்சியில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று **(COVID - 19)** தடுப்பு மற்றும் நோய் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் (Containment zone) மேற்கொண்ட தீவிர தொற்று நோய் தடுப்பு பணிகள்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடையே கொரோனா தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு விழிப்புணர்வு பணிகள் மாநகராட்சி நிருவாகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

விழிப்புணர்வு குறித்த விளக்கப்படங்கள்

மாநகர பகுதியிலுள்ள இரயில் நிலையம், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், உழவர் சந்தைகள், வணிக வளாகங்கள் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் மாநகராட்சி பணியாளர்கள் மூலம் கைகளை கழுவும் முறைகள் குறித்த விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மாநகராட்சிக்குட்பட்ட 16 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர் மற்றும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மூலம் தினந்தோறும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சிகிச்சை பெறவரும் பொதுமக்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு கொரோனா தொற்று நோய் தடுப்பு குறித்த தெளிவுரைகள் வழங்கப்பட்டது. கொரோனா தொற்று நோயின்

அறிகுறிகள் மற்றும் நோய் பரவும் விதம், மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உள்ளிட்ட விபரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அனைத்து சுகாதார மைய வளாகங்களிலும் விளக்கப்படங்கள் வைக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்கு சொந்தமான 62 வாகனங்களில் ஒலி பெருக்கிகள் மூலம் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையான கைகழுவும் முறைகள், சமூக இடைவெளி பின்பற்றுதல், பொது வெளிகளில் கட்டாயம் முக கவசம் அணிதல் போன்றவை குறித்து பொதுமக்கள் அதிகம் கூடும் அனைத்து இடங்களிலும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

“வீட்ரேஸ்” (VEETRACE) ஆன்ட்ராயிடு (Android)

பொதுமக்கள் கொரோனா தொற்று நோயிலிருந்து தங்களை பாதுகாத்திடவும், தொற்று நோய் பரவும் விதம் குறித்தும், மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளவும் மாநகராட்சி நிருவாகத்தால் “வீட்ரேஸ்” (VEETRACE) என்ற ஆன்ட்ராயிடு (Android) கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு வாகனம் மூலம் கைப்பேசி செயலியின் பயன்பாடு குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது.

கிருமி நாசினி மருந்து தெளிப்பு பணிகள்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களிலுள்ள 60 கோட்டங்களிலும், அனைத்து குடியிருப்பு பகுதிகள் மற்றும் உழவர் சந்தைகள், தினசரி சந்தைகள், வார சந்தைகள், இரயில் நிலையம், பேருந்து நிலையங்கள், அம்மா உணவகங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தினசரி 3 வேளை கிருமி நாசினி மருந்து தெளிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை 33 ஆயிரம் கிலோ பிளீச்சிங் பவுடர் மூலம் தயார் செய்யப்பட்ட 11 இலட்சம் லிட்டர் சோடியம் ஹைபோகுளோரைடு கிருமி நாசினியைக் கொண்டு 68 கைத்தெளிப்பான்கள், 15 இயந்திரத்தெளிப்பான்கள் மற்றும் 6 லாரிகள் மூலம் மாநகரின் அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி மருந்து தெளிக்கப்பட்டுள்ளது.

தினசரி சந்தைகள் மற்றும் உழவர் சந்தைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், கொரோனா தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பொதுமக்கள் சமூக இடைவெளியினை பின்பற்றிடும் வகையில் சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தினசரி சந்தைகள் மற்றும் உழவர் சந்தைகள் 28.03.2020 முதல் விசாலமான பகுதிகளுக்கு மாற்றி அமைக்கப்பட்டது.

தற்காலிகமாக மாற்றியமைக்கப்பட்ட உழவர் சந்தைகள் மற்றும் தினசரி சந்தைகள் மற்றும் காய்கறி, மருந்து பொருட்கள், மளிகைப் பொருட்கள் மற்றும் பால் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்கள் விற்பனைக் கடைகளில் பொதுமக்கள் சமூக விலகளை கடைபிடிக்கும் வகையில் இடைவெளி குறியீடுகள் அமைத்து அதனைப் பின்பற்றி வரும் பொதுமக்களுக்கு மட்டுமே அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது.

சமுதாய சமையல் கூடங்கள்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களின் 60 கோட்டப் பகுதிகளிலும் உள்ள ஆதரவற்றோர், வயதானோர், சாலையோரத்தில் வசிப்பவர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கும் உணவு அளிக்கும் வகையில் மாநகராட்சி நிருவாகத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் மாநகராட்சி நிருவாகம் மற்றும் போகா பவுண்டேசன், நோ புட் வேஸ்ட் (No Food Waste), ஐயப்பா ஆசிரமம், லோட்டஸ் ஆதரவு ஏற்போரின் இல்லம், அமுதசுரபி, வள்ளலார் குழு, பாரதி சேவா சங்கம் போதிமரம் ஆகிய 7 தன்னார்வ அமைப்புகளுடன் ஒன்றிணைந்து 6 இடங்களில் சமுதாய சமையல் கூடங்கள் அமைத்து, கடந்த 60 நாட்களில் மாநகரின் அனைத்து பகுதிகளிலும் 2,67,255 நபர்களுக்கு அவர்கள் இருப்பிடத்திற்கே சென்று மூன்று வேளையும் உணவு வழங்கப்பட்டது.

வீடற்றோருக்கான இரவு நேர தங்கும் விடுதிகள்

மாநகராட்சியின் அலுவலர்களின் தலைமையில் 4 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீடற்றோர்களுக்கான இரவு நேர தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் பாதுகாவலர்கள் தங்கும் விடுதிகளில் வசிப்பவர்கள் ஆகியோருக்கு மாநகராட்சி நிருவாகத்தின் சார்பில் தினந்தோறும் மூன்று வேளையும் உணவுடன் முட்டையும் வழங்கப்பட்டது. இவ்விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கும் வகையில் ஹோமியோபதி மாத்திரைகளும் வழங்கப்பட்டது.

கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து
நம்மை காத்துக் கொள்ள முகக் கவசம் கட்டாயம் அணியவும்.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் (Containment zone) **மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களில் கொரோனா தொற்று நோய் உடையவர்களுடன் நேரடியான அல்லது மறைமுகமான தொடர்பில் இருந்தவர்கள் என கண்டறியப்பட்டவர்கள் வசிக்கும் 19 கோட்டங்களில், 100 இடங்கள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டது. அப்பகுதிகளைச் சுற்றி தடுப்பு வேலிகள் அமைத்து 3 கிலோ மீட்டர் தூர அளவிற்கு அத்தியாவசிய கடைகள் உட்பட அனைத்து கடைகளும் செயல்பட தடை விதிக்கப்பட்டது.

கொரோனா தொற்று நோய் உடையவர்களுடன் நேரடியான அல்லது மறைமுகமான தொடர்பில் இருந்தவர்கள் என கண்டறியப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டவர் என அடையாள காணப்பட்டு, அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கான நோட்டீஸ் ஒட்டி 14 நாட்கள் வீடுகள் கண்காணிக்கப்பட்டது.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மருத்துவ அலுவலர்கள் தலைமையில் செவிலியர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அனைத்து குடியிருப்புகளுக்கும் சென்று, அங்கு வசிக்கும் பொதுமக்களிடம் அவர்களது உடல் நலம் குறித்து கேட்டறிந்து, காய்ச்சல், சளி மற்றும் இருமல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது.

மேலும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் காய்ச்சல் மற்றும் இருமல் உள்ளவர்கள் என கண்டறியப்பட்ட 1,601 நபர்கள், சுகாதாரப் பணிகள் மேற்கொண்ட 255 தூய்மைப் பணியாளர்கள், அப்பகுதியிலுள்ள 271 கர்ப்பிணி பெண்கள், அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்த 35 நபர்கள் மற்றும் 110 காவல் பணியாளர்கள் என மொத்தம் 2,272 நபர்களுக்கு கொரோனா தொற்று நோய் பரிசோதனை (Swab Test) செய்து, நோய்த் தொற்று இல்லை என கண்டறியப்பட்டது.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்ட 100 இடங்களில் உள்ள குடியிருப்புகள் மற்றும் பொதுவெளிகளில் வாகனங்கள் மற்றும் கைத்தெளிப்பான்கள் மூலம் தினசரி 5 முறை கிருமி நாசினி மருந்து தெளிக்கப்பட்டது. மேலும், இப்பகுதிகளில் உள்ள 12,475 குடியிருப்புகளுக்கு 3,118 கிலோ 750 கிராம் அளவிலான பிளீச்சிங் பவுடர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கான ஹோமியோபதி மாத்திரைகளும் வழங்கப்பட்டது.

நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கான நலன்கள்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சுகாதார பணிகள் மற்றும் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகளில் 1,048 நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மற்றும் 1,063 சுய உதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள் என மொத்தம் 2,111 தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பணிகளின்போது, இப்பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் முக கவசம், கையுறைகள், காலுறைகள், ஒளிரும் மேல் சட்டைகள் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, 4 மண்டலங்களுக்குட்பட்ட 60 கோட்டங்களிலும் பணிபுரியும் 2,111 தூய்மைப் பணியாளர்களுக்கும், முதற்கட்டமாக ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் 14 வகையான 6,114 தூய்மைப் பணி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களில் 602 ஆண் பணியாளர்கள், 446 பெண் பணியாளர்கள் என 1,048 நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு பச்சை நிறத்திலும் மற்றும் 500 ஆண் பணியாளர்கள்,

கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் இரத்தத்தில் பிராண வாயுவின் அளவை கண்காணிப்பது அவசியம்!

563 பெண் பணியாளர்கள் என 1,063 சுய உதவிக் குழு தூய்மைப் பணியாளர்களுக்கு நீல நிறத்திலும் புதிய சீருடைகள் வழங்கப்பட்டது. 01.04.2020 முதல் தினசரி 350 தூய்மைப் பணியாளர்கள் தங்கள் வசிப்பிடத்திலிருந்து பணிபுரியும் கோட்டங்களுக்கு வந்து செல்லுவதற்கு ஏதுவாக பேருந்து வசதி செய்து தரப்பட்டது. மேலும், ரூ.42,22,000 மதிப்பீட்டில் 2,111 தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு 20 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய பெட்டகம் வழங்கப்பட்டது.

நிறைமாத கர்ப்பிணி பெண்களுக்கு கொரோனா நோய் தொற்று பரிசோதனை

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நிறைமாத கர்ப்பிணி பெண்களுக்கு கொரோனா தொற்று நோய் மருத்துவ பரிசோதனை (SWAB TEST) மேற்கொள்ளும் வகையில், மாநகராட்சிக்குட்பட்ட 16 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இதுவரை 421 நிறைமாத கர்ப்பிணி பெண்களுக்கு கொரோனா தொற்று நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா தீவிர சிறப்பு சிகிச்சைப் பிரிவு

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொரோனா தொற்று நோய் பாதிப்பு ஏற்படும் நபர்களுக்கு, மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில், தேசிய நகர்புற ஆரம்ப சுகாதார

திட்டத்தின் கீழ், அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.14 குமாரசாமிபட்டி, அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண்.40 அண்ணா மருத்துவமனை வளாக உள்பகுதி மற்றும் கொண்டலாம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.49 அன்னதானப்பட்டி ஆகிய 3 இடங்களில் உள்ள நகர்புற சமுதாய சுகாதார நிலையத்தில் கொரோனா தீவிர சிறப்பு சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இத்தீவிர சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மெத்தை (Bed), இரும்பு கட்டில் (Cot), நோயாளிகளின் கட்டில் அருகில் மருத்துவ பொருட்களை வைக்கும் அலமாரி (Patient bedside locker), குளுகோஸ் ஸ்டேண்டு (Drip stand), நகரும் கட்டில் (Stretcher), இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்திலுள்ள ஆக்ஸிஜன் அளவினை கண்காணிக்கும் கருவி (Multi para monitor), ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் மற்றும் ஆக்ஸிஜன் அளவிடும் மானி (Oxygen cylinder with trolley and flow meter), இ.சி.ஜி கருவி (ECG machine), மருந்துகளை நோயாளியின் உடலில் சீரான அளவில் செலுத்த உதவும் கருவி (Intravenous infusion pump), அபு பேக் (Ambu bag), நாடிதுடிப்பு மற்றும் இரத்தத்திலுள்ள ஆக்ஸிஜன் அளவினை கண்காணிக்கும் கருவி (Pulse Oximeter), இரத்த அழுத்தத்தினை அளவிடும் கருவி (BP apparatus) என 13 வகையான மருத்துவ உபகரணங்கள் வாங்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகளினால் சேலம் மாநகராட்சி கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்புப் பணிகளில் முன்னோடியாக செயல்பட்டு வருகிறது.

எச்சரிக்கையாய் இருப்போம்! கொரோனாவை தவிர்ப்போம்!
கவனமுடன் இருப்போம்! கொரோனாவை வெல்வோம்!

விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின்சாரத்தை நிறுத்தும் திட்டத்தை தமிழ்நாடு அரசு கடுமையாக எதிர்க்கிறது

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 18.05.2020.

கொரோனா நோய்த் தொற்றால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீள்வதற்கு பல்வேறு பொருளாதார நிவாரணத் தொகுப்புகளை அறிவித்த தங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

இந்த நடவடிக்கைகள், இந்தியப் பொருளாதாரத்தைப் புதுப்பிக்க உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மாவட்ட மருத்துவமனைகளில் தொற்றுநோய்கள் பிரிவுகள் ஏற்படுத்துதல், வட்டார அளவில் பொது சுகாதார பரிசோதனைக் கூடங்கள் அமைத்தல் ஆகியவற்றுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது, வரவேற்கத்தக்க முக்கிய அம்சங்களாகும்.

இது சில பிரிவுகளுக்குப் பயனுள்ளதாக அமைந்திருப்பதை வரவேற்கும் அதே நேரத்தில், மாநில அரசுகள் கூடுதலாக கடன் பெறும் வரம்பில் தேவையில்லாத கடுமையான நிபந்தனைகளை முன் வைத்திருப்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

கொரோனா நோய்த் தொற்றை தொடர்ந்து, அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு காரணமாக மிகப்பெரிய வருவாய் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் கூடுதல் கடன் வாங்கும் வரம்பை மாநில ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.எஸ்.டி.பி) 3 சதவீதத்துக்கும் மேலாக இருக்க வேண்டும் என்று மாநில அரசுகள் கோரின. மாநில அரசுக்கு மிகப் பெரிய அளவிலான செலவுகள் உள்ளன. மாநில அரசுக்கு எதிர்காலத்தில் கிடைக்கும் வரி, வருவாயை வைத்து, திரும்ப செலுத்துவதற்கு ஏற்ற கடனை பெற வேண்டியுள்ளது. அவையெல்லாம் மத்திய அரசிடம் இருந்து வரும் மானியங்கள் அல்ல.

எனவே, கூடுதல் கடன் தேவைகளுக்காக தேவையில்லாத கட்டுப்பாடுகளை முன் வைப்பது காரணமில்லாததாகவே தெரிகிறது. மாநிலங்களுக்கு இடையே ஒருமித்த கருத்து எழுவதற்கு முன்பு, ஒரு சீரமைப்புத் திட்டத்தை வலுக்கட்டாயமாக திணிப்பது, கூட்டாட்சி தத்துவத்திற்கு உகந்தது அல்ல.

முன்மொழியப்பட்டுள்ள சீரமைப்புத் திட்டங்களை மாநிலங்களிடம் விரிவாக கலந்தாலோசித்திருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் நிலைமையின் அடிப்படையில் ஒருமித்த கருத்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

அந்த சீர்திருத்தங்களை திட்டங்களை கொரோனாவுக்கான மத்திய சிறப்பு மானியத்துடன் இணைத்திருக்க வேண்டுமே தவிர, மாநில அரசுகள் பெறும் கூடுதல் கடனுடன் இணைக்கக் கூடாது. அரசியல் சாசனத்தின் 293(3)ஆம் பிரிவுடன் மத்திய அரசின் அதிகாரத்தை இணைத்து, கூடுதல் கடன் வாங்கும் மாநிலங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது இதுவரை நிகழ்ந்திராத ஒன்று.

தமிழகத்தைப் பொருத்தவரை கூடுதல் கடன் பெற்று சீரமைப்புச் செய்யப்பட வேண்டிய 4 பெரிய அம்சங்களில், எந்த நிதியுதவியையும் எதிர்பார்க்காமல் மாநில அரசே மேற்கொள்கிறது. மின்சார பகிர்வுக்கான சீர்திருத்தங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

மின்சார சட்டத்தில் கொண்டுவர முன்மொழியப்பட்ட மாற்றங்களில் உள்ள பிரச்சினைகள் பற்றி நான் ஏற்கெனவே கருத்துக் கூறியிருக்கிறேன். விவசாயிகளுக்கு அளிக்கும் இலவச மின்சாரத்தை நிறுத்தும் திட்டத்தை தமிழக அரசு கடுமையாக எதிர்க்கிறது.

மானியங்களை தள்ளுபடி செய்யும் முறைகள், மாநில அரசுகளிடமே விடப்பட வேண்டும் என்பது தான் எங்களின் நிலைப்பாடாகும். எனவே, இந்தப் பிரச்சினையில் ஒருமித்த கருத்து ஏற்படும் வரையில், மின்சார பிரிவில் கட்டுப்பாடுகளுடன் கொண்டு வரப்படும் சீர்திருத்தத்தின் தேவைகளை நீக்கும்படி சம்மந்தப்பட்ட அமைச்சகத்துக்கு தாங்கள் உத்தரவிட வேண்டும்.

சீரமைப்புத் திட்டத்தை, மாநில அரசுகள் அமல்படுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும். மோசமான நிதிச் சிக்கல் இருக்கும் சூழலில் கடன் பெறுவதற்காக தேவையில்லாமல் கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பது, முக்கியமான செலவுகளில் தேவைப்படும் நிதியை மாநில அரசினால் பெற முடியாமல் போய் விடும்.

இந்தச் சூழ்நிலையில் மாநில அரசுகளுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்பதை நம்புவதோடு, சம்மந்தப்பட்ட வழிகாட்டியில் தேவையான மாற்றங்களை கொண்டுவர அமைச்சகத்தை அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நடிகர், நடிகை மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் என அதிகபட்சமாக 60 நபர்களைக் கொண்டு சின்னத்திரை படப்பிடிப்பை நடத்த அனுமதி வழங்கி உத்தரவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 30.05.2020

தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம் (FEFSI) மற்றும் தென்னிந்திய சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கத்தின் (STEPS) கோரிக்கையை ஏற்று, சில நிபந்தனைகளுடன் சின்னத்திரை படப்பிடிப்பை துவங்குவதற்கு 21.05.2020 அன்று நான் அனுமதி அளித்து உத்தரவிட்டிருந்தேன்.

அனுமதி அளிக்கப்பட்ட அதிகபட்ச 20 நடிகர், நடிகை மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களை கொண்டு படப்பிடிப்பை நடத்த இயலாத சூழ்நிலை உள்ளதாகவும், இதனை உயர்த்தி அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம் மற்றும் தென்னிந்திய சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கத்தினர், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கை குறித்து மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் என்னுடன் கலந்தாலோசித்தார்கள். மேற்படி சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்று அதிகபட்சமாக 60 நடிகர், நடிகை, தொழில்நுட்ப பணியாளர்களைக் கொண்டு சின்னத்திரை படப்பிடிப்பை 31.05.2020 முதல் நடத்த அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

சென்னையில் படப்பிடிப்பு நடத்துவதற்கு மாநகராட்சி ஆணையரிடமும், பிற மாவட்டங்களில் படப்பிடிப்பு நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவரிடமும் ஒவ்வொரு சின்னத்திரை தொடரின் முழுப்படப்பிடிப்பிற்கும் (Serial) ஒரு முறை மட்டும் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

சின்னத்திரை படப்பிடிப்பில் கலந்து கொள்ளும் அனைவரும் மத்திய, மாநில அரசுகள் அவ்வப்போது விதிக்கும் அனைத்து கட்டுப்பாடுகளையும் தவறாமல் பின்பற்ற வேண்டும். சின்னத்திரை தயாரிப்பாளர்கள் அதனை உறுதி செய்து கொண்டு, படப்பிடிப்புகள் நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களின் நினைவுத் தூண்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 01.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களின் நினைவுத் தூணினை திறந்து வைத்தார்கள்.

வீரபாண்டியகட்டபொம்மன்மரபில்வந்தவரும், ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதரின் இசைஞான குருவாக விளங்கியவரும், இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது மகாகவி பாரதியாரைப் போல் ஆங்கில அரசால் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டவரும், கரகரப்பிரியா ராகத்தின் சக்கரவர்த்தி என்று போற்றப்பட்டவரும், மகாகவி பாரதியார் கவிதைகள் எழுத ராகங்களை எடுத்துக் கொடுத்தவரும், பல்வேறு பட்டங்களும், பரிசுகளும் பெற்றவரும், வாழ்நாள் முழுவதும் இசைக்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருமான இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், 2018–2019ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின் போது, “இசை அறிஞர்களாலும், வித்வான்களாலும், இசை மகா சமுத்திரம் என்றும், மாமேதை என்றும் போற்றிப் புகழப்பட்ட இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் நினைவுத் தூண் அமைக்கப்படும்” என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களின் நினைவுத் தூணினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் மூலமாக செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் திரைப்படத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 1,000 குடியிருப்புகள் கட்டும் பணிக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 1,000 குடியிருப்புகளை கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள் - 01.06.2020

தமிழ்நாடு அரசின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள்

சம்மேளன உறுப்பினர்களின் நலனிற்காக 50 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அவ்விடத்தில் தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் மூலம் திரைப்படத் தொழிலாளர்களுக்கு 6,000 குடியிருப்புகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது முதற்கட்டமாக 1,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பெயரில் அரங்கம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் இரண்டாம் கட்டமாக ரூ.50 இலட்சத்திற்கான காசோலையை தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவரிடம் வழங்கினார்கள்.

பையனூரில் நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தின் திறப்பு விழாவில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பெயரில் அரங்கம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, முதற்கட்டமாக 1 கோடி ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.09.2019 அன்று தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு. ஆர்.கே. செல்வமணி அவர்களிடம் வழங்கினார்கள்.

அதன் தொடர்ச்சியாக, தற்போது இரண்டாம் கட்டமாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பெயரில் அரங்கம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு. ஆர்.கே. செல்வமணி அவர்களிடம் வழங்கினார்கள்.

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தகம் வாசிப்பு!

★ நமது சிறந்த நண்பன் புத்தகம்தான்.

★ மனச் சோர்விலும், இறுக்கத்தில் உழலும் போது நல்ல புத்தகங்கள் அமைதியையும், தெளிவையும், வழிகாட்டுதலையும், ஆலோசனைகளையும் வழங்கும்.

★ புத்தகங்கள் படிக்க நேரம் இல்லையென்று பெரும்பான்மையோர் கூறுகின்றோம்.

★ புத்தகப் படிப்பிற்காக தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும்.

★ குழந்தைகளையும் நூலகங்களுக்கு அழைத்து சென்று, புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தை அவர்களுக்கும் ஊட்டுவோம்..

★ புத்தகங்கள் நிறைந்த சூழலில் வளரும் குழந்தைகள், அறிவு உள்ளவர்களாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும், இனிய பண்புள்ளவர்களாகவும், நேர்மை, நாணயம் உடையவர்களாகவும் வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பவர்களாகவும் விளங்குவார்கள்.

★ நல்ல புத்தகங்களைப் படிப்பதால் அறிவு வளரும்; உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும்; எண்ணங்கள் நேர் பெறும், நமது ஆற்றல் பெருகும்; திறமைகள் மிளிரும்; உற்சாகம் ஊற்றெடுக்கும்; சோர்வு அகலும்; மனம் நிறைவு பெறும்; துணிவான முடிவுகள் எடுக்க புத்தகம் துணை புரியும்! வாழ்க்கை மேம்படும்! முன்னேற வழி காணும்!

★ வாசிப்பதை உயிர் என்று கொண்டவர்கள் மிக உயர்ந்த நிலையை அடைந்து உள்ளார்கள்.

படமும்/ செய்தியும்

சேலம் மாவட்ட அரசு விழா...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள், 11.06.2020 அன்று, சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் புதிய சேவை திட்டத்தின் கீழ், ரூ.441 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் பகுதியாக சேலம் மாநகர், வாரணாசி–கன்னியாகுமரி சாலையில் குரங்குசாவடி முதல் புதிய பேருந்து நிலையம் வழியாக அண்ணா பூங்கா வரையிலான 5.01 கி.மீ. நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள இரண்டடுக்கு மேம்பாலம் மற்றும் 42.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள லீபஜார் இரயில்வே மேம்பாலம் ஆகிய 2 புதிய மேம்பாலங்களை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள், 11.06.2020 அன்று, சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, பள்ளிக்கல்வித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.26.20 கோடி மதிப்பீட்டிலான 47 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, நீதித்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வேளாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, பள்ளிக் கல்வித் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, பதிவுத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.286.15 கோடி மதிப்பீட்டிலான 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ரூ.500 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நவீன தரவு மையத்திற்கு அடிக்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில், செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரி சிப்காட் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில், National Payments Corporation of India நிறுவனத்தின் மூலம் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நவீன தரவு மையத்திற்கு (Smart Data Centre) அடிக்கல் நாட்டினார்கள்.

அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 28.05.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், அஞ்சுகிராமத்தில் புதிய பறக்கின்கால் காலனி அடுக்குமாடி குடியிருப்பு திட்டப் பகுதியில் கட்டப்பட்டுள்ள 480 அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக்காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் தஞ்சாவூர், அரியலூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 560 அடுக்குமாடி குடியிருப்புகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் சென்னை, ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 1,232 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 1,314 மனை மேம்பாட்டுத் திட்டத்தையும் திறந்து வைத்தார்கள்.

பொதுப்பணித் துறையின் கீழ், செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் நொய்யல் ஆற்று அமைப்பில் விரிவாக்குதல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டம் துவக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்தும் வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 28.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களின் வழியாக செல்லும் நொய்யல் ஆற்று அமைப்பில் சரகம் 0.0 கி.மீ முதல் 158.35 கி.மீ வரை விரிவாக்குதல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், 230 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், பொதுப்பணித் துறை சார்பில் 16 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நிறைவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 17 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிடவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களின் வழியாக செல்லும் நொய்யல் ஆற்று அமைப்பில் சரகம் 0.0 கி.மீ முதல் 158.35 கி.மீ வரை உள்ள அணைக்கட்டுகள், குளங்கள், ஆறு மற்றும் கால்வாய்களை விரிவாக்குதல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், 230 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம், நொய்யல் ஆறு சீரமைவதுடன் 18 அணைக்கட்டுகள், 22 முறைசார்ந்த குளங்கள், சிதிலமடைந்த அணைக்கட்டு பகுதிகள், வாய்க்கால்கள், மணல் போக்கியின் மதகுகள், விவசாய நிலங்களுக்கு பிரிந்து செல்லும் வழங்கு வாய்க்காலின் மதகுகளை செப்பனிடுதல், நீர்வரத்து ஓடைகளை புதுப்பித்தல், ஓடைகளில்

உரிய தடுப்பணைகளை ஏற்படுத்துதல், குளங்களின் கரைகளை பலப்படுத்துதல், தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 7,000 ஏக்கர் விவசாய நிலங்கள் நேரடியாகவும், 11,000 ஏக்கர் விவசாய நிலங்கள் மறைமுகமாகவும் பயனடையும்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், தெள்ளூர் கிராமத்தின் அருகே செய்யாற்றின் குறுக்கே 5 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சின்னாரம்பட்டி கிராமத்தின் அருகே பாம்பாறு ஆற்றின் குறுக்கே 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கருங்காலி கிராமத்தின் அருகே அகரம் ஆற்றின்குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கொம்பேரிபட்டி கிராமம், மம்மானியூர் குக்கிராமம் அருகில் கன்னிமார் ஓடையின் குறுக்கே 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கசிவுநீர்குட்டை;

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆமந்தகடவு கிராமத்தில் புல எண். 135இல் உப்பாறு ஓடையின் குறுக்கே 1 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

என மொத்தம் 16 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், கண்டியூர் கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே தொலைகல் 102.17 கி.மீ–இல் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான செல்லூர் அணைகட்டை புனரமைத்தல்;

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், அமராவதி கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே தொலைகல் 95.63 கி.மீ–இல் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மாத்தூர் படுகை அணையை புனரமைத்தல்;

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஊத்துக்காடு கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே மைல் 53/3–4–இல் 2 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஊத்துக்காடு நீரொழுங்கியை புனரமைத்தல்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் கிராமம், பாலாறு குடியிருப்புக்கு அருகே பாலாற்றின் குறுக்கே 3 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஆர்.கோம்பை கிராமம், தொப்பையசாமிமலை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் மற்றும் வழங்கு கால்வாய் மூலம் வடுகம்பாடி பெரியகுளம் மற்றும் இதர 9 எண்ணிக்கையிலான குளங்களுக்கு 5 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீர் வழங்குதல்;

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், பிச்சனூர் கிராமம் க.ச.எண். 696இல் குமிட்டிபதி ஆற்றின் குறுக்கே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மதுக்கரை மார்க்கெட், ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலை பாலத்திற்கு அருகில் மஞ்சுபள்ளத்தின் குறுக்கே 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

என மொத்தம் 17 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் இயற்கை பானம் (FRESH JUICE)

நாட்டு நெல்லிக்காய் – ½ துண்டு (50 மி.லி.), துளசி – 20 இலைகள் (50 மி.லி.), இஞ்சி – ¼ துண்டு (சிறிய) (10 மி.லி.), எலுமிச்சை – ¼ துண்டு (சிறிய) (5 மி.லி.), மஞ்சள் தூள் – ¼ டீஸ்பூன் இவற்றை 150 மி.லி. தண்ணீரில் சேர்த்து பருகவும்.

அளவு : 250 மி.லி. பெரியவர்களுக்கு, 100 மி.லி. சிறியவர்களுக்கு என ஒரு நாளைக்கு இரண்டு வேளை பருகலாம்.

கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகளில் தமிழ்நாடு அரசு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு கடிதம் – 07.06.2020

என் இனிய தமிழ் சொந்தங்களுக்கு அன்பான வணக்கங்கள்.

குறித்த நேரத்தில் குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்படவுள்ள இந்த நல்ல தருணத்தில், இக்கடிதம் வாயிலாக உங்களோடு பேசுவதை நான் எனது கடமையாக கருதுகிறேன்.

பழந்தமிழ்க்குடியாகி நாம், பல தலைமுறைகளாக பல்வேறு சவால்களை எதிர் கொண்டு வெற்றி கண்டிருக்கிறோம். இயற்கை பேரிடர்களை எல்லாம் எதிர் கொண்டு வென்று காட்டியிருக்கிறோம். அதேபோல், இன்று உலகம் முழுவதும் பரவி, மனித குலத்தை அச்சுறுத்தி வரும் கொரோனா நோய்க்கு எதிராக நாம் போராடி வருகிறோம். இதிலும் நம் முன்னோர்களைப் போல் நாம் வெற்றி காண்போம் என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

கடந்த இரண்டு மாதங்களாக ஒரு காட்டாற்று வெள்ளத்தைக் கடப்பது போல, மிகவும் இக்கட்டான காலச் சூழ்நிலையை உங்களின் ஒத்துழைப்பு மற்றும் பேராதரவுடன் நாம் கடந்து வந்துள்ளோம். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை, நாம் அனைவரும் எதிர்கொள்கின்ற நெருக்கடிகள் கற்பனை செய்ய இயலாதவை. ஒரு திருமணத்திற்கோ, நெருங்கியவர்களின் இறுதி சடங்குகளிலோ கூட கலந்து கொள்ள முடியாத துயரங்களை எல்லாம் கொரோனா வைரஸ் நமக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

உண்மையில், இந்த கொரோனா வைரஸ் நம் இயல்பு வாழ்க்கையை பாதித்ததோடு மட்டும் அல்லாமல், நம் பொருளாதாரத்தையும் பாதித்து விட்டது.

நாம் அனைவரும், மனதிலும், எண்ணத்திலும், துணிவு கொண்ட பழம்பெரும் தமிழர்களின் சந்ததியினர்.

> “இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
> இடும்பை படாஅ தவர்”

என்ற தெய்வப் புலவர் வாக்கிற்கிணங்க, கடந்த காலங்களில் நாம் இதுபோன்ற பல்வேறு இடர்களை எதிர்கொண்டும், குறுக்கீடுகளை தவிடுபொடியாக்கியும் முன்னேறி இருக்கின்றோம். வறட்சியாக இருந்தாலும் சரி, சுனாமி போன்ற ஆழிப்பேரலைகள் ஆனாலும் சரி, தானே, வர்தா, ஒகி, கஜா போன்ற கோர புயல்கள் ஆனாலும் சரி, இவற்றையெல்லாம் சகோதர, சகோதரிகளாகிய உங்களின் பெரும் ஒத்துழைப்பாலும், நமது போராற்றலாலும், துரிதமான, திடமான நடவடிக்கைகளாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு அவற்றை எதிர்கொண்டு, பட்ட துன்பங்களை எல்லாம், வெயில் நேரத்து பனிபோல போக்கி, ஒரு வளமான எதிர்காலத்தினை உருவாக்கி, தமிழ்நாட்டினை வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட செய்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சீனாவில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டது பற்றி அறிந்தவுடன், ஜனவரி 2020 முதல் முனைப்புடன் செயல்பட்டு துரிதமான நடவடிக்கைகளை நான் முடுக்கிவிட்டேன். தமிழ்நாட்டில் 07.03.2020

அன்று நோய்த் தொற்று முதன் முதலில் கண்டறியப்பட்ட உடன் களத்தில் துரிதமாக பல்முனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சமூக பரவல் என்ற நிலைக்கு ஒரு போதும் தமிழ்நாடு ஆளாகிவிடக்கூடாது என்பதற்காக தான் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. "விலகி இருங்கள், விழித்திருங்கள், வீட்டிலேயே இருங்கள்" எனும் எனது கனிவான வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டு மக்கள் உரிய ஒத்துழைப்பை வழங்கி வருவதை நான் அறிவேன்.

சகோதர, சகோதரிகளே! இந்த ஊரடங்கினால் பல்வேறு கட்டுப்பாடுகளையும், சிரமங்களையும் நீங்கள் சந்தித்து இருப்பீர்கள். சுறுசுறுப்பான நீங்கள், வீட்டிலேயே முடங்கியிருப்பது அத்தனை எளிதான காரியமல்ல என்பதை நான் அறிவேன். இருப்பினும், இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படாத உலகத்திற்கே புதியதான இந்த தொற்றினை எதிர்கொள்ள பொருளாதார வளமிக்க, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளே திணறிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், அசாதாரண முன்னெச்சரிக்கையும், கட்டுப்பாடும் நமக்கு தேவைப்பட்டது. தனி மனித உறுதியும், ஒழுக்கமுமே, கொரோனா தொற்றில் இருந்து நம்மை தற்காக்கும் என்பதனை நாம் உணர்ந்து செயல்பட்டு வருகிறோம்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, மக்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு, எது சரியான பாதையோ, அதை தேர்ந்தெடுத்து, ஊரடங்கினை அமல்படுத்தியது. ஒரு கை மட்டும் ஓசை எழுப்ப முடியாது என்பதை அறிந்த அறிவார்ந்த நீங்கள், இந்த ஊரடங்கிற்கு முழுமையாக ஆதரவு அளித்து வருகிறீர்கள். ஒரு வேளை சுய ஒழுங்கின்றி, விதிகளை மதிக்காமல் அனைவரும் இருந்திருந்தால், நாம் இதைவிட மோசமான விளைவுகளை சந்தித்து இருப்போம்.

நமது கூட்டு முயற்சியினால், நோய்த் தொற்றிலிருந்து குணமடைந்து, இல்லம் திரும்புவோரின் சதவிகிதம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம். அதுமட்டுமல்ல உயிர் இழப்போரின் சதவிகிதமும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவு. இதற்காக மருத்துவ வல்லுநர்கள், பொது சுகாதார வல்லுநர்கள், பத்திரிகையாளர்கள், நடுநிலையாளர்கள், எல்லாம் தொடர்ந்து தமிழ்நாட்டை பாராட்டி வருகிறார்கள்.

உலகிற்கே புதுமையான இந்த வைரஸ் தொற்றினை வெற்றிகொள்ள ஆரம்பத்திலிருந்தே, அதாவது, இந்த தொற்று நோய் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்பிருந்தே இந்தியாவிற்கே முன்னோடியாக உங்களது அரசு திட்டமிட்டு, பல்முனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தொடக்கத்திலேயே நோயின் தன்மையை அறிந்துகொள்ளவும், நோய்த் தொற்றினை தடுக்கவும், பரிசோதனைகளை அதிகப்படுத்துவதுதான் ஒரே வழி எனக் கண்டறிந்து, மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் அதிக அளவில் மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். 04.06.2020 வரை தமிழ்நாட்டில் சுமார் 5.50 இலட்சம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பரிசோதனைகள் மூலமே 86 விழுக்காடு கொரோனா தொற்றுக் கொண்டவர்கள் எவ்விதமான அறிகுறிகளும் இல்லாதவர்கள் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. இதனை புரிந்துக் கொண்டதாலேயே, தொற்றுப் பரவலை எதிர்த்துப் போராட பல்வேறு நடவடிக்கைகளுடன் துரிதமாக செயலில் இறங்க நம்மால் முடிந்தது.

நோய்த் தொற்றின் தகவல்களை பகிர்ந்துக் கொள்ள வலைதளம் ஒன்று புதியதாக உருவாக்கப்பட்டது. வெளிநாடு மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருபவர்களை கண்காணிக்க, நமது விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் மாநில எல்லைகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் சோதனைச் சாவடிகளில் பணியமர்த்தப்பட்டனர். விமான நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் 2.20 இலட்சத்திற்கும் அதிகமானோர் பரிசோதனை செய்யப்பட்டு, தொற்று உள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். பின்னர், எல்லைப் பகுதிகள் முழுவதுமாக மூடப்பட்டன. இதனால் தொற்றின் ஆபத்து பெருமளவு குறைக்கப்பட்டது.

அதே நேரத்தில், சமயோசிதமாக விவசாய பணிகளுக்கும், சரக்கு போக்குவரத்திற்கும் அனுமதி அளித்து, அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது. இதனால் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் சிரமங்கள் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டு, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமும் தடுக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு, இந்த நோய் தொற்றினை பேரிடராக அறிவித்து 04.06.2020 வரை 4 ஆயிரத்து 333 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு துறையும், உள்ளாட்சி அமைப்புகளும், மாவட்ட நிருவாகங்களும் இணைந்து தனிமைப்படுத்துதல் மற்றும் மருத்துவ வசதிகளை உருவாக்குவதற்கும், பொது இடங்கள் மற்றும் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் கிருமிநாசினியை தெளிப்பதற்கும், தேவையான பொருட்களை கொள்முதல் செய்வதற்கும், வெளிமாநில தொழிலாளர்கள், முதியோர், கர்ப்பிணிப் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோருக்கு தினமும் உணவு அளிப்பதற்கும், நிவாரணங்கள் வழங்குவதற்கும், போதிய அளவு நிதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினை தடுக்க பல்வேறு தீவிர

நோய்த் தடுப்பு பணிகளையும், நிவாரணப் பணிகளையும். போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்கென, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பல்வேறு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள், பள்ளி மாணாக்கர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து 03.06.2020 வரை 378 கோடியே 96 இலட்சத்து 7 ஆயிரத்து 354 ரூபாய் வரப்பெற்றுள்ளது. இதனை மனமுவந்து அளித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், சிறுகச், சிறுக சேமித்த தங்கள் பணத்தை அளித்த பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவ, பொது சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஓய்வுபெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் ஒப்பந்தம் முறையில் பணி புரிய அனுமதிக்கப்பட்டனர். சுமார் 2,500 செவிலியர்கள் 6 மாத ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டனர். இன்று வரை புதியதாக 530 மருத்துவர்கள், சுமார் 2,323 செவிலியர்கள், மருத்துவர் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பணியில் சேர்க்கப்பட்டனர். மேலும் 1,500 ஆய்வக தொழில் நுட்ப வல்லுநர்களும், 2,715 பல்நோக்கு சுகாதார பணியாளர்களும், 334 சுகாதார ஆய்வாளர்களும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர்.

இந் நோய்த் தொற்றுக்கு சிகிச்சை அளிக்க 123 அரசு மருத்துவமனைகளும், 169 தனியார் மருத்துவமனைகளும் ஆக மொத்தம் 292 கோவிட் மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு மருத்துவசேவை மக்களுக்கு எளிதில் கிடைக்க தேவையான நடவடிக்கைகளை உங்களின் அரசு மேற்கொண்டது.

04.06.2020ஆம் தேதி வரை 14 இலட்சத்திற்கும் அதிகமான பரிசோதனை உபகரணங்களும், 2 கோடியே 83 இலட்சத்திற்கும் அதிகமான மூன்று அடுக்கு முகக் கவசங்களும், 37 இலட்சத்திற்கும் அதிகமான N95 முகக் கவசங்களும், 25 இலட்சத்திற்கும் அதிகமான முழு உடல் கவச உடைகளும், கொள்முதல் செய்யப்பட்டு, களப் பணியாளர்களுக்கு போதுமான அளவிற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் போதுமான அளவு கையிருப்பும் உள்ளது.மொத்தம் 3,384 வென்டிலேட்டர்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தயார் நிலையில் உள்ளன.

மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, தமிழ்நாடு முழுவதும் பரிசோதனை நிலையங்களை பரவலாக நிறுவி, நாட்டிலேயே அதிகபட்சமாக 72 மையங்களின் மூலம் தினமும் சராசரியாக 13 ஆயிரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், 04.06.2020 முதல் தனியார் மருத்துவமனைகளில் முதல்வரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொரோனா சிகிச்சை பெற மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏழைகள், சிறு தொழில் செய்வோர், சிறு வணிகம் செய்வோர் போன்றோரது பொருளாதார நிலை இந்த ஊரடங்கினால் பாதிப்படைந்துள்ளது என்பதை நான் அறிவேன். இப்பாதிப்புகளை களைய நம் மக்களுக்கு நிவாரணம் அளிப்பது ஒன்றே தீர்வாகும் என்பதை உணர்ந்துதான், தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருட்களை விலையின்றி வழங்குதல், ரொக்க நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை மிகுந்த அக்கறையுடன் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் அனைத்து 2.01 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோனா நிவாரண நிதியாக 1,000 ரூபாய் ரொக்கமாக ஏப்ரல் 2ஆம் தேதி முதலே வழங்கப்பட்டது.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், உங்களின் அரசு, மக்களின் உணவுப் பாதுகாப்பை சிரமேற்கொண்டு, உறுதி செய்திருக்கிறது. முன்பு எப்போதும் இல்லாத வகையில், மூன்று மாதங்களாக அதாவது, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கு அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய், பருப்பு போன்ற ரேசன் பொருட்களை விலையில்லாமல் வழங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். அந்த வகையில், ஏப்ரல், மே மாதங்களில் 2.01 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொருட்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், தற்போது ஜூன் மாதத்திற்கு ரேசன் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதுமட்டுமில்லாமல், வழக்கமாக வழங்கப்படும் அரிசியுடன், மூன்று மாதங்களுக்கு கூடுதல் அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) வாழும் மக்களுக்கு, ரேசன் பொருட்கள் அவர்களுடைய இல்லங்களுக்கே கொண்டு சென்று வழங்கப்பட்டது.

12.13 இலட்சம் கட்டுமான தொழிலாளர்கள், 2.9 இலட்சம் உடல் உழைப்பு தொழிலாளர்கள், 83,500 ஓட்டுநர் தொழிலாளர்கள், 14,667 முடித்திருத்துவோர், 22,486 சலவைத் தொழிலாளர்கள், 9,938 பனை தொழிலாளர்கள், 3.96 இலட்சம் தையல் தொழிலாளர்கள், 52,464 கைவினைப் பொருள் தொழிலாளர்கள், 1.03 இலட்சம் கைத்தறி மற்றும் பட்டு நெசவாளர்கள், 5,936 காலணி மற்றும் தோல் பொருள் பதனிடும் தொழிலாளர்கள், 1,295 ஓவியர்கள், 15,340 பொற் கொல்லர்கள், 66,021 வீட்டுப் பணியாளர்கள், 3.21 இலட்சம் பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், 65,715 விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் 15,019 சமையல் தொழிலாளர்கள்,

30,059 மண்பாண்டத் தொழிலாளர்கள் என 17 அமைப்பு சாரா தொழிலாளர்கள், 59,100 பட்டாசுத் தொழிலாளர்கள், 4.85 இலட்சம் மீனவர்கள், 37,385 நாட்டுபுறக் கலைஞர்கள், 46,979 சிறு வியாபாரிகள், 33,627 பூசாரிகள், 14,622 உலமாக்கள், 12,670 நரிக்குறவர்கள், 3,826 புதிரை வண்ணார்கள், 21,679 திரைப்பட தொழிலாளர்கள், 9,042 காதி தொழிலாளர்கள், 45,000 மலைவாழ் மக்கள், 6,553 மூன்றாம் பாலினத்தவர்கள், 30,780 தூய்மை பணியாளர்கள், 33,687 சீர்மரபினர் என 14 நல வாரிய தொழிலாளர்கள் மற்றும் 21,770 தீப்பெட்டி தொழிலாளர்களுக்கு ஏப்ரல், மே மாதங்களில் ரொக்க நிவாரணமாக கூடுதலாக 2,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், பதிவு செய்யப்படாத கைத்தறி நெசவாளர்கள், முடித்திருத்துவோருக்கும், அவர்களின் கோரிக்கையை ஏற்று 2,000 ரூபாய் ரொக்க நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் சுமார் 35.65 இலட்சம் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. 13.59 இலட்சம் கட்டுமான தொழிலாளர் குடும்பங்களுக்கும், 86,925 ஓட்டுநர் தொழிலாளர் குடும்பங்களுக்கும் இரண்டு மாதத்திற்கு கூடுதல் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டது.

அதேபோல், சுமார் 4 இலட்சத்து 30 ஆயிரம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய் இலவசமாக தமிழ்நாடு அரசு வழங்கியது. இது தவிர, முகாம்களில் தங்கியிருந்து புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உணவும் வழங்கப்பட்டது. புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இலவசமாக ரேசன் பொருட்களை முதலில் வழங்கிய அரசு, தமிழ்நாடு அரசுதான்.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளுக்கு ஊரடங்கு காலத்தில் எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. மேலும், விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கும், அரசு சேமிப்பு கிடங்குகளில் சேமித்து வைப்பதற்கும், அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களிலிருந்தும் முற்றிலுமாக விலக்கு அளிக்கப்பட்டது. குறைந்த வட்டியில் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படுகிறது.

பயிர்க்கடன், வீட்டுக்கடன், கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட கடன்கள் ஆகியவற்றை செலுத்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் அளிக்கப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்தவேண்டிய சொத்து வரி, குடிநீர் வரி செலுத்த அதே போல கால அவகாசம் வழங்கப்பட்டது.

25.03.2020 முதல் 05.07.2020 தேதி வரை, மின் கட்டணம் செலுத்த கடைசி தேதி உள்ள சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த தாழ்வழுத்த நுகர்வோர்கள், தங்களது மின்இணைப்பிற்கான மின் கட்டணத்தை 06.07.2020 தேதி வரை தாமத கட்டணம் மற்றும் மறு மின் இணைப்பு கட்டணம் இன்றி செலுத்தலாம். மேலும், தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை தவிர்த்து மற்ற மாவட்டங்களில் உள்ள தாழ்வழுத்த நுகர்வோர்கள் மின்கட்டணம் செலுத்த கடைசி தேதி 25.03.2020 முதல் 14.06.2020 தேதி வரை இருப்பின், அவர்கள் 15.06.2020 தேதி வரை தாமத கட்டணம் மற்றும் மறு மின் இணைப்பு கட்டணமின்றி செலுத்தலாம் என்ற சலுகை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா ஊரடங்கு காலத்தில் வெளிமாநிலத் தொழிலாளர்கள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றோர் ஆகியோரின் பசிப் பிணி போக்க அட்சய பாத்திரமாக அம்மா உணவகங்கள், சிறப்பு முகாம்கள், சமூக உணவுக் கூடங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றில் தினமும் சுமார் 8 இலட்சம் மக்களுக்கு சூடான, சுவையான, சுகாதாரமான உணவு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த உலகை அச்சுறுத்தும் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து பொதுமக்களை காப்பதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசோடு தோளோடு தோள் நின்று பணியாற்றி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், உள்ளாட்சித்துறை, வருவாய் துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை, உணவு வழங்கல் துறை, சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அரசுத் துறையினர் அனைவரையும் நாம் மனதாரப் பாராட்ட வேண்டும்.

களப் பணியாளர்களுக்கு உங்களது அரசு உரிய உபகரணங்களையும், அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டுவதற்காக கபசுரக் குடிநீர், ஜிங்க் மற்றும் மல்டி வைட்டமின் மாத்திரைகளும் சரியான நேரத்தில் வழங்கியது. மேலும், களப் பணியாளர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டால், அரசே சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தது. சென்னை காவல்துறை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய்த் தடுப்பு களப் பணிகளில் தன்னலம் பாராது அயராது உழைக்கின்ற தூய்மைப் பணியாளர்களின் உழைப்பை அங்கீகரிக்கவும், ஊக்கப்படுத்தவும், சுமார் 33 ஆயிரம் தூய்மை பணியாளர்களுக்கு மதிப்பூதியமாக 2,500 ரூபாய் வழங்கிடவும் நான் உத்தரவிட்டேன்.

தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் கீழ், ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 1 இலட்சத்து 40 ஆயிரம் பயனாளிகள் பயன்பெறும் வகையில், கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தேசிய மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள ஊரடங்கு காலத்திலேயே அனுமதித்து ஆணையிட்டது உங்கள் அரசு. இதனால் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு ஊரடங்கு காலத்திலும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டிருக்கிறது. மேலும், சுமார் 27 இலட்சம் பணியாளர்களுக்கு இரண்டு நாள் ஊதியம், அதாவது 123 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் தொழில் துறைக்கு மேலும் ஊக்கம் அளிக்க தகுந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. முழு நம்பிக்கை கொண்டு, தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்ற, பல்வேறு அணுகுமுறைகளை மிகுந்த அக்கறையோடு தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கொரோனா பாதிப்பிலிருந்து மீட்டெடுத்து, மறுகட்டமைப்பு செய்த புகழ்பெற்ற வல்லுநரும், நமது முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னருமான பேராசிரியர் திரு. ரங்கராஜன் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவையும் அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில் பெருமளவிலுள்ள தொழில்களுக்கு, குறிப்பாக குறு, சிறு மற்றும், நடுத்தர நிறுவனங்களுக்கு ஊரடங்கினால் ஏற்பட்ட பாதிப்புக்களை களைய கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:–

- தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் கடன் தவணைகளை திருப்பிச் செலுத்த மூன்று மாத கால அவகாசமும்,
- சிப்காட் மூலம் கடன் வழங்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கும், அதேபோன்று கால அவகாசமும், அளிக்கப்பட்டுள்ளது.
- கொரோனா தொற்றால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக "கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்" (CORUS) என்ற திட்டத்தினை 31.03.2020 அன்று அறிவித்தேன். இத்திட்டத்தின் கீழ் ஒரு நிறுவனத்திற்கு 25 இலட்சம் ரூபாய் வரை தமிழ்நாடு அரசின் 6% வட்டி மானியத்துடன் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 01.06.2020 தேதி வரை 855 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் 112 கோடி ரூபாய் கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- கோவிட்19 மருந்து உற்பத்தி மற்றும் உபகரணங்கள் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் 50 நிறுவனங்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்படுகிறது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ரோமானிய மற்றும் கிரேக்க நாடுகளுடன் கடல் வணிகம் செய்த வரலாற்று பெருமையை கொண்ட நாடு, நமது தமிழ்நாடு. பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியா போன்ற நாடுகளில் தங்கள் நிறுவனங்களை தொடங்கவும், ஏற்கெனவே அந்நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நாடுகளிலிருந்து இடமாற்றம் செய்யும் எண்ணம் கொண்டிருப்பதை, நமக்கு சாதகமாக பயன்படுத்தி, தமிழ்நாட்டை ஒரு முக்கிய உற்பத்தி மையமாக உருவாக்க, சிறப்பு முதலீட்டுப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு, முதலீடுகளை ஈர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

முதல் கட்டமாக அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் உள்ள 17 நிறுவனங்களுடன் சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மே மாதம் 26ஆம் தேதியன்று கையெழுத்தானது. இதன் மூலம் நம் இளைஞர்கள் 47 ஆயிரம் பேர் வேலை பெற உள்ளனர்.

வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு திரும்ப விரும்பும் நம் மக்களை, அழைத்துவர மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் தலைமையில் குழுக்களும், இப்பணிகளுக்கென தனியே வலைதளமும் அமைக்கப்பட்டது. அதன் மூலம் அவர்கள் சிரமம் ஏதுமின்றி தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்படுகின்றனர்.

மாண்புமிகு அம்மாவின் அரசு உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு. மக்கள் எதனை எண்ணுகின்றார்களோ, அதனை நிறைவேற்றுகின்ற அரசு. எனவேதான், நெருக்கடியான இந்த காலக் கட்டத்திலும், மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளை எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில், அவற்றை தங்கு, தடையின்றி பூர்த்தி செய்து வருகிறது. கடந்த சில மாதங்களாக நாம் எதிர் கொண்டு வரும் சவால்களிலிருந்து முழுமையாக மீளும் வல்லமையும், நம்பிக்கையும் தமிழர்கள் ஆகிய நம் அனைவருக்கும் உள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தமிழ்நாட்டு மக்களை மீட்கும் இந்த நடவடிக்கையில் சரியான வழிமுறைகளை எந்தவிதமான அச்சமின்றி நேர்மையுடனும், உண்மையுடனும், உங்களின் மக்கள் நல அரசு எடுத்து வருகிறது. மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், உள்ளாட்சித்துறை, வருவாய் துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை, உணவு வழங்கல் துறை மற்றும் இதர அரசுத்துறை ஊழியர்கள் அனைவரும் அரசிற்கு பக்கபலமாக இருந்து இரவை பகலாக்கி, விழிகளை விளக்காக்கி, கண்துஞ்சாது, பசிநோக்காது, தன்னலம் பாராமல், அயராது களப்பணி ஆற்றி வருகின்றனர். அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாக

இவ்வேளையில் உரித்தாக்குகின்றேன். தமிழ்நாட்டு மக்கள் முழு ஆரோக்கியத்துடனும், நலமும், மகிழ்ச்சியும் நிறைந்து வாழ்வதற்காக அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக உங்களின் அரசு, துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது மக்களுக்கான அரசாக, மக்களுடன் என்றென்றும் இணைந்திருக்கும் என்பது உறுதி.

ஊரடங்கினை அரசு அமல்படுத்தினாலும், பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தாலும், மக்களின் முழு ஒத்துழைப்பு இல்லை என்றால் இந்நோய் பரவலை தடுப்பது சாத்தியம் ஆகாது. வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும், பொதுமக்கள் அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கை கழுவ வேண்டும். மேலும், பொதுமக்கள் கூடுமானவரை தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக வெளியில் செல்லும் போது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை முறையாக கடைப்பிடித்தும், ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளையும், உணவுப் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மக்களின் வாழ்வாதாரத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் காக்க வேண்டும். இந்நிலையில், இதுவரை நாம் பெற்றுள்ள அனுபவத்தைக் கொண்டு, முன் எச்சரிக்கையுடன் ஒவ்வொருவரும், தம் கடமையை உணர்ந்து, மேற்சொன்னவற்றையும், அரசு அறிவிக்கும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றி, இந்த தொற்று நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு அரசுத் துறைக்கும் வகுக்கப்பட்டுள்ள நிலையான வழிமுறைகளை (SOP) கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு அரசும், மக்களும் இணைந்து செயல்பட்டால்,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

எனும் குறளுக்கு ஏற்ப, நமது செயல்பாட்டால். தமிழ்நாடு கொரோனா தொற்று பாதிப்பிலிருந்து மீண்டு, அனைத்து துறைகளிலும் வெற்றி நடை போடும் என்பதனை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகக்கவசம் கட்டாயம் அணிவோம்!
சமூக இடைவெளியை அனைவரும்
கடைப்பிடிப்போம்!

தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்ப்போம்!
கொரோனாவை வெல்வோம்!

ஆழியாறு அணையிலிருந்து 1,156 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட ஆணை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 05.06.2020

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலைவட்டம், ஆழியாறு அணையிலிருந்து ஆழியாறு பழைய ஆயக்கட்டு ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடக் கோரி ஆனைமலை வட்டார ஆழியாறு பழைய ஆயக்கட்டு விவசாயிகள் நலச் சங்கம் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்தன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியாறு 5 பழைய வாய்க்கால்களின் மூலம் பாசனம் பெறும் நிலங்களின் முதல்போக பாசனத்திற்கு 07.06.2020 முதல் 31.10.2020 முடிய 146 நாட்களுக்கு, தற்போதைய நீர் இருப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர்வரத்தினைப் பொறுத்து, ஆழியாறு அணையிலிருந்து, 1156 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டத்தில் உள்ள 6,400 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பப்பாளி மிட்டாய்

ஓர் ஆண்டிற்கு பப்பாளி ஒரு ஏக்கருக்கு 60 டன் வீதம் விளைகிறது. இருப்பினும், பலவித காரணங்களால் நம்மிடையே அதிகமாக விரும்பிச் சாப்பிடப்படுவதில்லை. பப்பாளி உணவு செரிமானத்திற்கு நல்லது.

மேலும், மூல நோய், ஈரல், கணையம், மற்றும் அஜீரணம் சம்மந்தப்பட்ட கோளாறுகளுக்கும் பப்பாளி உண்பது சிறந்ததாகும். பப்பாளியில் உயிர்ச்சத்துக்களும், தாது உப்புக்களும் அதிகமாக உள்ளன. பப்பாளிக்காய் மற்றும் பழத்திலுள்ள உணவு சத்துக்களின் விவரம்

சத்துக்கள்	காய்	பழம்
புரதம் (கிராம்)	0.7	0.6
கொழுப்பு (கிராம்)	0.2	0.1
சக்தி (கிலோ.கலோரி)	27.0	32.0
கார்போ ஹைடிரேட் (கிராம்)	5.7	7.2
சுண்ணாம்புச் சத்து (மி.கி)	28.0	17.0
பாஸ்பரஸ் (மி.கி)	40.0	13.0
இரும்பு (மி.கி)	0.9	0.5
கரோட்டின் (மி.கி)	0.0	666
தயாமின் (மி.கி)	0.01	0.04
ரைபோபிளோவின் (மி.கி)	0.01	0.25
நயாசின் (மி.கி)	0.1	0.2
வைட்டமின் சி (மி.கி)	12	57

“பப்பெய்ன்” என்ற பொருள் பப்பாளிக் காயிலிருந்து தயாரிக்கப்படுகிறது . இது மருந்துப் பொருள்களுக்கு மிகவும் பயன்படுகிறது. பப்பாளிக்காய் மற்றும் பழத்திலிருந்து பலவிதமான உணவுப் பொருட்களையும் தயாரிக்கலாம்.

கடைகளில் “டியூட்டி புரூட்டி” என்று விற்கப்படும் பப்பாளி மிட்டாய் (Papaya Candy) தயாரிக்கலாம் எப்படி ?

தேவையான பொருட்கள்:

முதிர்ந்த பப்பாளிக் காய்	1
சர்க்கரை	தேவையான அளவு
எஸ்செனஸ்	தேவையானது

செய்முறை

நன்கு முதிர்ந்த பழுக்காத பப்பாளிக் காயை மரத்திலிருந்து பறித்தவுடன் அதன் மீது சில கீறல்களை செய்து பாலை வடியவிடவும், நன்றாக கழுவி விட்டு, தோல் கொட்டைகளை நீக்கவும்; தேவையான அளவிற்கு சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும் நறுக்கிய துண்டுகளை 2 சதவீதம் உப்பு, 1 சதவீதம் கால்சியம் குளோரைடு கலந்த குளிர் நீரில் அரைமணி நேரம் ஊறவிடவும். ஊறிய காய்த் துண்டுகளை கழுவி விட்டு அதன் எடையில் பாதியளவு சர்க்கரை சேர்க்கவும்.

சர்க்கரை கலந்த காயை சிறிது நேரம் வேக விடவும் (5 நிமிடம்). நான்கு மணிநேரம் கழித்து மேலும் சிறிது சர்க்கரை சேர்த்து கொதிக்க விட்டு இறக்கவும். தேவையான எஸ்செனஸ், கலர் 1 சதவீதம் சிட்ரிக் அமிலம் ஆகியவற்றையும் சேர்க்கவும். காயிலுள்ள சர்க்கரை அளவு 70 சதவீதம் ஆகுமளவு சிறிது சிறிதாகச் சர்க்கரை சேர்த்து மேலே கூறியபடி கொதிக்கவிட்டு இறக்கவும்.

70 சதவீதம் சர்க்கரைப் பதம் வந்தவுடன் காயைச் சர்க்கரைப் பாகிலிருந்து பிரித்து ஒரு தட்டில் பரப்பி உலர விடவும். உலர்ந்த துண்டுகளை சுத்தம் செய்த பாட்டில்கள் நிரப்பி சீல் செய்து விடவும், இம்மாதிரி தயாரித்த கேண்டியை, கேக், பன், ரொட்டி, ஐஸ்கிரீம் போன்றவை தயாரிக்கும்போது உபயோகிக்கிக்கலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
தோட்டக்கலைத் துறை
கோயம்புத்தூர்.

நாம் மறந்த முன்னோர்கள் உணவு நம்மை காக்கும் அருமருந்து

சிறுதானியமும், தேகப்பலன்களும்

சாமை சோறு, ஆமை ஆயுள் !
குதிரைவாலி தந்திடுமே
குறைவில்லா வாழ்வு !
கோல்ஊன்றி நடப்பவரும்
கம்மங்கூழால் காலூன்றி நடப்பார்.
திணைஉண்டால்
தேக்குபோல் உடல்வலு உண்டாகும்.
வரும் நோய்தனை
வரகால் விரட்டு.
ராகியில் பலகாரம்
கால்சியத்தின் அதிகாரம்.
சிறுதானியத்தை உண்போம் வளமாய் வாழ்வோம் !!!

சிறுதானிய வகைகள்:

சிறுதானியம் என்பது வரகு, சாமை, திணை, கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, சோளம் ஆகிய உருவில் சிறியதாக உள்ள தானிய வகைகளை குறிக்கும். பழங்காலத்தில் சிறுதானியம் உணவில் பெரும் பங்கு வகித்து இருக்கின்றது. சிறுதானியத்தில் புரதச்சத்து, நார்ச்சத்து, மிகுந்தும், பைடிக் அமிலம் குறைந்தும் இரும்பு, கால்சியம் மற்றும் வைட்டமின்களைக் கொண்டது. இவை மிகக்குறுகிய காலத்தில் சாதாரண மண்ணில், வறட்சி நேரத்திலும் வளரக்கூடியவை ஆகும். எளிதில் ஜீரணமாகக்கூடிய தன்மையுடையது. மனிதர்களை பாதிக்கும் பல நோய்களிலிருந்து பாதுகாக்கும் ஆற்றல் மிக்கது.

உண்ணுவதால் ஏற்படும் பயன்கள்:



கேழ்வரகு: ஏழைகளின் உணவாக முன்னொரு காலத்தில் இருந்தது. கேழ்வரகில் ஊட்டச்சத்துக்கள் அதிகம். சுண்ணாம்புச்சத்து. இரும்புச்சத்து, பாஸ்பரஸ், வைட்டமின் பி என பல சத்துக்களை கொண்டதாகும். கேழ்வரகு சாப்பிடுவதனால் சருமம் பொலிவாகும். எலும்புத் தேய்மானம், இரத்தசோகை, இதயநோய், மலச்சிக்கல் போன்றவற்றை சரிசெய்யும். உடல்பருமனை குறைக்க பெரிதும் உதவிடும். கேழ்வரகை “ராகி” என்றும் கூறுவர்.

குதிரைவாலி: சர்க்கரை நோயாளிகளுக்கு சிறந்த உணவாகும். உடலில் உள்ள கொழுப்பை குறைத்து உடல் எடையை கட்டுக்குள் வைத்திருக்க பெரிதும் உதவுகிறது. குதிரைவாலியில் கால்சியம் சத்து மிகுந்துள்ளது. குதிரைவாலியை தொடர்ந்து சாப்பிடுவதனால் உடல் பலம் பெறுவதோடு செரிமான சக்தியை அதிகரிக்கின்றது.

சாமை: அனைத்து வயதினருக்கும் ஏற்றது. சாமையில் தயாரித்த உணவு நார்ச்சத்து நிறைந்தது ஆகும். அது மட்டுமின்றி இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தி இரத்த சோகையை போக்கும். நம் உடலில் தங்கியுள்ள நச்சுப் பொருட்களை வெளியேற்றி உடலை சீராக வைக்க உதவுகிறது. சாமை ஆண்மைக்கு சிறந்த மருந்தாகும்.

திணை: இதய நோய்கள் வராமல் தடுக்கின்றது. பார்வைத் திறனை மேம்படுத்த உதவும். உடனடி சக்தி தரும். இதை தினந்தோறும் ஒருவேளை உணவாக சாப்பிட்டு வரும்போது வயிறு, குடல் போன்ற உறுப்புகளை வலுப்படுத்தும். திணையில் கஞ்சி செய்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் தசைகள் நன்கு வலுப்பெறும்.

தமிழ்நாடு அரசு

கொரோனா வைரஸ்

கோவிட்-19

கொரோனா வைரஸ் என்றால் என்ன ?

இது வேகமாக பரவக்கூடிய ஒரு தொற்று.

நோயின் முக்கிய அறிகுறிகள்	கீழ்காணும் அறிகுறிகளும் சேர்ந்து வரலாம்

சளி

உடல்சோர்வு

வறட்டு இருமல்

தலைவலி

காய்ச்சல்

நாக்கில் சுவை இழப்பு

மூச்சுத் திணறல்


மூக்கில் நுகர்வு தன்மை இழப்பு

கொரோனா வைரஸ் நோய் பரவும் விதம்



இருமல் மற்றும் தும்மல் வரும்போது வெளிப்படும் நீர்த்திவலைகள் படிந்துள்ள பொருட்களை தொடும்போது கைகள் மூலமாக மற்றவர்களுக்கு பரவுகிறது. ஒருவருக்கு வரும் தொற்று ஒரு மாதத்தில் 406 பேருக்கு பரவும்

நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்

பொது

- அடிக்கடி கைகளை சோப்பு போட்டு நன்கு தேய்த்து கழுவவேண்டும்.
  - ★ இரண்டு மணிக்கு ஒரு முறை
  - ★ இருமிய பின்பும், தும்மிய பின்பும்
  - ★ உணவு சமைப்பதற்கு முன் பின்
  - ★ உணவு சாப்பிடுவதற்கு முன் பின்
  - ★ கழிவறையை பயன்படுத்திய பின்
  - ★ விலங்குகளை கையாண்ட பின்

அச்சப்பட வேண்டிய அவசியமில்லை.
ஆனால், ஆரோக்கியத்திற்கான முன்னெச்சரிக்கை அவசியம்.

★ குப்பைகளை தொட்ட பின்

★ கைகள் அழுக்குடன் – கறையுடன் தென்பட்டால்

★ நோய் அறிகுறி உள்ளவர்களை கவனித்துக் கொள்ளும்போது

- இருமும் போதும், தும்மும் போதும், வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை கொண்டு மூடிக் கொள்ளவேண்டும்.
- கண், மூக்கு, வாயைத் தொடுவதை தவிர்க்க வேண்டும்.
- காய்ச்சல், இருமல், சளி உள்ளவர்கள் பொதுமக்கள் கூடும் இடங்களுக்கு செல்வதையும், விழாக்களில் கலந்துகொள்வதையும் அறவே தவிர்க்க வேண்டும்.

- அத்தியாவசியப் பொருட்களை வாங்க செல்பவர்கள் முகக்கவசம் அணிவதோடு, ஒருவருக்கொருவர் கூடிப்பேசுவதை தவிர்க்க வேண்டும். அதோடு சமூக இடைவெளியான 3 அடியை கடைப்பிடிக்கவும்.

வீட்டில்

- 1 லிட்டர் தண்ணீரில் 10 மிலி பிளீச்சிங் பவுடர் கலந்து தரையை சுத்தம் செய்து, வீட்டை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.
- கதவின் கைப்பிடி, படிக்கட்டின் கைப்பிடி, மின்தூக்கியின் பொத்தான், மேஜையின் மேற்பரப்பு ஆகியவற்றை கிருமி நாசினி கொண்டு சுத்தமாக துடைத்து பராமரித்தல் வேண்டும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல்

- நடைப்பயிற்சி, உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.
- பழங்கள், காய்கறிகள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- பால், மோர், இளநீர் போன்றவை அருந்தலாம்.
- நீராவி பிடிக்கலாம் (Steam Inhalation)
- மிதமான சூடான பாலில் சிறிதளவு மஞ்சள், மிளகு, பனங்கற்கண்டு சேர்த்து பருகலாம்.

கொரோனா வைரஸ் நோயைக் கண்டு வீணாக பதட்டமடைய வேண்டாம். அதே நேரத்தில் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

- உங்கள் இருப்பிடத்திலேயே தினமும் 15–20 நிமிடங்கள் சூரிய ஒளியில் நிற்கவும் (காலை 10 மணிக்குள், மாலை 4 மணிக்கு பிறகு).
- ஒரு நாளைக்கு 2 முதல் 3 முறை வெதுவெதுப்பான நீரில் கல் உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து தொண்டையில் படுமாறு வாய் கொப்பளிக்கவும்.
- சுக்கு, திப்பிலி, ஆடதோடா போன்ற 15 மூலிகைகள் கொண்ட கபசுரக் குடிநீர் அருந்தலாம். ஒரு தேக்கரண்டி கபசுரப் பொடியுடன் 240 மி.லி. தண்ணீர் சேர்த்து நன்றாக கொதிக்க வைத்து, அது 60 மி.லி. அளவு சுண்டியவுடன் நாள் ஒன்றுக்கு ஒரு வேளை உணவுக்கு முன் (குழந்தைகளுக்கு 30 மி.லி. பெரியவர்களுக்கு 60 மி.லி.) அருந்த வேண்டும். அதோடு, மருத்துவரின் ஆலோசனைப்படி வைட்டமின் மாத்திரைகள் மற்றும் ஜிங்க் மாத்திரைகள் எடுத்துக்கொள்ளலாம்.



நாள்பட்ட நோய் உள்ளவர்கள்

- வீட்டில் வயதானோர், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், நாள்பட்ட வியாதி உடையோர் வெளியே போகாமல் தனியாக இருக்க வேண்டும்.
- நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், தீவிர மூச்சுத் திணறல் மற்றும் காசநோய், இருதய நோய், சிறுநீரக கோளாறு, புற்று நோய் உள்ளவர்கள் மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை தொடர்ந்து உட்கொள்ளவேண்டும்.

கொரோனா வீட்டு கண்காணிப்புப் பெட்டி (Corona Home Monitoring Kit)

- தெர்மா மீட்டர்
- நாடித்துடிப்பு பிராணவாயு அளவிடும் கருவி (Pulse Oximeter)
- கையுறை
- கைளுக்கு கிருமி நாசினி போன்ற பொருட்களுடன் மருத்துவப் பெட்டி வீட்டில் வைத்திருக்க வேண்டும்

முகக் கவசம் அணிந்து, சமூக இடைவெளியைக் கடைபிடிக்கவும்

தினமும் கண்காணிக்கப் பட வேண்டியவை

- தங்களது உடல் நிலையை காலையிலும், மாலையிலும் கூர்ந்து கண்காணித்து வரவேண்டும்.
- உடலின் வெப்ப நிலை 100 டிகிரி பாரன்ஹீட் குறைவாக இருக்க வேண்டும்.
- நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 70 லிருந்து 100க்குள் இருக்க வேண்டும்.
- சுவாசம் சராசரியாக நிமிடத்திற்கு 16–18 முறை சுவாசிக்க வேண்டும்.
- இரத்தத்தில் பிராணவாயு அளவு 95% முதல் 100% வரை இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அளவுகள் குறைந்தோ அல்லது மேற்பட்டோ இருந்தால் உடனே மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

வீட்டில் தனிமைப்படுத்தி இருத்தல் (Home Quarantine)

தனிமைப்படுத்துதல் உங்களை ஒதுக்குவதற்கு அல்ல; உங்கள் குடும்பத்தினரின் பாதுகாப்பிற்கே.

- வீட்டில் தனி அறையில் தனிமைப்படுத்திக் கொண்டு சில வழிமுறைகளை கடைப்பிடிப்பதையே வீட்டில் தனிமைப்படுத்தி இருத்தல் (Home Quarantine) ஆகும்.
- வீட்டில் உள்ளவர்களுக்கும், பிறருக்கும் நோய்க்கிருமி பரவுவதைத் தடுப்பதற்காக வீட்டில் தனிமைப்படுத்தி இருத்தல் வேண்டும்.
- வெளிநாடு அல்லது வேறு மாநிலத்திலிருந்து திரும்பியவர் அல்லது கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரோடு உடன் இருந்தவர் தங்களை வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

- தனிமைப்படுத்தப்பட்ட நபருக்கு, நல்ல காற்றோட்டமான அறை மற்றும் தனி கழிப்பறை ஒதுக்க வேண்டும். அந்த நபர் அவருக்கு ஒதுக்கப்பட்ட அறையிலேயே இருக்க வேண்டும்.
- வீட்டில் ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமே தனிமைப்படுத்தப்பட்ட நபருக்கு பராமரிப்பு பணிகளை செய்தல் வேண்டும்.
- வீட்டில் உள்ள அனைவரும் தனி மனித இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும்.
- வீட்டில் உள்ள அனைவரும் மூன்றடுக்கு முகக்கவசத்தை தொடர்ந்து அணிந்திருக்க



மருத்துவர் ஆலோசனை இல்லாமல் மருந்து கடைக்குச் சென்று மருந்து வாங்கி உண்பதை தவிருங்கள்.

வேண்டும். 8 மணி நேர பயன்பாடு அல்லது ஈரத் தன்மை ஏற்பட்டவுடன் முகக்கவசத்தை மாற்ற வேண்டும்.

- தனிமைப்படுத்தப்பட்டவர் பயன்படுத்தும் பொருட்களை மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது. அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்களையும் தனிமைப்படுத்த வேண்டும்.
- தனிமைப்படுத்தப்பட்டவரின் உடைகள், படுக்கை விரிப்பு போன்றவற்றை உதறாமல், முகக்கவசம் மற்றும் கையுறை அணிந்து தனியாக சோப்பு நீரில் ஊறவைத்து துவைத்து வெயிலில் காய வைக்க வேண்டும்.
- தனிமைப்படுத்தப்பட்ட நபர் உள்ள அறை மற்றும் அடிக்கடி தொடும் பொருட்களான மேசை, கைப்பிடி, கதவு தாழ்ப்பாள்கள் போன்றவற்றை தினமும் மூன்று முறையாவது கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்த வேண்டும்.

- முகக்கவசம் மற்றும் கையுறை ஆகியவற்றை கழற்றிய பின் கைகளை நன்கு சோப்பு உபயோகித்து கழுவ வேண்டும்.
- தனிமைப்படுத்தப்பட்டவருக்கு, காய்ச்சல், சளி, இருமல் மற்றும் மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடன் அருகில் உள்ள அரசு மருத்துவமனையை தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம்.

பரிசோதனை முறை மற்றும் பரிசோதனை மையங்கள்

- கொரோனா வைரஸ் அறிகுறிகள் தென்பட்டால், அரசு மருத்துவமனைகள்/ அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் / தனியார் ஆய்வகங்களுக்கு சென்று கொரோனா தொற்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.



- RT-PCR சோதனை மூலம் வாய், மூக்கு வழியாக தொண்டையில் சளி மாதிரிகள் எடுத்து கொரோனா வைரஸ் கிருமி தொற்று பரிசோதிக்க வேண்டும்.
- பரிசோதனை முடிவு ஓரிரு நாட்களில் தெரியவரும்
- தொற்று இல்லை என்றாலும் தொடர்ந்து தங்களை 7 நாட்களுக்கு தனிமைப்படுத்திக் கொண்டு நோய் அறிகுறிகள் தெறிகிறதா என்று கண்காணிக்க வேண்டும்.



- தொற்று இல்லை என்றால் தங்கள் பணிகளை தொடரலாம்.
- தொற்று அறிகுறிகள் கண்டறியப்பட்டால், உடனே அரசு மருத்துவமனையை அணுகவும்.

உங்களைத் தனிமைப்படுத்துதல் எங்கள் நோக்கம் அல்ல, மாறாக உங்கள் நலம் பேணுவதே எங்கள் நோக்கம்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான மனநல ஆலோசனை

- கொரோனா பாதித்த பெரும்பாலானவர்கள் குணமடைந்து நலமாக வீடு திரும்புகின்றனர்.
- மனதிற்கு பிடித்தமான புத்தகங்களை படியுங்கள், இதமான இசையைக் கேளுங்கள்.
- தியானம், யோகா, உடற்பயிற்சி, முழு ஓய்வு, இசைக்கருவிகள் மீட்டுதல் மன அழுத்தத்தை குறைக்கும்.
- இணையதளத்தில் மனதிற்கு அதிக அழுத்தம் தரும் எந்த தேடல்களையும் தவிருங்கள்.
- ஓவியம் மற்றும் கவிதை போன்ற ஆரோக்கியமான பொழுதுபோக்கில் ஈடுபடலாம்.
- நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் தொலைபேசி / செல்பேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.



மருத்துவமனையில்

- மருத்துவமனையில் வழங்கப்படும் மருந்து, மாத்திரை மற்றும் புரதசத்துமிக்க உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- மருத்துவர்களின் ஆலோசனைப்படி நடக்க வேண்டும்.

கொரோனா நோய் பரிசோதனை மையங்கள்

அரசு ஆய்வகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகங்கள்

அரியலூர்	
அரசு ஆய்வகம்	
1	மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை
செங்கல்பட்டு	
அரசு ஆய்வகம்	
1	செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகம்	
1	செட்டிநாடு மருத்துவமனை
2	கற்பக விநாயகா இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்ஸ், செங்கல்பட்டு

சென்னை	
அரசு ஆய்வகங்கள்	
1	கிங்ஸ் இன்ஸ்டிடியூட்
2	சென்னை மருத்துவக் கல்லூரி
3	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி
4	கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி
5	தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனம்
6	மாநில பொது மருத்துவ ஆய்வகம், தேனாம்பேட்டை
7	தேசிய தொற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம்

8	டாக்டர். எம். ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகம், கிண்டி
9	முதுகலை அடிப்படை மருத்துவ அறிவியலுக்கான கல்வி நிறுவனம்
10	அரசு மருத்துவக் கல்லூரி, ஓமந்தூரார் வளாகம்
11	மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், அடையார்
12	சி.டி. மருத்துவமனை
13	அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை, தாம்பரம்
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகங்கள்	
1	அப்போலோ மருத்துவமனை, சென்னை
2	நியுபெர்க் எர்லிச் லேப், இராயப்பேட்டை
3	ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி
4	ஒய் ஆர் ஜி கேர், தரமணி
5	ஹைடெக் சென்டர், 935, பூந்தமல்லி ஹைரோடு
6	மெடால் தனியார் ஆய்வகம், கிண்டி
7	மெட்ரோபாலிஸ் ஹெல்த் கேர், நுங்கம்பாக்கம்
8	டாக்டர் ரெலா நிறுவனம், குரோம்பேட்டை
9	மியாட் மருத்துவமனை, மணப்பாக்கம்
10	மெட்ராஸ் மெடிக்கல் மிஷன், முகப்பேர்
11	பிரிமியர் ஹெல்த் சென்டர், புரசைவாக்கம்
12	வி.ஆர்.ஆர். மருத்துவ ஆய்வகம், தி.நகர்
13	லைப்செல் இன்டர்நேஷனல், வண்டலூர்–கேளம்பாக்கம் பிரதான சாலை
14	சுந்தரம் மெடிக்கல் பவுண்டேசன், அண்ணாநகர்
15	V.H.S. லேப் அண்டு சர்வீஸ், V.H.S. மருத்துவமனை, தரமணி
16	சென்ட்ரல் லேபரட்டரி, ஸ்ரீ பாலாஜி மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை
17	ஆர்த்தி ஸ்கேன்ஸ் மற்றும் லேப், வடபழனி
18	ஆண்டர்சன் டயாக்னோஸ்டிக்ஸ் மற்றும் லேப்ஸ்
19	பாலாஜி மெடிக்கல் சென்டர்
20	பிரைம்ஜென் ஹெல்த்கேர் லேபாரட்டரி பிரைவேட் லிமிடெட், நங்கநல்லூர்
21	சூர்யா டயாக்னோஸ்டிக்ஸ், பிராட்வே மெயின் ரோடு
கோயம்புத்தூர்	
அரசு ஆய்வகங்கள்	
1	கோவை அரசு மருத்துவக் கல்லூரி
2	அரசு இ.எஸ்.ஐ.மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகங்கள்	
1	மைக்ரோ பயாலஜி லேப், வீர கேரளம் சாலை
2	பி.எஸ்.ஜி. மருத்துவமனை, பீளமேடு
3	கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை
4	பையோலைன் ஆய்வகம்
5	ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை
6	ஆர்பிட்டோ ஆசியா நோய் ஆய்வகம், புளியங்குளம்
7	கிரிஸ்னா டயாக்னோஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட்
கடலூர்	
அரசு ஆய்வகம்	
1	இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, சிதம்பரம்
தருமபுரி	
அரசு ஆய்வகம்	
1	தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி
திண்டுக்கல்	
அரசு ஆய்வகங்கள்	
1	தேனி அரசு மருத்துவக் கல்லூரி

2	மதுரை அரசு மருத்துவக் கல்லூரி
3	கரூர் அரசு மருத்துவக் கல்லூரி
4	திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனை
ஈரோடு	
அரசு ஆய்வகம்	
1	பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி
கள்ளக்குறிச்சி	
அரசு ஆய்வகம்	
1	கள்ளக்குறிச்சி அரசு பொது மருத்துவமனை
காஞ்சிபுரம்	
அரசு ஆய்வகம்	
1	அரசு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகம்	
1	நியூமெட் லேப்
கன்னியாகுமரி	
அரசு ஆய்வகம்	
1	கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி, நாகர்கோவில்
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகம்	
1	விவேக் லேபாரட்டரிஸ்
கரூர்	
அரசு ஆய்வகம்	
1	கரூர் அரசு மருத்துவக் கல்லூரி
கிருஷ்ணகிரி	
அரசு ஆய்வகம்	
1	வெக்டார் நிறுவனம், ஒசூர்
மதுரை	
அரசு ஆய்வகம்	
1	மதுரை அரசு மருத்துவக் கல்லூரி

அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகங்கள்	
1	மீனாட்சி மிஷன் மருத்துவமனை
2	அப்போலோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை
3	வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை & RI
நாகப்பட்டினம்	
அரசு ஆய்வகம்	
1	திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி
2	அரசு மருத்துவக் கலுலுரி, நாகப்பட்டினம்
நாமக்கல்	
அரசு ஆய்வகம்	
1	நாமக்கல் மாவட்ட தலைமை மருத்துவமனை
பெரம்பலூர்	
அரசு ஆய்வகம்	
1	பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனை
புதுக்கோட்டை	
அரசு ஆய்வகம்	
1	புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி
இராமநாதபுரம்	
அரசு ஆய்வகம்	
1	இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனை
இராணிப்பேட்டை	
அரசு ஆய்வகம்	
1	வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி
சேலம்	
அரசு ஆய்வகம்	
1	குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி

சிவகங்கை	
அரசு ஆய்வகம்	
1	சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி
தென்காசி	
அரசு ஆய்வகம்	
1	திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி
தஞ்சாவூர்	
அரசு ஆய்வகம்	
1	தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி
தேனி	
அரசு ஆய்வகம்	
1	தேனி அரசு மருத்துவக் கல்லூரி
நீலகிரி	
அரசு ஆய்வகம்	
1	பாஸ்டர் கல்வி நிறுவனம், குன்னூர்
திருச்சிராப்பள்ளி	
அரசு ஆய்வகம்	
1	கி.ஆ.பெ.விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகம்	
1	டாக்டர் டைகோனோஸ்டிக் சென்டர், புத்தூர் சாலை
திருநெல்வேலி	
அரசு ஆய்வகம்	
1	திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகம்	
1	ஆர்த்தி ஸ்கேன்ஸ் மற்றும் லேப், வண்ணார்பேட்டை
திருப்பத்தூர்	
அரசு ஆய்வகம்	
1	வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி
திருப்பூர்	
அரசு ஆய்வகம்	
1	திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனை
திருவள்ளூர்	
அரசு ஆய்வகம்	
1	திருவள்ளூர் மாவட்ட தலைமை மருத்துவமனை
திருவாரூர்	
அரசு ஆய்வகம்	
1	திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி
திருவண்ணாமலை	
அரசு ஆய்வகம்	
1	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
தூத்துக்குடி	
அரசு ஆய்வகம்	
1	தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி
வேலூர்	
அரசு ஆய்வகம்	
1	வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி
அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆய்வகம்	
1	சி.எம்.சி. மருத்துவமனை
விழுப்புரம்	
அரசு ஆய்வகம்	
1	விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி
விருதுநகர்	
அரசு ஆய்வகம்	
1	விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி

களம் எங்களுக்கு,
கவலை ஏன் உங்களுக்கு...
கட்டுப்படுவோம் – கட்டுப்படுத்துவோம்

கொரோனா நோய் குறித்த தவறான தகவல்கள்

தகவல் (Myth)	சரி/தவறு
• வெப்பமான வானிலை கொரோனா நோய் பரவலைத் தடுக்கிறது.	✗
• சுடு நீர் குளியல் கொரோனா நோய் வராமல் தடுக்கும்.	✗
• 10 வினாடிகளுக்கு மூச்சை அடக்கினால் கொரோனா நோய் பாதிப்பு உள்ளதா இல்லையா என அறியலாம்.	✗
• பூண்டை உண்ணுதல் கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும்.	✗
• ‘முடி உலர்த்தி’ மற்றும் ‘புறஊதா விளக்கு’ போன்றவை கொரோனா வைரஸை கொல்லும்.	✗
• நிமோனியா நோய்க்கான தடுப்பூசி கொண்டு கொரோனா வைரஸை தடுக்க இயலும்.	✗
• ‘தெர்மல் ஸ்கேனர்’ மூலம் கொரோனா வைரஸை கண்டு பிடிக்க இயலும்.	✗
• கொரோனா வைரஸால் வயதானோர் மட்டுமே பாதிக்கப்படுவர்.	✗ கொரோனா வைரஸ் அனைத்து வயதினரையும் தாக்கும்.

கட்டணமில்லா தொலைப்பேசி எண்
1800 120 555550

கைப்பேசி எண்
94443 40496
87544 48477

தொலைப்பேசி எண்
044–2951 0400
044–2951 0500
044–2430 0300
044–4627 4446

24

அவசர உதவி தொலைப்பேசி எண்
104

ஆரோக்கிய சேது செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துங்கள்

தமிழக அரசின் stopcoronatn.in எனும் இணையதளத்திலும் தகவல்களை பதிவு செய்து தொடர் சேவையை பெறலாம்.

எங்களை அழையுங்கள் உதவ காத்திருக்கிறோம்!

திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.385.63 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்,
திருவள்ளூர் மாவட்டத்தில், புதியதாக கட்டப்படவுள்ள
அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்கள் – 19.05.2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம், பெரும்பாக்கம், மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 385 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி வருகிறது. அந்த வகையில், கடந்த மூன்று ஆண்டுகளில் 2017–2018ஆம் கல்வியாண்டில் புதுக்கோட்டையில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், 2019–2020ஆம் கல்வியாண்டில் கரூரில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் கரூர் அரசு மருத்துவக் கல்லூரியும் தொடங்கப்பட்டன. ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செயல்பட்டு வந்த ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரியானது 2019–2020ஆம் கல்வி ஆண்டு

முதல் அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசின் நிதியுதவியுடன், கடந்த 2019ஆம் ஆண்டில், இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நீலகிரி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்க மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று சரித்திர சாதனையை படைத்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பெரும்பாக்கத்தில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 8.68.22 ஹெக்டேர் நிலப்பரப்பில் 150 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கையுடன் புதிய திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி அமைய உள்ளது. இம்மருத்துவக் கல்லூரி நிறுவிட மத்திய அரசு 60 விழுக்காடு பங்களிப்பாக 195 கோடி ரூபாய் நிதியை வழங்கும், எஞ்சிய 190 கோடியே 63 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு அரசு வழங்கும். இப்புதிய அரசு மருத்துவக் கல்லூரி நிறுவிட 385 கோடியே 63 இலட்சம் ரூபாய் அனுமதித்து நிருவாக ஒப்புதலையும், முதல்கட்டமாக 70 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்தும் 18.12.2019 அன்று தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் 143 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மருத்துவமனைக் கட்டடங்கள் 165 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், குடியிருப்பு மற்றும் விடுதிக் கட்டடங்கள் போன்றவை 77 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

சித்தரத்தை

சித்தரத்தை என்ற அழகான பெயரை கொண்ட இந்த தாவரம், இஞ்சி குடும்பத்தை சேர்ந்தது. இது குறுஞ்செடியாக வளரும். இலைகள் நீண்டு காணப்படும். இதில் மருத்துவ குணங்கள் நிறைந்து இருக்கின்றன. சித்தரத்தை குறுஞ்செடிகளை எளிதில் வீடுகளில் தொட்டிகளிலேயே வளர்க்கலாம். செடியில் நறுமணம் வீசும். அரத்தையில் சித்தரத்தை, பேரரத்தை என இரண்டு இரகங்கள் உண்டு. இரண்டும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்றாலும் சித்தரத்தையில் மருத்துவ குணம் அதிகம். இது சிறந்த வலி நிவாரணியாகவும் செயல்படும்.

சித்தரத்தையின் பயன்கள் :

- கீழ் முதுகுத்தண்டின் பகுதியில் வலிக்கும் இடத்தில் சித்தரத்தை விழுதினையும், சிறிது இஞ்சிச்சாறும் விட்டு அடுப்பில் சூடாக்கி பற்றுபோட வலி குறைவதை அறியலாம்.
- எலும்புகள் பலம் பெற இந்த சித்தரத்தைப் பொடியை தேனில் குழைத்து சாப்பிட்டு வர எலும்புகள் வலுவடையும்.
- ஆஸ்துமாவை குணப்படுத்த சித்தரத்தையை வறுத்து அரைத்து அந்த பொடியைச் சாப்பிட்டு வர பாதிப்புகள் விரைவில் நீங்கிவிடும்.
- தீராத தலைவலி, காய்ச்சல், இருமல் போன்றவற்றை குணப்படுத்த சித்தரத்தையை சாப்பிட வேண்டும்.
- தொண்டையில் வலி, எரிச்சல், புண் ஏதேனும் வந்தால் தினம்தோறும் ஒரு துண்டு சித்தரத்தையை வாயில் போட்டு சுவைத்து வந்தால் இவை விரைவில் குணமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோஹித்** அவர்களை 02.06.2020 அன்று ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்கள்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.330.96 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகள் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 28.05.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் தேனி மாவட்டம், பழனிசெட்டிப்பட்டி பேரூராட்சியில் முடிவுற்ற பாதாள சாக்கடைத் திட்டத்தை காணொலிக்காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை, அரியலூர், தஞ்சாவூர், ஈரோடு, தேனி, கடலூர், திண்டுக்கல், சிவகங்கை, மதுரை, நாகப்பட்டினம், திருவாரூர், தருமபுரி, இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் முடிவுற்ற திட்டப் பணிகளையும் திறந்து வைத்தார்கள்.

தொழில் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.235 கோடி மதிப்பீட்டில் டைடல் தொழில்நுட்பப் பூங்கா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக்காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 01.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், பட்டாபிராமில் 235 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

இப்புதிய டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்காவானது 10 ஏக்கர் நிலப்பரப்பில், 5.57 இலட்சம் சதுரஅடி கட்டட பரப்பளவில், 21 அடுக்குமாடிக் கட்டடமாக அமையவுள்ளது. இப்பூங்கா நவீன வசதிகளுடன் கூடிய அலுவலகங்கள், தொழில் மையங்கள், பொது கட்டமைப்புகள், ஆகாயப் பூங்கா என பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

தென் சென்னையில் டைடல் பூங்கா உருவாக்கிய வளர்ச்சியைப் போலவே, சென்னையின் வடக்குப் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அடித்தளமாக இத்திட்டம் அமையும். இதனைச் சுற்றி பல தொழில் நிறுவனங்கள் உருவாவதை ஊக்குவித்து, சுமார் 25,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இத்திட்டம் 24 மாதங்களில் முடிக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வரவுள்ளது.

கொரோனா தொற்றால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் "கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்" (CORUS) என்ற திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.03.2020 அன்று அறிவித்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு அவரவர் இருப்பிடத்திலிருந்தே நேரடி தொடர்பின்றி இணையதளம் மூலம் விரைவாக 25 இலட்சம் ரூபாய் வரை தமிழ்நாடு அரசின்

6% வட்டி மானியத்துடன் பிணை சொத்தின்றி கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மிகுந்த வரவேற்பை பெற்று, இன்று வரை 855 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு மொத்தம் 112 கோடி ரூபாய் கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 5 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் கடன் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

துளசி மூலிகைச் செடியாகும். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. ஏறத்தாழ 50 சென்டிமீட்டர் வரை வளரக்கூடிய இச்செடியில் அனைத்துப் பாகங்களும் மருத்துவ குணம் கொண்டவை. வடிகால் வசதியுள்ள குறுமண் மற்றும் செம்மண், வண்டல்மண், களி கலந்த மணற்பாங்கான நிலம் தேவை. கற்பூர மணம் பொருந்திய இலைகளையும் கதிராக வளர்ந்த பூங்கொத்துக்களையும் உடைய சிறு செடி. தமிழகமெங்கும் தானே வளர்கின்றது. துளசியின் தாயகம் இந்தியா. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுக்கும் பரவியுள்ளது. துளசியை விதை மற்றும் இளம் தண்டுக் குச்சிகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யலாம். இலைகளில் மிக மிகப் புனிதமானது என்று போற்றப்படும் துளசியில் கரியமால் துளசி, கருந்துளசி, கற்பூரத்துளசி, செந்துளசி, காட்டுத்துளசி, சிவத்துளசி, நீலத்துளசி, பெருந்துளசி, நாய்த்துளசி என ஒன்பது வகைகள் உள்ளன. இந்த ஒன்பதுமே மருத்துவத்திலும் ஆன்மிகத்திலும் முக்கியத்துவம் கொண்டவை. இது தொற்றுக்கள் வராமல் பாதுகாக்கிறது துளசியில் உள்ள ஆன்டி ஆக்ஸ்சிடன்ட் தன்மை உடலில் தீங்கு விளைவிக்கும் கூறுகளை விரட்டி, செல்கள் சேதமடைவதை தடுக்கிறது.

துளசியின் பயன்கள் :

- துளசி இலையை தினசரி சாப்பிட்டு வந்தால் நோயெதிர்ப்பு சக்தி அதிகமாக்கி, கிருமிகளை அழிக்கிறது.
- இதய ஆரோக்கியத்திற்கு உகந்தது என்று அறியப்படுகிறது. துளசிக்கு அழற்சியை குறைக்கும் தன்மை உண்டு .
- துளசியில் இருக்கும் கிருமிகளை எதிர்க்கும் தன்மை, சளியை குணப்படுத்தும்.
- துளசியை ஒரு கைப்பிடி எடுத்து, நன்றாக கழுவி, நீரில் போட்டு கொதிக்க வைத்து, இந்த நீரை தொடர்ந்து அருந்துவதும் அல்லது கொப்பளிப்பதும் சளி மற்றும் கபம் குறைய நல்ல தீர்வாகும்.
- காலையில் வெறும் வயிற்றில் துளசி நீரை பருகுவது செரிமானத்தை மேம்படுத்த சிறந்த வழியாகும் .
- உடலில் pH அளவை பராமரிக்க உதவுகிறது மற்றும் உடலின் அமிலத் தன்மையை சமச்சீராக வைக்க உதவுகிறது.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்ற மரவள்ளி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – நாள் 29.05.2020

வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்தி, மகசூல் இழப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு வழிகளில் உதவி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, தற்போது, நாமக்கல், சேலம், ஈரோடு, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டதற்க்கு பயிர்ப் பாதுகாப்புப் பணிகளுக்காக 54 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நான் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக ஒரு இலட்சம் எக்டர் பரப்பளவில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளியில், புதிய இன மாவுப்பூச்சியின் தாக்குதல் கண்டறியப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க நாடுகளில் அதிக பாதிப்பினை ஏற்படுத்திய இப்பூச்சியானது, நடவுக் குச்சிகள் வாயிலாக பரவி வருகிறது. தற்போது நிலவி வரும் அதிக வெப்ப நிலையின் காரணமாக மாவுப்பூச்சியின் தாக்கம் அதிகமாக தென்படுகிறது. இதன் தாக்குதல் விபரம் தெரிந்தவுடனேயே, பாதிக்கப்பட்ட வயல்களுக்கு சென்று இம்மாவுப்பூச்சியின் தாக்குதலைக் கணித்து, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தோட்டக்கலை துறை அலுவலர்களுக்கும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகளுக்கும் நான் உத்தரவிட்டேன்.

எனது உத்தரவின் பேரில், தோட்டக்கலை விரிவாக்கப் பணியாளர்கள் 27.05.2020 அன்று வரை மேற்கொண்ட கள ஆய்வுகளின்படி, நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 3,112 எக்டர் பரப்பளவில் மரவள்ளி பயிரில் இம்மாவுப் பூச்சியின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

இப்பூச்சி, மரவள்ளிப் பயிரின் அனைத்து பகுதிகளிலிருந்தும் சாற்றை உறிஞ்சுவதால், நுனிக்குருத்துக்கள் உருமாறி, வளர்ச்சி குன்றிவிடும். மேலும், நுனியிலுள்ள இலைகள் ஒன்றாக இணைந்து முடிக்கொத்தாக தோற்றமளிக்கும். இதனால், கிழங்கு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும்.

இப்பாதிப்பினைக் குறைப்பதற்கு, கீழ்க்காணும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை பின்பற்ற மரவள்ளி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என நான் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

- ❖ பாதிப்பைக் குறைப்பதற்கு, போதிய அளவு நீர் பாய்ச்ச வேண்டும்.
- ❖ தாக்குதலானது மரவள்ளி பயிரின் நுனிக்குருத்து பகுதியில் அதிகமாக இருப்பதால் நுனிக்குருத்தை பறித்து எரித்து பூச்சிகளை பெருவாரியாக கட்டுப்படுத்த வேண்டும்.
- ❖ பிற மாவட்டம் அல்லது மாநிலத்திலிருந்து நடவுப் பொருட்களை வாங்கி வந்தால், நடவின்போது,

குளோர்பைரிபாஸ் மருந்து கரைசலில் 10 நிமிடம் நடவுக் கரணைகளை நனைத்து நடவு செய்ய வேண்டும்.

- ஒரே மருந்தினையோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மருந்துகளின் கரைசல்களையோ தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது.
- பாதிக்கப்பட்ட செடிகளிலிருந்து நடவுப் பொருட்களை தேர்வு செய்யக் கூடாது.

மேற்கண்ட ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளுக்கு நேரடியாகவும், செய்தி வாயிலாகவும், கிராம அளவிலான விழிப்புணர்வு முகாம்கள் மூலமாகவும் தொடர்ந்து எடுத்துரைக்க வேண்டும் எனவும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், மரவள்ளியில் மாவுப்பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்காக, நடவு முடிந்த இரண்டாவது மாதத்தில் அசாடிராக்டின் மருந்தினையும், இரண்டாம் முறையாக, புரோபினோபாஸ் அல்லது தயோமீதாக்சேம் மருந்தினையும் தெளிப்பதற்காக, எக்டருக்கு 1,750 ரூபாய் வீதம் 3,112 எக்டரில் பயிர்ப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள 54 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் நிதியினை வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

SC/ST பிரிவைச் சேர்ந்தவர்கள் "தாட்கோ" மூலம் கடனுதவி பெற்று சுயமாக தொழில் தொடங்கும் வழிமுறைகள்

ரூபாய் 7,50,000 வரை 30% மானியத்துடன் கூடிய தனிநபருக்கான கடனுதவி அளிக்கப்படுகிறது. எந்த தொழிலுக்கும் விண்ணப்பிக்கலாம். தற்போது காகிதம் மூலம் விண்ணப்பிக்கும் முறை இல்லை. இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டியுள்ளதால், பெரும்பான்மையான SC/ST பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இச்செய்தி போய் சேரவில்லை. மேலும், விண்ணப்பிக்கும் வழிமுறை தெரியவில்லை என்பதாலும் தகுதியுடைய பலர் விண்ணப்பிக்காமல் விட்டுவிடுகின்றனர்.

விண்ணப்பிக்கும் வழிமுறைகள் மற்றும் தேவையான ஆவணங்கள் :

1. குடும்ப அட்டை
2. வாக்காளர் அட்டை
3. ஆதார் அட்டை
4. ஒரு புகைப்படம்
5. சாதி சான்றிதழ்
6. வருமான சான்றிதழ் (குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்)
7. கல்வி சான்றிதழ்
8. ஓட்டுநர் உரிமம், வில்லை (பேட்ஜ்) அவசியம் (இது வாகன கடனுக்கு மட்டும் தேவை)
9. திட்ட மதிப்பீடு
10. திட்ட அறிக்கை

விண்ணப்பத்தில் கேட்கப்பட்டவற்றை பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

எனவே, தகுதியுள்ள அனைத்து SC/ST பிரிவினரும் விண்ணப்பித்து பலன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி : ***http://application.tahdco.com/***

சென்னை மாநகரில், கொரோனா வைரஸ் தடுப்புப் பணிக்காக, கிருமி நாசினி தெளித்திட 25 இருசக்கர வாகனங்களின் சேவை துவக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள் – 03.06.2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 03.06.2020 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிக்காக சென்னை மாநகரில் கிருமி நாசினி தெளித்திட 25 இருசக்கர வாகனங்களின் சேவைகளை துவக்கி வைக்கும் அடையாளமாக 9 இருசக்கர வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை வீரர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக தமிழகமெங்கும் கிருமி நாசினி தெளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சென்னை மாநகரில் மருத்துவமனைகள், மார்க்கெட் பகுதிகள், பேருந்து நிலையங்கள் என சுமார் 45,000 இடங்களில் கிருமிநாசினி தெளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக வான்நோக்கி உயரும் ஏணி ஊர்திகள் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், சென்னை மாநகரில் உள்ள குறுகிய சாலைகளில் பெரிய வாகனங்கள் செல்ல இயலாத நிலை உள்ளதால், அச்சாலைகளில் கிருமி நாசினி தெளிக்கும் வகையில் மாநில பேரிடர் மீட்பு நிதியிலிருந்து 1 கோடியே 36 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 25 இருசக்கர வாகனங்கள் மற்றும் தெளிப்பான்கள் வாங்கப்பட்டன.

இந்த இருசக்கர வாகனங்களில் காற்றழுத்த கிருமி நாசினி தெளிப்பான் பொருத்தப்பட்டுள்ளதால், ஒரு மணிநேரத்தில் 1,620 லிட்டர் கிருமி நாசினியை தெளிக்க இயலும். சென்னையில் கொரோனா வைரஸ் பாதித்த கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) இவ்வாகனங்கள் பயன்படுத்தப்படும். கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள் முடிவுற்ற பிறகு, இவ்வாகனங்கள் சென்னையின் குறுகிய சாலைகளில் ஏற்படும் தீயினை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும்.

வீண் விவாதங்களை தவிர்ப்போம்

நான் சொல்வதுதான் சரி. இல்லையில்லை நான் சொல்வதுதான் சரி என்று இப்படி ஏதாவது தமக்கு சம்பந்தம் இருக்கிறதோ, இல்லையோ, ஏதாவது செயலை பற்றி ஓயாமல் விவாதம் செய்து கொண்டு பொழுதையும் வீணடித்து, வம்பையும் விலைக்கு வாங்கி வருவோர் பலர் நம்மிடையே இருந்து கொண்டு இருக்கிறார்கள்.

இரயில் பயணங்களிலும், வேறு பல பொது இடங்களிலும் பலர் இந்த வீண் விவாதத்தில் ஈடுபட்டு கசப்பான விளைவுகளைச் சந்திக்கின்றனர்.

சில நேரங்களில் தீவிரமாக விவாதம் செய்து, பேச்சு முற்றிப்போய் கடைசியில் அடிதடியில் போய், ஏன் கொலையிலே முடிவதை கூட நாம் செய்தித் தாள்களில் பார்க்கின்றோம்.

இந்த விவாதப் பேய் உங்களை உணர்ச்சி வசப்பட வைத்து சிந்தனை செய்து முடிவு எடுக்கும் திறனை மழுங்கடித்து, தகாத விளைவுகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

இதனால்தான் பல பொது இடங்களில், ‘இங்கு அரசியல் பேசாதீர்கள்’ என்று எழுதி வைத்து இருப்பதை பார்த்து இருக்கின்றோம்.

ஒருவர் தன் மனதில் ஒரு தீர்மானமான நிலைப்பாட்டை கொண்டவராக இருந்தால் அதனை எப்பாடுபட்டாவது நிலை நிறுத்தத் தான் பார்ப்பார். எவ்வளவு செய்திகளையும், காரணங்களையும் முன் வைத்து மணிக்கணக்காக விவாதம் செய்தாலும், அவர் தன் நிலையில் இருந்து மாற மாட்டார்கள்.

கடைசியில் கசப்பு உணர்வுதான் மிஞ்சும். பின் ஏன் இந்த வீண் விவாதம்? இதில் உளவியல் சார்ந்த உண்மை ஒன்றும் உள்ளது.

ஒருவர் தன் மனத்தளவில் கொண்டுள்ள விவாதத்தினுள் தன்னையே (தற்குறிப்பேற்றி) உருவகப்படுத்திக் கொள்கிறார்.

அதனால், அந்த விவாதத்தில் அவருடைய நிலையை யாராவது எதிர்த்து வாதாடினால், அவர் தன்னையே எதிர்ப்பதாக எண்ணி உணர்ச்சி வசப்படுவார்.

அதில் அவருடைய ஈகோ உணர்ச்சிகள் எழுச்சி உருவதால், சம நோக்கில் எந்த விதமான விவாதங்களையும் மனதில் வாங்கி சீர் தூக்கும் மன நிலையை இழந்து விடுவார்.

ஆகையால்தான், வாதப் பிரதிவாதங்களை தவிருங்கள் என்ற அறிவுரையை நமக்கு போதித்து இருக்கிறார்கள்.

“விவாதத்தில் வென்றாரே தோற்றார், ஏனெனில் அதில் விஞ்சிய மனக் கசப்பைக் காண்” என்கிறார் ஒரு மனோதத்துவ அறிஞர்.

சில நேரங்களில் மற்றவர்களுடன் ஏதாவது பொருள் பறறிய விவாதங்கள் செய்ய வேண்டிய சூழ்நிலை அமைந்தால் அது ஆக்கப்பூர்வமான வாதமாக இருத்தல் வேண்டும்.

மேலும், அந்த விவாதம், எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றி இருக்க வேண்டும் அல்லாமல், அதில் ஈடுபடும் தனி நபர் பற்றியதாக இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்..

நம் குடும்பத்திலோ, அல்லது நண்பர்களுடனோ ஒரு சாதாரண உரையாடல், பேச்சு தடித்ததனால் கடும் விவாதமாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டால், அதில் ஒருவர் சிறிது நேரம் அந்த இடத்தை விட்டு வெளி வருவது நலம்.

அல்லது ஏதாவது நகைச்சுவையைச் சொல்லி அங்கு தோன்றும் இறுக்கமான சூழ்நிலையை திசை திருப்பி மனங்கள் முறுக்கிக் கொண்டு நிற்பதை தவிர்க்க முயல வேண்டும்.

நெருங்கிய உறவுக்குள் ஏற்படும் விவாதங்களை சரியான அணுகு முறையால் முடிவுக்கு கொண்டு வரவில்லையெனில், சில நேரங்களில் உறவுகள் நாளடைவில் முறிந்து விட ஏதுவாகும்.

சில சமயம் உடல் நிலை, மன அழுற்சி, வெளியே கொண்ட கோபம் போன்ற காரணங்களால் பேச்சு தடிக்கும்.

அப்போது சரியான காரணத்தை உணர்ந்து மற்றவர் தணிந்து போக வேண்டும்..

ஆம்.. நண்பர்களே...

ஒன்றுக்குமே பயன்படாத விவாதங்களைத் தவிருங்கள். தவிர்க்க இயலாவிட்டால், மற்றவருக்கு இடம் கொடுத்து அவருடைய விவாதத்தையும் தடுக்காமல் கேட்டு, பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள்.

முக்கியமாக, நம் கருத்தை அது எவ்வளவுதான் உண்மை மற்றும் பொருள் செறிந்ததாக இருந்தாலும், ஏனையோர் முழு மனத்துடன் (முழுவதையும்) எற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்.

ஏனெனில் அது இயற்கைக்கு எதிரான நிகழ்ச்சி! அவரவர்க்கு தான் சொல்வதுதான் பெரிது.

அவரவர் வழியே சிறிது சென்றுதான் அவர்களை நம் வழிக்கு திருப்ப முயற்சிக்க வேண்டும். நாம் நினைப்பது போல் இவ்வுலகம் சுழல்வது இல்லை.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், மேலும் சில தளர்வுகளுடன் ஊரடங்கு உத்தரவு 30.06.2020 நள்ளிரவு 12 மணிவரை நீட்டிப்பு செய்யப்படுகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை –31.05.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா நோய்த் தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாத்து, அவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கி முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனால் தமிழ்நாட்டில் சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்புவோர் சதவீதம் நாட்டிலேயே அதிகமாகவும், நோய்த் தொற்றினால் ஏற்படும் உயிரிழப்பு மிகக் குறைவாகவும் இருந்து வருகிறது. அதே நேரத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்து பொருளாதாரத்தை மேம்படுத்த அவ்வப்போது பல்வேறு தளர்வுகளை வழங்கி வருவதுடன், சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிய முதலீடுகளை ஈர்த்தும், ஊரகத் தொழில்களை மீட்டெடுத்தும் தொழில் வளத்தைப் பெருக்க புதிய திட்டங்களை செயல்படுத்தியும் வருகின்றது.

மத்திய அரசு, இந்தியா முழுவதும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு 25.03.2020 முதல் அமல்படுத்தியதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசும் தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கை அமல்படுத்தியது. இதைத் தொடர்ந்து, கொரோனா தொற்றின் நிலைமையை கருத்தில் கொண்டும், மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், சில தளர்வுகளுடன் 31.05.2020 வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. அதே சமயம், ஏழை மக்கள் ஊரடங்கால் எதிர்கொண்டுள்ள சிரமங்களை களைய ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கான ரேசன் பொருட்கள் அனைத்தும், 2.01 கோடி குடும்பங்களுக்கும் விலையில்லாமல் வழங்க உத்தரவிட்டுள்ளதுடன், கட்டடத் தொழிலாளர்கள், அமைப்புசாரா ஓட்டுநர்கள் ஆகியோருக்கு அரிசி போன்ற பொருட்களை கூடுதலாக வழங்கியும், அனைத்து 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மற்றும் பல்வேறு துறையில் உள்ள பிற நல வாரிய தொழிலாளர்களை சேர்த்து 35.65 இலட்சம் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே தலா 1,000 ரூபாய் வழங்கியதைப் போல், மீண்டும் தலா 1,000 ரூபாய் வழங்க உத்தரவிட்டேன்.

பல்வேறு தினங்களில் நான் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையில், குறிப்பாக 29.05.2020 அன்று நடத்தப்பட்ட காணொலிக் காட்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், ஊரடங்கை படிப்படியாக விலக்கிக் கொள்ள பரிந்துரை செய்ய, 26.05.2020 அன்று நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையின் அடிப்படையிலும், 26.05.2020 மற்றும் 30.05.2020 அன்று மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலும், மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து, கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழும், மத்திய உள்துறை

அமைச்சகத்தின் அறிவிக்கையின் அடிப்படையிலும், தற்போதுள்ள ஊரடங்கு உத்தரவு 30.06.2020 நள்ளிரவு 12 மணி வரை ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், கீழ்கண்ட சில தளர்வுகளுடனும் நீட்டிப்பு செய்யப்படுகிறது.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கீழ்காணும் செயல்பாடுகளுக்கான தடைகள், மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்:–

- ★ வழிபாட்டுத் தலங்களில் பொதுமக்கள் வழிபாடு மற்றும் அனைத்து மதம் சார்ந்த கூட்டங்கள்.
- ★ நீலகிரி மாவட்டத்திற்கும், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு சுற்றுலாத் தலங்களுக்கும்,

வெளியூர் சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்படுகிறது.

- ★ தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், பிற விருந்தோம்பல் சேவைகள். எனினும், மருத்துவத் துறை, காவல் துறை, அரசு அலுவலர்கள், உள்ளிட்ட வெளி மாநிலத்தவர் மற்றும் தனிமைப்படுத்தப்படும் பணிகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.
- ★ வணிக வளாகங்கள் (Shopping Malls).
- ★ பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள். எனினும், இந்நிறுவனங்கள்

இணைய வழிக் கல்வி கற்றல் தொடர்வதுடன், அதனை ஊக்கப்படுத்தலாம்.

- ★ மத்திய உள் துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர சர்வதேச விமான போக்குவரத்திற்கான தடை நீடிக்கும்.
- ★ மெட்ரோ இரயில் / மின்சார இரயில்.
- ★ திரையரங்குகள், உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்கள், கேளிக்கைக் கூடங்கள், மதுக்கூடங்கள் (Bar), பெரிய அரங்குகள், கூட்ட அரங்குகள், கடற்கரை, சுற்றுலாத் தலங்கள், உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள் போன்ற பொது மக்கள் அதிகம் கூடும் இடங்கள்.
- ★ அனைத்து வகையான சமுதாய, அரசியல், விளையாட்டு,

பொழுதுபோக்கு, கலாச்சார நிகழ்வுகள், சமய, கல்வி, விழாக்கள், கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள்.

★ மாநிலங்களுக்கு இடையேயான பேருந்து போக்குவரத்து.

மேற்கண்ட கட்டுப்பாடுகள் தொற்றின் தன்மைக்கேற்றவாறு, படிப்படியாக தளர்வுகள் அளிக்கப்படும்.

இறுதி ஊர்வலங்கள் மற்றும் திருமண நிகழ்ச்சிகளுக்கான கட்டுப்பாடுகள்

- ★ இறுதி ஊர்வலங்கள் மற்றும் அதைச் சார்ந்த சடங்குகளில் 20 நபர்களுக்கு மேல் பங்கேற்கக் கூடாது.
- ★ திருமண நிகழ்ச்சிகளில் 50 நபர்களுக்கு மேல் பங்கேற்கக் கூடாது.

பொது பேருந்து போக்குவரத்து :

மாநிலத்தில் பொது பேருந்து போக்குவரத்தை 01.06.2020 முதல் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, மாநிலம் கீழ்கண்ட 8 மண்டலங்களாக பிரிக்கப்படுகிறது

மண்டலம்	மாவட்டங்கள்
I	கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கரூர், சேலம் மற்றும் நாமக்கல்
II	தருமபுரி, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரி
III	விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி
IV	நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை
V	திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம்
VI	தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி
VII	காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு
VIII	சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதி

- மண்டலம் VIIஇல் உள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் மண்டலம் VIIIஇல் உள்ள சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகள் தவிர்த்து, அனைத்து மண்டலங்களுக்குள், 50 விழுக்காடு பேருந்துகள் மட்டும் இயக்கப்படும்.
- **மண்டலம் VII மற்றும் மண்டலம் VIIIக்கு உட்பட்ட பகுதிகளில் பொது போக்குவரத்து பேருந்துகளின் இயக்கத்திற்கு தடை தொடர்கிறது.**

- ★ அங்கீகரிக்கப்பட்ட தடங்களில் தனியார் பேருந்துகளும் (Stage carriers) இயக்க அனுமதிக்கப்படுகிறது.
- ★ பேருந்துகளில் உள்ள மொத்த இருக்கைகளில், 60 விழுக்காடு இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படும்.
- ★ மண்டலத்திற்குள் பயணிக்கும் பயணிகளுக்கு இ–பாஸ் தேவையில்லை என்ற நிலையில், பொது போக்குவரத்து பேருந்துகளில் பயணிக்கவும் இ–பாஸ் அவசியமில்லை.
- ★ அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு தவிர, மண்டலங்களுக்கு இடையேயும், மாநிலங்களுக்கு இடையேயுமான பேருந்து போக்குவரத்து சேவைகளுக்கான தடை தொடர்கிறது.

★ அரசால் தனியாக வெளியிடப்பட உள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றி பொது போக்குவரத்திற்கான பேருந்துகள் இயக்கப்படும்.

இ–பாஸ் முறை :

★ அனைத்து வகையான வாகனங்களும் மேற்கண்ட அட்டவணையில் உள்ள மண்டலத்திற்குள் இயங்க அனுமதிக்கப்படுகிறது. அவைகளுக்கு இ–பாஸ் தேவையில்லை.

★ வெளி மாநிலங்களுக்கு சென்று வரவும், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரவும்,

மண்டலங்களுக்கிடையே சென்று வரவும், இ–பாஸ் முறைதொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

பெருநகர சென்னை காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நோய் கட்டுப்பாட்டு பகுதி தவிர மற்ற பகுதிகளில் (Except Containment Zones) கீழ்கண்ட பணிகளுக்கு மட்டும் 01.06.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது:

★ தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களில், அந்நிறுவாகமே ஏற்பாடு செய்யும் வாகனங்களில் 20 சதவீத பணியாளர்கள் அதிகபட்சம் 40 நபர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

★ அனைத்து தனியார் நிறுவனங்களும் 50 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. எனினும், இயன்ற வரை பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிவதை தனியார் நிறுவனங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

★ வணிக வளாகங்கள் (malls) தவிர்த்து, அனைத்து ஷோரூம்கள் மற்றும் பெரிய கடைகள் (நகை, ஜவுளி போன்றவை) 50 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்படலாம். மேலும், ஒரே நேரத்தில் அதிகபட்சம் 5 வாடிக்கையாளர்கள் மட்டும் கடைக்குள் வருவதை உறுதி செய்து, தகுந்த சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில், அனுமதிக்கப்பட வேண்டும். கடைகளில், குளிர் சாதன இயந்திரங்கள் இருப்பினும் அவை இயக்கப்படக் கூடாது.

★ மத்திய அரசு உத்தரவின்படி 08.06.2020 முதல் உணவகங்களில் அமர்ந்து உணவு அருந்த அனுமதி அளிக்கப்படுவதோடு, உணவகங்களில், சமூக இடைவெளியை கடைபிடிக்கும் நோக்கத்துடன், உணவகங்களில் உள்ள மொத்த இருக்கைகளில், 50 விழுக்காடு இருக்கைகளில் மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவு அருந்த அனுமதிக்கப்படுகிறது. எனினும், உணவகங்களில் குளிர் சாதன இயந்திரங்கள் இருப்பினும் அவை இயக்கப்படக் கூடாது.

★ டீ கடைகள், உணவு விடுதிகள் (07.06.2020 வரை – பார்சல் மட்டும்) மற்றும் காய்கறி கடைகள், மளிகைக் கடைகள் ஆகியவை காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை அனுமதிக்கப்படுகிறது.

★ மத்திய அரசு உத்தரவின்படி 08.06.2020 முதல் தேநீர்

கடைகளில் உள்ள மொத்த இருக்கையில் 50 விழுக்காடு அளவு மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உண்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

★ வாடகை மற்றும் டாக்ஸி வாகனங்களை, ஓட்டுநர் தவிர்த்து, மூன்று பயணிகளை மட்டுமே

கொண்டு, மண்டலத்திற்குள் TN e-pass இன்றி பயன்படுத்தலாம்.

★ ஆட்டோக்களில், ஓட்டுநர் தவிர்த்து, இரண்டு பயணிகள் மட்டுமே பயணிக்கலாம். சைக்கிள் ரிக்ஷா அனுமதிக்கப்படுகிறது.

★ முடிதிருத்தும் மற்றும் அழகு நிலையங்கள் குளிர்சாதன வசதியைப் பயன்படுத்தாமல் அரசு தனியாக வழங்கும் நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளை பின்பற்றி இயங்க அனுமதிக்கப்படுகிறது.

பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதி தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் (நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர மற்ற பகுதிகளில் - Except Containment Zones), கீழ்கண்ட பணிகளுக்கு மட்டும் 01.06.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது:

★ தொழில் நிறுவனங்கள் 100 விழுக்காடு பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

★ தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்கள் 100 விழுக்காடு பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், 20 விழுக்காடு பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிவதை ஊக்குவிக்க வேண்டும்.

★ அனைத்து தனியார் நிறுவனங்களும் 100 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. எனினும், இயன்ற வரை பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிவதை தனியார் நிறுவனங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

★ வணிக வளாகங்கள் (malls) தவிர்த்து, அனைத்து ஷோரூம்கள் மற்றும் பெரிய கடைகள் (நகை, ஜவுளி போன்றவை) 50 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்படலாம். மேலும், ஒரே நேரத்தில் அதிகபட்சம் 5 வாடிக்கையாளர்கள் மட்டும் கடைக்குள் இருக்கும் பொருட்டு தகுந்த சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில் அனுமதிக்கப்பட வேண்டும். இதுவன்றி, கடைகளில், குளிர் சாதன இயந்திரங்கள் இருப்பினும் அவை இயக்கப்படக் கூடாது.

★ டீ கடைகள், உணவு விடுதிகள் (07.06.2020 வரை – பார்சல் மட்டும்) மற்றும் காய்கறி கடைகள், மளிகைக் கடைகள் ஆகியவை காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை அனுமதிக்கப்படுகிறது. டாஸ்மாக் உள்ளிட்ட இதர கடைகள் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை இயங்கலாம்.

★ மத்திய அரசு உத்தரவின்படி 08.06.2020 முதல் உணவகங்களில் அமர்ந்து உணவு அருந்த அனுமதி அளிக்கப்படுவதோடு, உணவகங்களில், சமூக இடைவெளியை கடைபிடிக்கும் நோக்கத்துடன், உணவகங்களில் உள்ள மொத்த இருக்கைகளில், 50 விழுக்காடு இருக்கைகளில் மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவு அருந்த அனுமதிக்கப்படுகிறது. எனினும், உணவகங்களில் குளிர் சாதன இயந்திரங்கள் இருப்பினும் அவை இயக்கப்படக் கூடாது.

★ மத்திய அரசு உத்தரவின்படி 08.06.2020 முதல் தேநீர் கடைகளில் உள்ள மொத்த இருக்கையில் 50 விழுக்காடு அளவு மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உண்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

★ அத்தியாவசியமற்ற பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களையும், மின் வணிக நிறுவனங்கள் (E-Commerce) வழங்க அனுமதிக்கப்படுகிறது.

★ வாடகை மற்றும் டாக்ஸி வாகனங்கள் ஓட்டுநர் தவிர்த்து மூன்று பயணிகளுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

★ ஆட்டோக்கள் இரண்டு பயணிகளுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. சைக்கிள் ரிக்ஷாவும் அனுமதிக்கப்படுகிறது.

பொது

- **குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144இன் கீழ் பொது இடங்களில் ஐந்து நபர்களுக்கு மேல் கூடக் கூடாது என்ற நடைமுறை தொடர்ந்து அமலில் இருக்கும்.**
- **தமிழ்நாடு முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones தற்போதுள்ள நடைமுறைகளின் படி, எந்தவிதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.**
- அனைத்து, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்களது ஊழியர்கள் / பணியாளர்களை வீட்டிலிருந்தபடி பணிபுரிய ஊக்குவிப்பதோடு, தொழில் மற்றும் வணிக நிறுவனங்களில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

- பொதுமக்கள் இ–பாஸ் அனுமதியில்லாமல், தனியார் போக்குவரத்துக்கு அரசினால் அனுமதிக்கப்பட்டாலும், குடியிருப்போர் நலச் சங்கங்கள் மற்றும் கட்டட உரிமையாளர்கள், இந்நோய்த் தொற்றை தடுக்கும் வகையில் அவர்களது பகுதிக்குள் பிரவேசிப்பவர்கள் மீது, குறிப்பாக, வீட்டு வேலை செய்பவர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகள் போன்ற வெளி நபர்கள் உள்ளே பிரவேசிக்க தேவையான விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

சென்னை பெருநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் சிறப்பு நடவடிக்கைகள்

சென்னை பெருநகரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் நோய்த் தொற்றைத் தடுக்க நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு உள்ளன. குறிப்பாக, சென்னையில் 15 மண்டலங்களிலும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் தலைமையில் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நோய்த் தொற்று உள்ளவர்களுடன் தொடர்புள்ளவர்களைக் (Contact tracing) கண்டறியும் பணி மண்டல அளவில் மேற்கொள்ளப்படுவதுடன், நோய்த் தடுப்பு பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு, அப்பகுதியில் உள்ள ஏழைகளுக்கு முகக்கவசம், வைட்டமின் மாத்திரைகள், கபசுரக் குடிநீர், சத்தான உணவு போன்றவை வழங்கப்படுகிறது. அவர்களின் வாழ்விடம் நெருக்கமாக இருந்தால், அவர்கள் தனிமை முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர். நோய்த் தொற்று ஏற்பட்டவர்கள் விபரம் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு, தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர, சென்னையில் உள்ள 149 நகர ஆரம்ப சுகாதார மையங்களிலும், 19 மருத்துவமனைகளிலும் காய்ச்சல் சோதனை மையம் (Fever clinic) செயல்படுவதுடன், 100க்கும் மேற்பட்ட காய்ச்சல் சோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, நோய் அறிகுறி உள்ளவர்கள் தீவிரமாக கண்டறியப்பட்டு, சோதனை செய்யப்படுகின்றனர். இதனால் நோய்த் தொற்று முன்கூட்டியே கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதால், உயிரிழப்பு தவிர்க்க வழி வகுக்கும். இதே போன்ற நடவடிக்கைகள் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்புப் பணியில் தன்னலம் கருதாமல், அயராது களப்பணி ஆற்றிவரும் சுமார் 33,000 நிரந்தர மற்றும் தற்காலிக தூய்மைப் பணியாளர்களின் சேவையை நான் மனதார பாராட்டுகிறேன். அவர்களின் இந்த அரிய சேவையை அங்கீகரித்து ஊக்கப்படுத்தும் வகையில், பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் ஒவ்வொரு தூய்மைப் பணியாளருக்கும் சிறப்பினமாக 2,500 ரூபாய் மதிப்பூதியம் (Honorarium) வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியில், நோய்த் தொற்று தீவிரமாக உள்ள பகுதிகளில் (Hot spots / Containment Zones) உள்ள ஏழைகள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கும், கொரோனா நோய்த் தொற்றுடன் இரத்தக் கொதிப்பு, இதய நோய், சிறுநீரக செயலிழப்பு, புற்று நோய் போன்ற நோய் உள்ளவர்கள் (Co-morbid persons) இந்நோய்த் தொற்றினால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாக வாய்ப்புள்ளது. இப்பகுதியில் வாழும் ஏழைகளின் வாழ்விடங்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்க முடியாத நிலையில் அமைந்துள்ளன. எனவே, ஒரு முக்கிய நோய் பரவல் தடுப்புப் பணியாக சென்னை மாநகராட்சியில், குறிப்பாக நெரிசலான குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களை முன்னெச்சரிக்கையாக வீடுகள் தோறும் தீவிர ஆய்வு செய்து கண்டறிந்து, பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களை தனிமைப்படுத்தும் முகாம்களில் குறைந்தபட்சம் 7 நாட்களாவது தங்க வைத்து, அவர்களை நோய்த் தொற்றிலிருந்து காப்பாற்ற ஒரு முக்கிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகிறது. இதனால், சென்னை மாநகராட்சி பகுதிகளில் அவர்களது வாழ்விடத்தில் நோய்ப் பரவல் தடுக்கப்படும். அவ்வாறு முகாம்களில் தங்க வைக்கப்படும் போது, அவர்களது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, சென்னை மாநகராட்சியில் மட்டும் அவர்கள் முகாம்களில் இருந்து வீடு திரும்பும்போது தலா 1,000 ரூபாய் ரொக்க நிவாரணம் வழங்கப்படும்.

அரசு ஊரடங்கை அமல்படுத்தினாலும், பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தாலும், மக்களின் ஒத்துழைப்பு இல்லையென்றால், இந்த நோய் பரவலை தடுக்க இயலாது. பொதுமக்கள் வெளியில் செல்லும்போதும், பொது இடங்களிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும் அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கை கழுவுவதையும், வெளியிடங்களில் முகக்கவசத்தை அணிந்து செல்வதையும், சமூக இடைவெளியை தவறாமல் கடைபிடித்து அவசிய தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்து, அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கினால் தான், இந்த நோய்த் தொற்றை கட்டுப்படுத்த முடியும். எனவே, பொதுமக்கள் அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான முறையினை தேர்வு செய்து தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்யலாம்

தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987இல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு அரசு அவசர சட்டம் பிறப்பித்தது குறித்த செய்தி – 01.06.2020

தமிழ்நாட்டில் விவசாயிகள் தங்களுடைய வேளாண் விளைபொருட்களை எவ்வித சிரமமுமின்றி இலாபகரமான விலைக்கு விற்பனை செய்து பயனடைய ஏதுவாக மின்னணு சந்தை முறைக்கு அனுமதியளித்தமை, வணிகர்களின் சிரமத்தினைப் போக்க மாநில அளவிலான ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் வழங்கியமை மற்றும் ஒருமுனை விற்பனைக் கட்டணம் வசூலிப்பு உள்ளிட்ட வேளாண்மை விற்பனை சார்ந்த முன்னோடி சீர்திருத்தங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் பிப்ரவரி 2017 முதல் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது.

இதன் தொடர்ச்சியாக, விவசாயிகளின் நன்மையைக் கருத்திற்கொண்டு, தற்போது தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987இல் கூடுதல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள, ஓர் அவசர சட்டத்தை பிறப்பிக்க தமிழ்நாடு அரசு கருதியது.

இந்த அவசர சட்டம், வேளாண் விளைபொருட்களை விவசாயிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப,

- தமிழகத்தில் உள்ள எந்தவொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும்,
- அங்கீகரிக்கப்பட்ட தனியார் சந்தைகளிலும், அங்கீகரிக்கப்பட்ட கிடங்குகள் மற்றும் குளிர்பதன மையங்களிலும் விற்பனை செய்வதற்கும்,

- விவசாயிகள் விளைபொருட்களை தங்கள் பண்ணையிலோ அல்லது உணவுப் பூங்கா வளாகங்களிலோ அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதற்கும் வழிவகுக்கும்.

மேற்கண்ட பன்முகத்தன்மையிலான விற்பனை முறைகளில் தங்களுக்கு விருப்பமான எந்தவொரு விற்பனை முறையினையும் தேர்வு செய்து, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்யவும், அதன் மூலமாக தங்கள் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலையினைப் பெற்று பயனடையவும் இந்த அவசரச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், எந்தவொரு சூழ்நிலையிலும் விவசாயிகள் தங்கள் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்யும் பொழுது அவர்களிடமிருந்து விற்பனைக் கட்டணம் வசூலிக்கப்படக் கூடாது என்றும் இந்த அவசரச் சட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின் பேரில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பின்வரும் சீர்திருத்தங்களை உள்ளடக்கிய அவசரச் சட்டத்தினைப் பிறப்பித்துள்ளார்கள்:–

1. தமிழ்நாடு வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987இல் சீர்திருத்தங்களை கொண்டு வருதல்; மற்றும்
2. விற்பனைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தினை 29.05.2020–க்கு பின்னர், மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்தல்.

படமும்/ செய்தியும்

ரூ.57.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 27 பள்ளிக் கட்டடங்கள், 2 ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனக் கட்டடங்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கட்டடங்கள் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தருமபுரி, அரியலூர், கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாகப்பட்டினம், பெரம்பலூர், திருவண்ணாமலை, தேனி, திருவள்ளூர், திருவாரூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 27 பள்ளிக் கட்டடங்கள், 2 ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனக் கட்டடங்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

721 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 9,095 மகளிர்களுக்கு ரூ.5.25 கோடி சிறப்பு கடனுதவி

கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில் உலக சுகாதார நிறுவனம் இதனை உலகளாவிய நோய் தொற்றாக (Pandemic) அறிவித்தது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் கொரோனா நோய் தொற்றை தடுப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு 24.03.2020 முதல் பல்வேறு கட்டங்களாக தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகின்றது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பல்வேறு அறிவுரைகள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று நடவடிக்கையில், ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்கும் இச்சூழலில், ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டத்தில் கூட்டுறவு துறையின் சார்பில்; 1,146 நியாய விலைக் கடைகள் மூலம் 6,84,192 குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா வைரஸ் நோய்த் தொற்று நிவாரணத் தொகை தலா ரூ.1,000/– மற்றும் விலையில்லா அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அம்மா நடமாடும் காய்கறி அங்காடி, நடமாடும் ஏ.டி.எம். வாகனம் என பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் கொரோனா சிறப்புக் கடனுதவித் திட்டத்தின் கீழ், சிறப்பு கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. மகளிரின் நலன் கருதி அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், நபர் ஒருவருக்கு ரூ.5,000/– வீதம் குழுவிற்கு ரூ.1 இலட்சம் வரை 10.65 சதவீத குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. மேலும், இந்தத் திட்டத்தின் கீழ், கடனுதவி பெறும் மகளிர்கள் முதல் 6 மாதங்களுக்கு வட்டியும், மாதத் தவணையும் செலுத்தத் தேவையில்லை எனவும், மேலும் 6 மாதங்களுக்கு பிறகு குறைந்த வட்டித் தொகையும், மாதத் தவணைகளையும் செலுத்திட வேண்டும் என்கிற கட்டுப்பாடுகளுடன் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 721 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 9,095 மகளிருக்கு ரூ.5.25 கோடி மதிப்பில் சிறப்பு கடனுதவி மற்றும் நேரடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின், சிறப்பு கடனுதவி திட்டத்தின் கீழ், பயனடைந்த ஈரோடு மாவட்டம், பெரியசேமூர் பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு தலைவர் திருமதி வசந்தா க/பெ. பெ.ராஜேந்திரன் என்பவர் தெரிவித்ததாவது,

திருமதி வசந்தா

ஈரோடு மாவட்டம், பெரியசேமூர் பகுதியில் ஸ்ரீவசந்தம் மகளிர் சுய உதவிக்குழுவில் கடந்த 15 வருடங்களாக தலைவராக இருக்கின்றேன். எனது கணவர் பிரிண்டிங் பிரஸ் வைத்துள்ளார். எங்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். எங்களது மகளிர் சுய உதவி குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் பெறப்படும் கடனுதவியில் உறுப்பினர்களுக்கு தையல் இயந்திரம், டெக்ஸ்டைல், பிரிண்ட்டிங்ஸ், தறி, மாவு மில், பால் வியாபாரம் ஆகியவற்றிற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஊரடங்கு உத்தரவு காரணமாக தொடர்ந்து வியாபாரம் செய்வது சிரமமாக இருந்தது.

தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறு தொழில்களுக்கு தளர்வு அளித்துள்ளார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 6 மாதம் தளர்வுடன் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையானது எங்களது வியாபாரத்தில் முதலீடு செய்யப்பட்டு தற்பொழுது தொடர்ந்து வியாபாரம் செய்து வருகிறோம். இந்த ஊரடங்கு காலத்தில் பொருளாதாரத்தில் சிரமப்பட்டு வந்த எங்களை போன்ற ஏழை, எளிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பு கடனுதவி வழங்கி எங்களை வாழ வைத்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றிக் கடன்பட்டுள்ளோம் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின், சிறப்பு கடனுதவி திட்டத்தின் கீழ், பயனடைந்த ஈரோடு மாவட்டம், அக்ரஹாரம் வீதியில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு தலைவர் திருமதி எஸ்.பாத்திமா, க/பெ. ஏ.சாகுல்ஹமீது என்பவர் தெரிவித்ததாவது,

அந்திபூக்கள் மகளிர் சுய உதவிக் குழுவில் தலைவராக உள்ளேன். எங்கள் குழுவில் 12 உறுப்பினர்கள் உள்ளனர். எங்கள் மகளிர் சுய உதவிக் குழுவில் கடனுதவி பெற்று உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வடகம், ஊறுகாய் தயாரித்தல், துணி தைத்தல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம், ஜவுளி கடை ஆகியவை செயல்படுத்தி வருகிறோம். மேலும், எங்களை ஊக்குவிக்கும் வகையிலும், எங்களின் வாழ்வாதாரத்தை பெருக்கும் வகையிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.5,000/– வீதம் ஒரு குழுவிற்கு ரூ.1 இலட்சம் வரை 10.65 சதவீத குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்க உத்தரவிட்டார்கள்.

எங்கள் குழுவிற்கு சிறப்பு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இக்கடனுதவி மூலம் எங்களது தொழிலை மேலும் விரிவுபடுத்தி, எங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் ஏதுவாக இருக்கும்.

மேலும், 6 மாதம் வரை தங்களுக்கு கால அவகாசம் கொடுத்துள்ள அரசுக்கு நன்றி. 6 மாதங்களுக்குப் பிறகு முறையாக கடனுக்கான வட்டியையும், தவணைத் தொகையையும் திரும்ப செலுத்துவோம்.

திருமதி எஸ்.பாத்திமா


இத்தகைய சிறப்பு திட்டத்தினை வழங்கி எங்களைப் போன்ற ஏழை, எளியோர் வாழ்வில் ஒளியேற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது குழுவின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 01.06.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களின் நினைவுத் தூணினை திறந்து வைத்தார்கள்.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS